
எதிர் பார்த்த இரவு
இளங்கீரன்

# எதிர்பார்த்த இரவு

## இளங்கீரன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

நவபாரத் பதிப்பகம்
சென்னை—1.

# முகவுரை

இதயத்தை இருட்டறையாகக் கொ[illegible]டோர்; நெஞ்சிலே வஞ்சகத்தை வளரவிட்டு, அந்த வஞ்சகத்தை துர வாழ்வாகக் கொண்டோர், நாட்டின் செல்வத்திலே பெரும் பகுதியைத்திரங்களுக்குச் சொந்தமாக்கி வைத்துக் கொண்டு இல்லாதவர்களையை ஏழைகளையும் அடக்கி, ஒடுக்கி வாழ்வோர், உழைப்பாளரின் செ[illegible]ரன். உருவாகும் செல்வத்தைச் சுரண்டிச் செழிப்பான வாழ்வை அ[illegible]க் கொண்டு, அந்த வாழ்வின் சுகபோகங்களினால் சமுதாயத்தின் உச்சியில் உட்கார்ந்திருப்போர், தங்கள் சுயநல சுகபோக வாழ்க்கைக்கா[illegible] தகைய அநீதிகளையும், அக்கிரமங்களையும் செய்யத்துணிவு கொண்டோர் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் மக்களை ஏமாற்றிக் காசு கு[illegible]போர் இப்படிப்பட்ட சமுதாயக் கறையான்கள் நம்மிடையே அநேகருண்டு. இவர்கள் உலவும் இந்த நாட்டிலே—

மக்களின் நல்வாழ்வுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து தியாக வாழ்வை மேற்கொண்டு, அதனால் இன்னல் பல அடைந்து, வாழ்வைச் சிதைத்துக் கொண்ட சீலர்களும் உண்டு.

"உழைப்பே செல்வம், உழைப்பே கலாச்சாரம்!"—என்று விண்ணதிர முழங்கினான் மேதை மார்க்ஸிம் கார்க்கி. இந்தச் செல்வங்களுக்கும், மனித நாகரிக கலாச்சார வளர்ச்சிக்கும் மூலகாரணமாக இருப்பவர்கள் சகல துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் உழைப்பாளர்களே. ஆனால், இவர்களுடைய வாழ்க்கைத் தென்றல் வீசும் சோலையாக இருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து நசுங்கிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய செந்நீருக்குப் பதிலாகக் கண்ணீரைப் பெற்றுப் பேதைகளாக எவ்வித உரிமையும் சுகமும் அற்று வாழ்கிறார்கள். வேதனையும், விசாரமும்தான் இவர்களுடைய வாழ்வாக இருக்கிறது. சமுதாய உச்சியிலே உட்கார்ந்திருக்கும் உல்லாசிகளாலும், அவர்கள் படைத்திட்ட சமுதாய அநீதிகள், அக்கிரமங்களினாலும் தாக்கப்பட்டு, உடம்பும் உள்ளமும் நொந்தவர்களாக இருக்கிறார்கள். வாழ்வின் சகல

வசதிகளும் சுகமும் இவர்களுக்கு வஞ்சிக்கப் படுகின்றன. வாழப் பிறந்த இவர்கள் சாகிறார்கள்.

இந்த நிலையை மாற்றி அமைக்க சமுதாயத்தில் அரசோச்சிக் கொண்டிருக்கும் சகல அநீதிகளையும், அக்கிரமங்களையும் தகர்த்து அவற்றைப் புதைக்குழிக்குள் அனுப்பி உழைப்பாளர்களின் ஆட்சியை சமுதாயத்திலே ஆழ நட்டு, [illegible]த்துவமும் சுபிட்சமும் செழித்து வளரத் தகுந்த திட்டங்களைத் தீட்டி, [illegible]வற்றை நடைமுறைக்குக் கொண்டுவர அயராது உழைத்தார்கள் [illegible]உழைத்துக்கொண்டும் வருகிறார்கள். இவர்களிலே பலர் சொத்து[illegible]களைப் பறிகொடுத்ததோடு மட்டுமல்லாமல், நெஞ்சு பதைக்கும் [illegible]விலே கொடுமைப் படுத்தப்பட்டும், தங்கள் இன்னுயிரையும் [illegible]விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தியாக முத்துக்கள் இந்த [illegible]டடின் முற்போக்கு முகாமிலே இருப்பதைக்கண்டு பெருமைப்படுவோமாக! அவர்களுக்குத் தலைவணங்குவோமாக!

நமது மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய இவர்களின் இலட்சியத்தைத் தாங்கி, இன்றும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் எண்ணற்ற ஊழியர்கள். அவர்களில் இருவரை முக்கிய பாத்திரமாகக் கொண்டு இந்தக் கதையை உருவாக்கியிருக்கிறேன். இந்தக் கதை உங்களுக்குப் பிடித்திருந்தால் உங்கள் மதிப்பையும் பாராட்டுதலையும் எனக்குத் தரவேண்டாம். இதிலே வரும் ஆனந்தனைப் போன்றவர்களுக்கும், அழகேசனைப் போன்றவர்களுக்கும் செலுத்துங்கள். இந்தக் கதை சம்பந்தப்பட்டமட்டில் நான் விரும்புவது அதுதான். வணக்கம்

**இளங்கீரன்**

# பதிப்புரை

"எதிர்பார்த்த இரவு" நேயர்கள் எதிர் பார்க்கும் இரவு அல்ல என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம். எழுத்து நடையிலே கதையின் போக்கிலே, கதா பாத்திரங்களின் சிருஷ்டியிலே, ஓர் புது முறையைக் கையாண்டு இருக்கிறார் நண்பர் இளங்கீரன். இந்த எதிர் பார்த்த இரவிலே நேயர்கள் எதிர்பார்க்காத இன்பத்தை அனுபவிப்பீர்கள் என்பது திண்ணம்.

முற்போக்கு எழுத்தாளர் இளங்கீரனின் "எதிர்பார்த்த இரவை" எங்கள் இரண்டாவது வெளியீடாகக் கொண்டு வருவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். இளங்கீரன் நூல்கள் எங்கள் பதிப்பகத்திலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

1—4—54.

நவபாரத் பதிப்பகத்தார்
சென்னை-1.

தோழனே,

உன்னைச் சுற்றிக் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலருடன் பழகியிருப்பாய்; பேசியிருப்பாய்; அவர்களில் பலருடைய வாழ்க்கையிலே சிக்கலும் சிதைவும், வேடிக்கையும் விநோதமும் நிறைந்து கிடக்கக் கண்டிருப்பாய். இவற்றையெல்லாம் பார்த்த நீ அவர்களைப் பற்றிப் பல முடிவுகளுக்கும் வந்திருப்பாய். அந்த முடிவுகள் சரிதானா ?

இந்தக் கேள்விக்கு விடை காணவேண்டுமானால்

இளங்கீரனின்

கருத்தோவியமான

# "மனிதனைப் பார்"

என்ற நூலைப் படித்துப் பார் !


*வெளியிடுவோர் :—*

**நவபாரத் பதிப்பகம்**

**தபாற்பெட்டி நெ. 1647,**

**சென்னை–1**

## இளங்கீரனின்
## இதர படைப்புகள்

1. பைத்தியக்காரி
2. பொற்கூண்டு
3. மீண்டும் வந்தாள்
4. காதலன்
5. மரணக் குழி
   (இவை தீர்ந்துவிட்டன)
6. காதல் உலகிலே
7. கலாராணி
8. வனக்குமரி
9. அழகு ரோஜா
10. பட்டினித் தோட்டம்
11. நீதிபதி
12. ஆணும் பெண்ணும்
    (இவை விறு விறுப்புடன் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன)
13. மாதுளா
14. மனிதனைப்பார்
15. ஒரே அணைப்பு
16. தென்றலும் புயலும்
    ( இவை விரைவிலே வெளி வருகின்றன. )

## படித்துவிட்டீர்களா ?

| | | | | |
|---|---|---|---|---|
| கள்ளத்தோணி | விலை ரூ. | 1 | 8 | 0 |
| துரோகி | ,, | 1 | 8 | 0 |
| இன்பத் திராவிடம் | ,, | 1 | 0 | 0 |
| திராவிடம் பிரிந்தால் | ,, | 1 | 0 | 0 |
| தென்றலின் தீர்ப்பு | ,, | 0 | 8 | 0 |
| மறுமலர்ச்சி தூதுவர்கள் | ,, | 0 | 8 | 0 |
| கலங்கரை விளக்கம் திரு. வி. க. | ,, | 0 | 8 | 0 |
| எல்லைக் கோடு | ,, | 0 | 12 | 0 |
| கண்ணீர் | ,, | 0 | 12 | 0 |
| நிலவில் நடந்தது | ,, | 0 | 8 | 0 |
| கெரிபால்டி | ,, | 1 | 8 | 0 |
| பிளேட்டோ | ,, | 1 | 0 | 0 |

விவரங்களுக்கு :—

**நவபாரத் பதிப்பகம்**

**36, முத்துமாரி செட்டி தெரு, சென்னை-1.**

# எதிர் பார்த்த இரவு

**இளங்கீரன்**

## 1. கடலும் கப்பலும்

மனிதன், இயற்கையின் விளையாட்டுக் கருவியாக இருக்கிறான் என்கிற எண்ணம் மறைந்து, இயற்கையைத் தன் இஷ்டப்படி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறான் இப்போது என்று நினைக்கும்போது அழகேசனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. சீறிப் பாய்ந்து, பேரிரைச்சலிட்டு ஆரவாரத்துடன் கரையை வந்து மோதி ஆர்ப்பாட்டம் செய்யும் கடலலைகளைக் கண்டு, பயத்தினால் மெய் நடுங்க இருதயம் அச்சத்தினால் படபட என்றடிக்க, நிலத்தில் நீளக் குப்புற வீழ்ந்து கடலை வணங்கிய ஆதிகால மனிதனையும், அதே கடலை அடக்கி அதனுடைய சினத்தையும், சீறிப் பாயும் குணத்தையும் தன் பேரறிவினால் கட்டுப்படுத்தி, அதன்மேல் ஓடிவிளையாடக் கற்றுக்கொண்ட இன்றைய மனிதனையும், நினைக்க நினைக்க சிரிப்பு மட்டுமல்ல, சிந்தனையும் தூண்டிவிட்ட சுடர்போல் ஒளி காட்டத்தான் செய்தது அழகேசனுக்கு.

அந்தமானையும், நிகோபாரையும் தாண்டிக் கொண்டிருந்தது கப்பல். அந்தி வேளை சூரியனின் பொன் சிரிப்பு அடிவானத்தை ஒரே சிகப்பாக்கி யிருந்தது. மேகக் கூட்டங்கள் பஞ்சுக் குவியல் போல் அங்கு மிங்கும் சிதறிக் கிடந்தன. வானத்தைப் போல் அகன்று விரிந்து கிடந்த இந்துமகா சமுத்திரத்தின் ஆழிய நீர் பரப்பைக் கிழித்துக்கொண்டு சென்று கொண்டிருந்த கப்பல், தண்ணீரின் தத்துவத்தைத் தன்னுள்

அடக்கி விட்டது போல் மிதந்து போய்க் கொண்டிருந்தது. அதன் வேகத்தில் தண்ணீரின் அலைப் பிரிவுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு ஆரவாரஞ் செய்தன. இக்காட்சியைப் பார்த்துக்கொண்டு கப்பலின் மேல் தளத்திலே நின்று கொண்டிருந்த அழகேசனின் சிந்தனை மீண்டும் சீறிப் பாய்ந்தது.

இரண்யாட்சதன் என்கிற அசுரன் இப்பூமியைப் பாயாகச் சுருட்டிச் சமுத்திரத்தில் கொண்டு போய் ஒளித்து விட்டான் என்கிற புராணப் புளுகைத் தகர்த்தெறிந்தது இக் கடலும், கப்பலுந்தானே! பூமி உருண்டை என்ற தத்துவத்தைத் தரணிக்கு எடுத்துக் காட்டிய இக்கப்பலும், கடலும் இன்னும் எத்தனையோ தத்துவங்களைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கின்றன.

உலகம் ஒரு கடல், வாழ்க்கை அதில் மிதந்து செல்லும் ஒரு கப்பல்! அணுகுண்டு தேவையில்லை, சாதாரண குண்டே போதும், இக்கப்பலைச் சுக்குநூறுக்க, பாறையிலோ, கடற் கண்ணியிலோ மோதுண்டு நொறுங்கலாம், உலகம் என்கிற சமுத்திரத்திலே வாழ்க்கை என்கிற கப்பல் மிதந்து செல்லும் போது எத்தனை டார்ப்பிடோ சம்பவங்களை, கற்பாறை நிகழ்ச்சிகளைச் சந்திக்க வேண்டி யிருக்கிறது! சந்தித்ததும்—

கொலம்பஸ் எத்தனையோ அபாயங்களையும், இடையூறுகளையும் தாண்டத்தான் செய்தான். இது இந்து சமுத்திரம். ஆனல் அட்லாண்டிக்கை அவன் கடக்கும்போது, அவனுடன் மோதிய எத்தனையோ அபாயகரமான சம்பவங்களைக் கண்டு கலங்கினனில்லை. அவனுடைய இலட்சியம் ஒரு புது உலகைக் கண்டு பிடிப்பது. அந்த இலட்சியத்தை இடித்துத் தள்ள—துகள் துகளாக்க, அட்லாண்டிக் சமுத்திரம் மட்டு

மென்ன, அறியாமை மிகுந்த மக்கள் சமுத்திரமும், பொருமைக் கடலும் கிளர்ந்தெழத்தான் செய்தன. என்ருலும் அமெரிக்கா வும், கொலம்பஸும் இன்று இருக்கிருர்கள் ! வரலாற்றிலே அவன் வாழ்கிருன்; பூகோளத்திலே அமெரிக்கா வாழ்கிறது !

வாழ்க்கைக் கப்பலைச் செலுத்தும் எத்தனையோ கொலம் பஸ்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிருர்கள்.

வேகமாகச் சென்று கொண்டிருந்த அழகேசனின் சிந்த னைக் குதிரை, இந்த இடத்தை அடைந்ததும், அவன் மனக் கண்முன் ஆனந்தனின் உருவம் வந்து நின்றது. 'ஆம் ஆனந் தனும் ஒரு கொலம்பஸ்தான்' என்று அவன் வாய் முணு முணுத்தது.

இருட்டி விட்டது. வானத்தை அண்ணுந்து பார்த்தான். விண்மீன்கள் பூத்திருந்தன அங்கே! ஆனந்தனின் உருவம் அவனுடைய நினைவை எங்கேயோ இழுத்துச் சென்றது.

பல வருடங்களுக்கு முன்—

பீச்சிலே தன் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந் தான் அழகேசன், அன்றும் இப்படித்தான் வானப் பரப்பிலே நட்சத்திரப் பூக்கள் சிதறிக் கிடந்தன. அந்த அழகிலே சொக் கிப் போன அழகேசன் தன்னை யறியாமலே, ஆஹா,ஆஹா....! என்று கூவினுன். அந்த நண்பர் குழாமிலே, கவிதை, மனப் பான்மை உள்ள ஒருவன், வானத்தோகையின் வண்ணப் பூக் கள், என்று அழகேசனுக்கு மட்டுமல்ல, அங்கிருந்த எல்லோ ருக்கும் உற்சாகத்தை ஊட்டினுன். எல்லோரும் வானத்தை அண்ணுந்து பார்த்தார்கள். அதே சமயம், கணீரென்றது ஒரு குரல்.

"கவிதை உள்ளத்துக்கு அவை வண்ணப் பூக்கள்தான் ........உண்மையில் அவை, வாழ்க்கை என்ற வானத்திலே

உள்ள வேதனைப் புள்ளிகள்....!'' வீசப்பட்ட வேலின் வேகத்தைப்போல் பாய்ந்து வந்த இந்தச் சொற்றொடரைக் கேட்டதும், எல்லோருடைய முகங்களும் திரும்பின, மெலிந்த உடல், கலைந்து கிடந்த தலைமயிர், பொலிவு பொங்கும் ஆனால் ஷேவிங் செய்யப்படாத முகம், சாதாரண உடை, இத்தோற்றத்துடன், ஒரு இளைஞன் இரண்டு கெஜ தூரத்தில் உட்கார்ந்திருந்தான்.

"ரஸிக உள்ளம் தெரியாத யாரோ ஒருவன். உணர்ச்சியே இல்லாத கருவேல மரம், முட்கள்தான் இருக்கும் குத்த.'

இவ்விதம் அந்தக் கவிதை மனப்பான்மை உள்ள நண்பன் சொன்னான். அதைக் காதில் வாங்காமல் விரிந்து கிடந்த நீலக்கடலை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

எல்லோரும் மீண்டும் தங்களுடைய உரையாடலைத் துவக்கினர். ஆனால், அழகேசனின் சிந்தனைமட்டும் அந்த இளைஞன் சொன்ன வாசகத்தையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது, விளக்கைச் சுற்றி விட்டில் சுழல்வதுபோல !

நண்பர்கள் எழுந்தார்கள், வேடிக்கையான வார்த்தைகளை உதிர்த்த வண்ணம் நடந்து சென்றார்கள். ஆனால் அழகேசனின் நினைவு அந்த இளைஞன் மீதே மிதந்து கொண்டிருந்தது. அந்த வாலிபனின் வாசகத் தொடர் அழகேசனின் உள்ளத்தில் பதிந்து விட்டது. அவன் யார்? என்ற கேள்வி மடக்கி மடக்கி எழுந்து கொண்டிருந்தது.

அடுத்த நாள் அழகேசன் மட்டும் கடற்கரைக்குச் சென்றான். அந்த இளைஞன் அங்கிருந்தான். மெதுவாகப் பேச்சுத் தொடுத்தான் அழகேசன். இருவருக்கும் உரையாடல் நடந்தது. அந்த இளைஞன்மேல் ஒரு மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டது அழகேசனுக்கு.

ஒவ்வொரு நாளும் இருவரும் சந்தித்தார்கள் கடற்கரையில். ஆனால் அந்த இளைஞன் சந்திப்புடன் தன்னுடைய தொடர்பை வைத்துக்கொண்டானே தவிர பொதுவாக அவன் ஒதுங்கியே போனான். ஆனால் அந்த ஒதுங்கல் கொள்கை அதிக நாள் நீடிக்கவில்லை. இருவரும் தோழர்களாகி விட்டனர் ; ஒன்றாகி விட்டனர். அந்த இளைஞன்தான் ஆனந்தன், அவனுடன் நட்புக்கொண்டதன் விளைவாக எங்கேயோ—பயனற்ற பாதையில்—போக இருந்த அழகேசனின் வாழ்க்கைப் பயணம் தடைப்பட்டு ஆனந்தனின் பாதையில் கால் வைக்கத் துவங்கியது.

மனிதனின் மனோ நிலை எப்போதும் ஒரேவிதமாக இருக்காது. சந்தர்ப்பம், சூழ்நிலை, கூட்டுறவு—ஆகியவைகளால் அடிக்கடி மாறும். மல்லிகையின் மேல் மனத்தைச் செலுத்தியவன் ரோஜாவைப் பறிப்பதும், பலாப்பழம் வாங்கப் போனவள் வாதாம் ஹல்வா வாங்குவதும், கிளாஸ்கோ மல் எடுக்கப் போய் மேட்டூர் மல் எடுப்பதும் சகஜம்.

வாழ்க்கை ஓர் அழகு ; அழகு ஓர் கலை—இந்த எண்ணத்துடன் வெள்ளைக் காகிதமும், வர்ணக் கலவைகளும், தூரிகையும் கொண்டு திரிந்தவன் அழகேசன், கல்லூரியில் படிக்கும் போது விஞ்ஞானமும், கணிதமும் அவன் மூளையில் ஏறாது. முக்கோணக் காட்சிகளை எப்படி வரையலாம் என்பதையே சிந்தித்துக் கொண்டிருப்பான். "ஆர்டஸ்" என்றால் போதும், ஆனந்தக் கூத்தாடுவான்.

சுகமாக வாழ்வதற்கு எத்தகைய இடையூறுகளும் இல்லாதவன் அழகேசன், சீமான் செல்லப்பரின் ஒரே மகன், பணம் பல லட்சம் பாங்கியில் இருக்கின்றன. சென்னையில் பங்களா வேறு இருக்கிறது. அவனுடைய சொந்த ஊரான தஞ்சை

யிலே நன்செய், புன்செய் ஏராளம். இவ்வித சொத்தும், சுகமும் உள்ளவனுக்கு கவலைகள் இல்லாது, கலைகளில் நாட்டம் சென்றது விந்தையல்ல. பங்களா வாழ்வில் பரிபூர்ண ஆனந்தம் இருப்பது ஒரு பக்கம் இருக்க, அவன் பிறந்த வளர்ந்த முறையும், அவனுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையும் அவனை அந்த நிலையில் வைக்க உதவின, ஓவியக் கலையைப் பரப்ப வேண்டும். நாடெங்கும் புதைந்து கிடக்கும் "அஜந்தாக்களை" வெளியில் எடுத்து வெள்ளைத் திரையில் வண்ண ஓவியமாக்கிக் காட்டவேண்டும். அவற்றின் அருமை பெருமைகளை மக்களுக்கு விளக்கவேண்டும், என்ற எண்ணத்தில் ஊறிப் போயிருந்தான். அந்த நோக்கம் நிறைவேற 'ஓவியம்' என்று ஒரு பத்திரிகையைக் கூட நடத்தி வந்தான். இது மட்டுமல்ல, வாழ்க்கையில் எத்தனைவித இன்பங்கள் உண்டோ அத்தனையையும் அனுபவித்துவிட வேண்டும் என்று அதன்படியே வாழ்ந்து வந்த அழகேசன், ஆனந்தனின் பாதையில் நடக்கத் துவங்கியதைக் கண்ட அவனுடைய நண்பர்களின் விழிகள் ஆச்சர்யத்தால் விரிந்தன.

ஆனந்தனுடைய நட்பும், அவனுடைய லட்சியங்களும் அழகேசனை சீமான், வீட்டுச் சூழ்நிலையிலிருந்து இறக்கி சிதைந்தவர்களின் சூழ்நிலைக்குள் கொண்டு வந்து தள்ளின. தன்னை முழுக்க முழுக்க ஆனந்தனுக்கிக் கொண்டான். சிந்தனையின் சொக்குப் பொடியில் மயங்கி நின்ற அழகேசன் ஆனந்தனின் நினைப்பை ஒதுக்கிவிட்டுச் சாப்பிடச் சென்றான்.

## 2. இலட்சியமும் எலும்புக்கூடும்

ஆனந்தனின் வாழ்க்கை ஒரு பாலைவனம்! சுகமென்னும் நீர்ச் சுனைகளை எப்படிக் காணமுடியும் அங்கே? மகிழ்ச்சி, இன்பம், அமைதி இவைகள் அவனுக்கு எட்டாப் பொருட்கள்! வாழ்க்கை என்ற நீண்ட சாலையில் நிம்மதி என்ற மரநிழல் இல்லாமல் போகாது. ஆனால் ஆனந்தன் போகும் பாதையில் நிழலல்ல. நீண்ட வெளிதான் இருக்கிறது; இருக்க முடியும்! அவனுடைய வாழ்க்கை வீதி அப்படி அமைந்து விட்டது. இல்லை—அப்படி அமைத்துக் கொண்டான். காரணம், கனவு காணும் ஒரு இலட்சியவாதியாக அவன் இருந்ததால்அவன் கனவுலகத்தில் தனது இலட்சியத்தை எட்டிப் பிடிப்பதாக எண்ணிக் கொண்டாலும், அவனது நனவு வாழ்க்கை முள்ளும் புதரும் கொண்ட காடாகத்தான் இருந்தது. துன்பம்—துயரம் என்ற சக்கரங்களில் அவனுடைய வாழ்க்கைச் சிக்கி சிதைந்து கொண்டிருந்தது. "படித்த, முட்டாள்! லட்சியம் என்ற நாணலைப் பிடித்துக் கொண்டு வாழ்க்கைக் கடலை நீந்திக் கடக்கப் போகிறானும். பைத்தியம்!" என்று அவனுடைய நண்பர்கள் கேலி செய்தாலும் அவன் அதைப் பொருட்படுத்துவதில்லை. அம்புலியைப் பார்த்து அதைப்பிடித்து விளையாடவேண்டும் என்று ஆவலோடு ஆர்பரிக்கும் குழந்தைகளைப்போல், கோடிக் கணக்கான ஏழைகள் இன்பம் என்ற அம்புலியைப் பிடிக்க முயலுகிறார்கள். குழந்தைகளுக்கு வானத்துமதி கிடைத்து விடுகிறதா? இல்லை, அது போல ஏழைகளுக்கும் இன்பம் கிடைத்துவிடுவதில்லை, என்றாலும் அந்த நிலவை அழகான வண்ணப் பூ என்று நினைத்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் போல்தான் இருக்கிறார்கள் ஏழைகள்.

எழில் நிலவு எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ, அவ்வளவு தூரத்தில்தான் இன்பமும் இருக்கிறது ஏழைகளுக்கு. அந்த ஏழைகளில் நானும் ஒருவன்"—இப்படிச் சொல்வான் ஆனந்தன்.

விருப்பு வெறுப்பு அற்ற பரமனுக்குப் பணி செய்யப் பாவையர் கூட்டம் வேண்டியிருந்ததாம். அதற்காகத் தானே 'தேவர் அடியாள்கள்' படைக்கப் பட்டார்கள்! பகவானுக்குத் தொண்டு செய்யப் படைக்கப்பட்ட அவர்கள் ஆண்டவனின் 'அருளுக்கு'ப் பாத்திரமானவர்களின் உடற் பசியைத் தீர்க்கும் 'தேவடியாள்களாக' மாறிவிட்டார்கள். கோயில் பூனைகள் கொள்ளையிடும் இன்பச் சுரங்கமாக மாற்றப்பட்டு ஒரு தனிக் குலமாக வளர்க்கப்பட்டார்கள். பண வேந்தர்கள் பரவசம் துய்க்கும் காமச் சோலையாக மாற்றப்பட்டு இன்று தனி ஜாதியாக இருந்து வருகிறதே 'தாசி குலம்' என்று. அந்த வர்க்கத்தில் வந்தவள் ஆனந்தனின் தாயார் செல்லம்மாள், என்றாலும் தனது பரம்பரைத் தொழிலைச் செய்ய இஷ்டப்படவில்லை. அதை வேம்பு போல் வெறுத்தாள். நல்ல குணமுள்ள ஒருவனுடன் கண்ணியமாக குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டாள். இவளுடைய எண்ணத்துக்குத் தக்கபடி ஒருவன் வந்தான். செல்லம்மாள் அவனை நம்பினாள். ஆனால் தாசி குலத்தில் உள்ளவளைத் தாலி கட்டிய மனைவியாக்கி வைத்திருக்க அவனுக்கென்ன பைத்தியமா? அவளுக்குத் துரோகம் செய்துவிட்டு ஓடிவிட்டான். செல்லம்மாளின் உள்ளம் சுக்கல் சுக்கலாக உடைந்து விட்டது. அதுவரை அவளுக்கு ஆதரவாக இருந்த அவளுடைய தாயாரும் இறந்து விடவே தனித்தவளானாள். புயலில் சிக்கிய துரும்பு போல வறுமையில் சிக்கித் தத்தளித்தாள். இந்தச் சமயத்தில் தான் பழனியாண்டிச் செட்டியார் அவளுடைய வாழ்க்கையில்

குறுக்கிட்டார். தாலி கட்டாத குறை ஒன்றைத் தவிர, மற்றப் படி கணவனாக அவளுடன் வாழ்ந்து வந்தார். இந்த வகையில் அவள் சிறிதளவு மன ஆறுதல் அடைந்தாள்.

காலம் தனது பாதையில் வேகமுடன் ஓடியது. ஆனந்தன் பிறந்து மூன்றாவது வருடம்; காஞ்சனா வயிற்றில்; இந்தச் சம யத்தில் பழனியாண்டிச் செட்டியாரும் 'பரலோகம்' பார்க்க ஆசைப்பட்டு அங்கு சென்று விட்டார். அதிலிருந்து வாழ்க்கை யில் அவள் வைத்திருந்த கொஞ்ச நஞ்சப் பற்றுதலும் அற் றுப் போய் விட்டது. ஆனந்தனையும் காஞ்சனாவையும் வளர்க்க அவள் பட்ட கஷ்டத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடி யாது!

மானம்—கற்பு என்ற வார்த்தைகள் தாசி குலத்துக்கு இல்லை என்று சமூகம், சம்பிரதாயம் என்ற சாஸனத்தில் பொறித்து விட்டது. இந்த இரண்டு சொற்களும் அவர்களைப் பொறுத்த அளவில் தடை உத்தரவுகள் தானே! இந்த ஒரு வசதிதான் அவர்களிருவரையும் வளர்க்க உதவின. இதனால் செல்லம்மாளின் இதயம் வேதனையால் வீங்கி விட்டது. குடும்ப விளக்காக இருந்து குடித்தனம் நடத்தவேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தவள், கடைசியில் உடலை விற்று வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தனது வாழ்க்கை குதித்து விட் டது குறித்து மனம் குமுறினாள். அவளுக்குச் சாந்தியே இல் லாது போய்விட்டது. தனது மகள் காஞ்சனா தனது வழி யைப் பின்பற்றக் கூடாதே என்ற கவலை அவளுக்கு.

ஆனந்தன் பெரியவனானதும் தனது வாழ்க்கையில் ஏற் பட்ட பள்ளத்தை அவனைக்கொண்டு கடக்கலாம் என்று நம்பி யிருந்தாள். அந்த நம்பிக்கையும் நாசமாகி விட்டது. அவனைப் படிக்கவைத்து உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்துவதன் மூல

மாக ஆனந்தன் அந்த வாழ்க்கையில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருவதைக் கண்ணால் பார்ப்பதன் மூலமாகவாவது, தனது மனப் புண்ணை மாற்றலாம் என்ற பெரிய நம்பிக்கையால் மானத்தைக் கூட விற்றுப் படிக்க வைத்தாள். ஆனால் ஆனந்தன் உத்தியோக வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு ஊருக்கு உழைக்கும் தொழிலில் இறங்கிவிட்டான்.

ஆனந்தன் உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போது நாட்டை நன்றாகக் கவனிக்கத் துவங்கினான். தன்னைச் சுற்றிலும் நடக்கும் ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கினான்; இரண்டெழுத்து, மூன்றெழுத்துப் பட்டங்களைத் தங்கள் பெயருக்குப் பின்னால் வைத்துக்கொண்டிருப்போர் ஒரு பக்கம்; விரல் நாட்டுவோராக, தற்குறிகளாகத் திரியும் லட்சக்கணக்கானோர் மறுபக்கம்.

பாலும் பழமும் சேர்த்து உண்போரும் அதிக உணவால் அஜீர்ணப்படுவோரும் ஒரு பக்கம்; கூழும், கஞ்சியும் குடிப்போரும், பசி பசி எனப் பதறுவோரும் மறுபக்கம்.

மார்பொடிய வண்டி யிழுப்போரும், மண் குடிசையில் வாழ்வோரும் ஒரு பக்கம்; மந்தகாசமாக உல்லாச வாழ்வு வாழ்வோரும், மாடி வீட்டில் உலாத்துவோரும் இன்னொரு பக்கம்! நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்த நான்கு பணத்தையும் கோயில் உண்டியலில் போட்டுவிட்டுப் பிராகாரத்தைச் சுற்றிக் கும்பிட்டு விட்டுச் செல்வோர் ஒரு பக்கம், அந்த உண்டியல் பணத்தைக் கொள்ளையடித்துக் குபேர வாழ்வு வாழ்வோர் பிறிதொருபக்கம்.

சேரிகளில் வாழும் தீண்டப்படாத தாழ்ந்த சாதி ஒரு பக்கம்; அக்கிரகாரங்களில் வாழும் உயர்ந்த சாதி ஒரு பக்கம்.

கடவுளால் துவேஷிக்கப்பட்ட வனைந்த வாழ்வினர் ஒரு பக்கம், அதே கடவுளால் நேசிக்கப்பட்ட மெத்தை வாழ்வினர்

பகவானின் பாதுகாப்பாளர்களாக இருப்பது இன்னெரு பக்கம்.

இவைகள்—இந்தக் காட்சிகள் ஆனந்தனின் கண்களை உறுத்தின. ஏன் இந்த நிலைமை? எதற்காக இந்த மேடு பள்ளங்கள்? என்ற கேள்விகள் அவன் உள்ளத்தில் குதித்தெழுந்தன. அவன் உள்ளக் கடலிலே எண்ண அலைகள் குமுறியெழுந்து வாரி வாரி அடித்தன. கடவுள், விதி, முன் ஜென்ம வினை, தலையெழுத்து என்ற பதில்கள் ஒரு புறமும் கஷ்டங்களும் ஏன்? நொந்தவாழ்வு ஏன்? என்று இடித்துக் கேட்கும் அறிவு ஒரு பக்கம்! விடைகள் தெரியாது அலைந்தான். குழப்பமான எண்ணங்கள்; தெளிவில்லாத சிந்தனைகள், அவனை உருமாற்றத் துவங்கின.

ஹைஸ்கூலை விட்டு வெளியே வந்தான். அப்போது கல்லூரியை எட்டிப்பார்க்கும் நிலைமையில் அவன் இல்லை. எதை எதையோ எண்ணியபடி சுற்றித் திரிந்தான். இந்தச் சமயத்தில்தான் காரல் மார்க்ஸும், எங்கல்ஸும்; ரூசோவும், வால்டேரும், இங்கர்சாலும், பிராட்லாவும்; லெனினும், ஜீன்ஸ் மௌலியரும், பிளாட்டோவும், சாக்ரடீஸும் சந்தித்தார்கள். காபிடலும், கம்யூனிஸ்ட் அறிக்கைகளும், குடியரசும், சமுதாய ஒப்பந்தமும், விஞ்ஞான வளர்ச்சியும், அரசியல் வரலாறும் அவன் மண்டையில் ஏறின. அவன் படிக்காத அறிஞர்களின் நூல்கள் மிகச் சொற்பமென்று சொல்லிவிடலாம். இதனுல் அவனுடைய சிந்தனைத் தீ கொழுந்து விட்டு எரியத் துவங்கியது. அதன் வெளிச்சத்தில் அவன் தேடித்திரிந்த விடைகள் கிடைத்தன. தன்னுடைய வாழ்க்கைப் பாதை எது என்பதைத் தீர்மானித்துக்கொண்டான். சாதி சமயமற்ற, ஏழை பணக்காரன் இல்லாத சுபிட்சமும், சுதந்திரமும், சமத்துவமும், சந்

தோஷமும் கொண்ட ஒரு சமதர்ம சமுதாயத்தை நாட்டினில் உருவாக்கும் வகையில் தனது இலட்சியத்தை வகுத்துக் கொண்டான். தனது லட்சியக் கனவு, நனவாக எவ்விதக் கஷ்டத்தையும் தாங்கத் தயாராக இருந்தான்.

வீட்டு வாழ்க்கையைத் துறந்து லட்சியம் ஒன்றையே துணையாகக் கொண்டு நடந்ததன் பலனாக உள்ளம் வேதனைப் புயலில் சிக்கி அலைய வேண்டிய சம்பவங்கள் எத்தனையோ! உழைப்போரின் உபாதையை உதைத்துத் தள்ளிவிட்டு, அவர்களின் வாழ்க்கையிலே உவகை பூக்கப் பணியாற்ற வேண்டுமென்ற உன்னத குறிக்கோளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டி வந்ததனால் அவன் அடைந்த கஷ்டங்கள் துன்பங்கள் எத்தனையோ! அவைகளை யெல்லாம் அவன் பொருட்படுத்தவேயில்லை. 'நம் போன்றோர்க்கு இவைதான் பரிசு' என்று எண்ணி சோர்வை உதறிவிட்டு தன் பணியில் நடப்பான்.

இந்த நிலையில் செல்லம்மாளின் கனவை நனவாக்க அவனால் எப்படி முடியும்? அவன் தங்கை காஞ்சனா விபசாரியின் மகள். எனவே அவளும் வேசிதனத்தை வளர்ப்பவளாக இருக்க வேண்டும், என்று எதிர் பார்க்கப்பட்டது. அதற்குத் தடைக் கல்லாக நின்றான் ஆனந்தன். இதனால் பல உல்லாசிகளின் எதிர்ப்பையும் அவன் தாங்கவேண்டி வந்து விட்டது. அவனுடைய இலட்சியம், அவனை ஊருக்கு உழைக்க வைத்தது. அதனால் ஒடேந்த வேண்டிய அவ்வளவு கேவல நிலைக்கு வந்தது குடும்பம். வெளியிலே இலட்சியப் போராட்டம்; வீட்டிலே வறுமைப் போராட்டம். என்றாலும் அவன் கலங்கவில்லை. என்னைப் போன்ற ஏழைகளின் இலட்சியம், சமாதிக்குள் ளிருக்கும் எலும்புக்கூடு. அது வெளிக்குத் தெரியாது. என்றாலும், அதை உலகுக்கு நன்றாகத் தெரியு

மளவுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்; எடுத்துக் காட்டு வேன். என்று அடிக்கடி சொல்லிக் கொள்வான்.

அப்படி எடுத்துக் காட்டவேண்டிய காலமும் வந்து விட்டது. ஆனந்தனின் கம்யூனிஸ்ட் கட்சி திடீரென்று தடை செய்யப்பட்டது சர்க்காரால். அன்றிலிருந்து ஆனந்தனையும் காணோம்!

## 3. பொறியும் புள்ளிமானும்

மதுரை ஜில்லாவிலே சுந்தரம்பிள்ளையைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அவ்வளவு செல்வாக்குள்ளவர். 'தேசத்தியாகி' என்று பெயர் எடுத்த கதர்ச்சட்டைக்கனவான்களிலே அவரும் ஒருவர். காந்தி காலத்திலே, மாலை மரியாதையுடன் சிறை சென்றவர். ஆனால் அந்தச் சிறை வாசத்தால் ஒரு கஷ்டமும் அனுபவிக்கவில்லை யென்பதை அவர் மட்டும் தான் அறிவார். வீரத் தமிழன் சிதம்பரம்பிள்ளை சிறையில் செக்கிழுத்தார். ஆனால் சுந்தரம் பிள்ளை யென்ன அவரைப் போல 'முட்டாளா' செக்கிழுத்து, 'தியாகி' யென்ற பட்டம் பெற? எத்தனையோ 'தியாகத் தலைவர்களெல்லாம் செக்கிழுத்தா தங்கள் தேசபக்தியைக் காட்டிக்கொண்டார்கள்? இல்லையே!

ஆயிரக் கணக்கான ஊழியர்கள் சிறையிலே 'சி' கிளாஸிலே குடலைக் குமட்டும் உப்பில்லாக் கஞ்சியைக் குடித்துக் கொண்டிருக்கும் போது, சுந்தரம்பிள்ளை பாலும், பழமும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் 'ஏ, கிளாஸ் கைதி! 'சி' கிளாஸ் கைதிகளெல்லாம் எடை குறைந்து கொண்டிருந்தார்கள். ஆனால், சுந்தரம்பிள்ளை மட்டும் தன் எடை குன்றுமலிருக்கச் சிறந்த 'டானிக்' வகைகளை வயிற்றுக்குள் விட்டுக் கொண்டிருந்-

தார். தேசபக்தியைக் காட்ட, தியாகம் செய்வதை விளம்பரப் படுத்த 'சிறை சென்றவர்'—என்ற சொல்மட்டும் போதுமே! சிதம்பரம்பிள்ளையைப் போல் கஷ்டப்படவா வேண்டும்? என்று தனக்குள் சொல்லிக் கொள்வார், பிள்ளையின் பாஷையில் சொல்லப்போனுல் அவர்களெல்லாம் 'முட்டாள்கள்!' வீட்டில் எப்படி சௌகரியமாக இருந்தாரோ, அப்படியே சிறையிலும் இருந்தார்.

சிறையை விட்டு வெளிவந்ததும் அவருடைய 'தியாகத்' தைப் பற்றி எழுதாத தேசிய ஏடுகளே இல்லையென்று சொல்லலாம். இதனுல் சுந்தரம்பிள்ளையின் செல்வாக்கு இன்னும் உயர்ந்தது.

சுந்தரம்பிள்ளைக்கு மதுரையை அடுத்த பலகிராமங்களில் ஏராளமான நன்செய் புன்செய்களுண்டு. அப்படிப்பட்ட கிராமங்களிலே சோழபுரம் ஒன்று. அவர் அடிக்கடி சோழபுரம் போவார், தன் நிலங்களைப் பார்வையிட.

ஒரு நாள் அங்கு சென்ற சுந்தரரின் கண்களில் காஞ்சனு காட்சியளித்து விட்டாள். அவ்வளவுதான். சிறிது தளர்ச்சியடைந்திருந்த அவருடைய உடம்பு முறுக்கேறத் துவங்கி விட்டது. வயது சுடுகாட்டுக்குப் போகும் பாதையில் அவரைக் கொண்டு வந்து நிறுத்திஞலும், 'இளம் குட்டி' களிடத்தில் அவர் வைத்திருக்கும் ஆசை என்னமோ வாலிபமாகத்தான் இருந்தது. பெண்களிடத்தில் அனுபவிக்கும் 'அந்த இன்ப' ஆசை இன்னும் கிழந்தட்டவில்லை! எனவே, இந்த 'சுவைப்புக்கு' பல சுந்தரிகளைக் கைவசமே வைத்திருந்தார். இது எல்லாம் வெளிக்குத் தெரியாது. இப்படிப்பட்ட சுந்தரர். காஞ்சனுவைக் கண்டதும் மோகங் கொள்ளாமலிருப்பாரா? உடனே துப்புத்துலக்கும் வேலையில் இறங்கினுர். காஞ்சனு தாசி

குலத்திலுள்ளவள் என்று தெரிய வந்ததும், 'பழம் நழுவிப் பாலிலே விழுந்த, மாதிரி யிருந்தது. ஒரு நிமிஷம் கூட அவர் தாமதிக்க வில்லை. காஞ்சனவின் வீட்டுக்குள் புகுந்தார்.

காஞ்சனவின் தாயான செல்லம்மாளுக்குச் சுந்தரம் பிள்ளையைத் தெரியும். ஒரு காலத்தில் அவர் 'அவளிடம்' வந்து போயிருக்கிறர். எனவே, அவரைக் கண்டதும், பரபரப் புடனும், பயபக்தியுடனும் வரவேற்ருள்.

செல்லம்மாளைக் கண்ட சுந்தரம்பிள்ளைக்கு 'பாலில் விழுந்த பழம், நாவில் விழுந்த' மாதிரி இருந்தது.

"என்ன செல்லம்மா, நீயா இங்கே இருக்கிருய்?"

"ஆமாங்க....!"

"சென்னையிலிருப்பதாகக் கேள்விப்பட்டேனே?"

"ஆமா, அங்குதானிருந்தோம்....இப்ப ஆறு மாசத்துக்கு முன்னுடிதான் இங்கு வந்தோம்!"

"அப்படியா....எனக்குத் தெரியாமல் போய்விட்டது. ஏன் செல்லம்மா, நீ மதுரையிலிருக்கலாமே?"

"எங்களுக்கென்னவோ அது பிடிக்கலே. இந்தக் கிராமம் தான் பிடிச்சிருக்கு. எங்கம்மா வாழ்ந்த ஊரு. மனசு நிம்மதி யாக இருக்கு."

"ஆஹாங்....!"

சுந்தரம்பிள்ளை இப்படிச் சொல்லிவிட்டு விழிகளை அங்கு மிங்கும் சுழல விட்டார். இதே சமயத்தில் தண்ணீர் குடத் துடன் உள்ளே நுழைந்தாள் காஞ்சன. அவளை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார், கொஞ்ச நேரம். பிறகு,

"செல்லம்மா இந்தப் பொண்ணு யாரு?"—என்ருர்.

"இது என் மகள் காஞ்சனுவுங்க!"

"ஓஹோ........! இப்படி ஒரு பொண்ணு உனக்கு இருக்குன்னு தெரியாதே! என்ன செல்லம்மா, இந்தப் பொண்ணைக் கிராமத்திலே வைச்சுண்டு........!"—என்று சொல்லிவிட்டு அர்த்தமுடன் ஒரு புன்னகையை நெளிய விட்டார்.

அதன் அர்த்தத்தை செல்லம்மா புரிந்து கொண்டாள். அவள் அனுபவம் அதைத் தெரிவித்தது. அதே சமயம், அவளுடைய முகம் சுருங்கிக் கருத்தது.

"இப்போ அந்தத் தொழிலை விட்டுப் பல வருடங்களாச்சுங்க. என்னைப்போல சீரழியணும்னு நான் நினைக்கலே. யாருடனுவது ஒரு நல்ல மனுஷனேடு குடியும் குடித்தனமுமா அவள் வாழணும். அது தான் என் ஆசை!"—இவ்வளவையும் கரகரத்த குரலில் கூறிவிட்டு, கண்களில் முட்டி நின்ற கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள்.

"நானும், அதைத்தான் சொல்ல வந்தேன்........சரி நேரமாயிடுச்சு. நான் வர்ரேன்!"—என்று கூறிவிட்டு வெளியே வந்தார்.

அவருடைய கார் மதுரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. ஆனல் அவருடைய சிந்தனை சோழபுரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. செல்லம்மாளிடமிருந்து வந்த பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை. செல்லம்மாவைப் போன்று தான், காஞ்சனுவையும் நினைத்தார். ஆனல்—

சுந்தரரின் மூளை மிகத்தீவிரமாக வேலை செய்தது. "ஆஹா........! இவளல்லவா பெண்........! இவளை லேசிலே விழுத்த முடியாது........!' பணம்........அது இருக்கு.... ... அதிலே மயங்காதவர்கள் யார் இருக்கிருர்கள்........? சரி நாளைக்கும்

போவோம்........! இப்படி ஓடிக்கொண்டிருந்தது, பிள்ளையின் சிந்தனை.

மறுநாள், சோழபுரத்துக்குப் போனார் சுந்தரம் பிள்ளை. காஞ்சனாவின் வீட்டுக்குச் சென்றார். கிராமத்திலே வேலையிருக்கு. இந்த மாசம் முழுதும், தினமும் வந்து போகவேண்டியிருக்கு!.........நீயும்? பழைய சிநேகம். உன்னை மறக்கமுடியுமா செல்லம்? நேற்றுத்தான் வந்தேன் உன் வீட்டுக்கு. இன்றும் உன்னைப்பார்க்கவேண்டும் போலிருந்தது?" என்று புளுகினார் பிள்ளை. பாவம், செல்லம்மாளுக்கு எங்கே தெரியப் போகிறது சுந்தரரின் திட்டம்........! "தாராளமாக வாங்க! பழைய சிநேகம்தான்........! என்றாலும் என்னை மறக்காமலிருக்கீங்களே! நான் கொடுத்து வைத்தவள் தான்....!"— இப்படி தன்னுடைய வெள்ளை மனதைத் திறந்து காட்டினாள். அன்று விசேஷமாக ஒன்றும் நிகழவில்லை. சாயங்காலம்போல் திரும்பி விட்டார்.

இப்படித் தினமும் போய்வரத் துவங்கினார். செல்லம் அதைத் தவருகக் கருதவில்லை. எனினும் காஞ்சனா, அவர் வருவதை விரும்பவில்லை. சுந்தரம் பிள்ளையின் விஷம் கலந்த அந்தப் பார்வையின் பொருளை அவள் உணர்ந்து கொண்டாள். அதைத் தன் தாயாரிடமும் கூறினாள். "சீ நீ சும்மாயிரு. அவரை உனக்குத் தெரியாது! அவர் பெரிய மனுஷன்........! அப்படியெல்லாம் தப்பா நினைக்கமாட்டார்!" என்று தனக்குத் தோன்றியதைக் கூறினாள். அதற்கு மேல் காஞ்சனாவும் ஒன்றும் சொல்லவில்லை.

சுந்தரம்பிள்ளை அடிக்கடி அங்கு வருவதால், செல்லம்மாவின் குடும்ப நிலைமையை நன்ருக அறிந்து விட்டார். வறுமைச் சேற்றில் சிக்கிக் கொண்டு அவதிப்படுகிருர்கள், என்

பதை அவர்கள் வீட்டு நிலைமை நன்கு எடுத்துக்காட்டிற்று. இந்த வறுமை நிலைமையைத் தனக்குச் சாதகமாக்க எண்ணினர்.

ஒரு நாள்—

காஞ்சனு வெளியே போயிருந்தாள். செல்லம்தான் வீட்டிலிருந்தாள். சுந்தரரே பேச்சைத் துவங்கினர்.

"செல்லம்மா........நான் சொல்வதைத் தப்பாக நினைக்காதே. உன்னுடன் பழகிய சிநேகம் என்னமோ இன்னும் என் மனதை விட்டுப் போகவில்லை. இப்போ நீ படுகிற கஷ்டம் என் மனசை ரொம்பவும் வருத்துது. ஏன் இப்படி வறுமையாலே கிடந்து துடிக்கணும்? பசியும், பட்டினியுமாகயிருந்து ஏன் துரும்பாக வேணும்? ஒண்ணுசெய், செல்லம். மதுரைக்கு வந்து விடு. நான் வீடு எடுத்து தர்ரேன். உன் குடும்பத்தை நான் கவனிச்சிக்கிறேன். உன்னை மட்டுமல்ல, உன் மகள் காஞ்சனுவின் நன்மையை உத்தேசித்துத் தான் சொல்றேன். பாவம், அந்தப் பெண்ணும் வாடி உலருது! இளம் வயசு........செல்லம்........என் தாராள மனசு உனக்குத் தெரியும். உன் பொண்ணை ஒருவனுக்குக் கட்டிக் கொடுத்துக் குடியும் குடித்தனமுமா வைக்கிறது என்னுடைய பொறுப்பு........!"

வார்த்தைகளில் தேனைத் தடவிப் பேசினர் சுந்தரம் பிள்ளை. அவை இனித்தன செல்லம்மாவுக்கு. அவள் மனம் சலனமடைந்தது. துன்பம் துயரம் இவைகளிலே நொந்து போயிருந்த அவளுடைய உள்ளம், சுந்தரர் சொல்வது சரிதான் என்று ஒப்புக் கொண்டது. ஆனல் தன் மகன் ஆனந்தனுடைய உத்தரவில்லாமல், அவனை அறியாமல் அப்படிப் போவது தப்பு என்று தோன்றிற்று. மறுகணம் 'அவன் தான் இல்லையே........' இப்படிப் பசியும் பட்டினியுமா ஏன் சாக

ணும்........?''—இப்படிப் பலவாறு எண்ணிற்று அவள் மனம்; குழம்பினுள். ஒரு முடிவுக்கும் வரமுடியாமலிருந்தது.

''என்ன செல்லம்மா பேசாமலிருக்கிறே....?''

''நீங்க சொல்றது நிசந்தான். ஆனுல்........?''

''ஏன் இழுத்து நிறுத்துறே....?''

''காஞ்சனு வரட்டும் கேட்டுச் சொல்றேன்!''

செல்லம்மாள் இப்படிச் சொல்ல நினைக்க வில்லை. எனினும் அவளை யறியாமலே அந்த வார்த்தைகள் வந்து விட்டன.

''அவளை என்னத்தைக் கேட்கிறது?''

''அவ சம்மதப்படாமே நான் எப்படி வர்ரது?''

சுந்தரர் இந்தப் பதிலை எதிர் பார்க்க வில்லை. 'அவள் என்ன சொல்கிருளோ....! செல்லத்தை வீழ்த்தியாகி விட்டது. ஆனுல், என்னுடைய இந்தப் பொறியிலே அந்தப் புள்ளி மான் விழவேணுமே....?''—என்று ஏங்கினுர். இதற்குள் வெளியே போயிருந்த காஞ்சனு வந்து விட்டாள். அவளிடம், சுந்தரர் சொன்னதைக் கூறினுள் செல்லம். அவ்வளவுதான், தனது தாயை கனல் தெறிக்கப் பார்த்தாள் காஞ்சனு. அந்தப் பார்வையின் பொருளை செல்லமும் அறிந்து கொண்டாள். சுந்தரரும் அறிந்து கொண்டார். என்றுலும், அவர் தன்னம்பிக்கையை இழக்கவில்லை.

''காஞ்சனு....! என்னைப் பற்றி உனக்குத் தெரியாது. ஆனு, உன் அம்மாவுக்குத் தெரியும்....நான் உன் நன்மைக்குத் தான் சொல்றேன்!'' என்றுர்.

வாயில் புன்னகை மலர சுந்தரம் பிள்ளையைப் பார்த்தாள் காஞ்சனு. அந்தப் புன்னகையைக் கண்டதும், அவர் உள்ளம் குளிர்ந்தது.

"நீங்க பெரிய மனுஷங்க. உங்களுக்கு இது வெல்லாம் சின்ன விஷயமாக இருக்கும். அதனுலே இப்படிச் சொல் றீங்க. ஆனு....நாங்க வர்ரதுக்கு இல்லே....! நாங்க படுகிற கஷ்டத்தைப் பார்க்க உங்களுக்குப் பொறுக்கலே. உங்க இள கிய மனசைக் காட்டுது? ஆனு எங்களே மன்னிக்கனும்....!"

விநயமாக ஓடிவந்தன சொற்கள் காஞ்சனுவிட மிருந்து. 'உண்மைத்தான் சொல்ருளா, அல்லது மறை முகமாகக் கிண் டல் செய்கிருளா—' என்று ஒரு கணம் எண்ணினுர். என்ரு லும் அவர் விடவில்லே.

"அப்ப, நீங்க இங்கேயே இருக்கப் போறீங்க?"

"ஆம்," என்று தலேயை ஆட்டினுள் காஞ்சனு.

அதற்குமேல் அவர் ஒன்றும் கேட்கவில்லே. வேறு விஷ யங்களேப் பற்றிப் பேசி விட்டுப் போய் விட்டார். என்ருலும், 'இந்தப் புள்ளிமானே என் பொறியில் சிக்க வைக்காமல் விட மாட்டேன்!' என்று சபதம் செய்து கொண்டார்.

மறுநாள் அங்கு சென்ற போது, காஞ்சனு உள்ளே வேலேயாக யிருந்தாள். செல்லத்துடன் பேச்சைத் துவங் கினுர் சுந்தரம்பிள்ளே.

"செல்லம், பழைய நட்பு, அந்தக் காலத்தில் நீ செய்த சேவை இப்படி யெல்லாம் பேசச் சொல்லுது. நடக்கச் சொல் லுது. என் மனம் கேட்கலே—" என்று சொல்லி, ஐந்து ரூபா உள்ள இருபது நோட்டுகளடங்கிய பணத்தை செல்லம்மாளி டம் கொடுத்தார்.

செல்லத்தின் மனம் போராடத் துவங்கியது. அந்த நோட்டுக்களேக் கண்டு எத்தனே நாட்கள் ஆகின்றன—! ஆனுல்....ஆனுல்....

"என்ன செல்லம் நீ யோசிக்கிறே? மனசிலே ஒண்ணுமே நான் நினைக்கலே. நீயும் நினைக்காதே. சும்மா இதைச் செல வுக்கு வைச்சுக்கோ.....!"—என்று வற்புறுத்தத் துவங்கினர்.

சுந்தரரின் வற்புறுத்தும், வீட்டில் நிலவும் வறுமையும், தான் தொழில் நடத்திய காலத்தில் அவரிடமிருந்து அடிக்கடி பணம் வாங்கிய பழக்கமும், செல்லம்மாவின் இதயத்தை வளைந்து கொடுக்கச் செய்தது. பணத்தை வாங்கிக் கொண் டாள். சுந்தரர் கொஞ்ச நேரம் இருந்து விட்டு வெற்றிச் சிரிப் புடன் வெளியேறினர்.

பணம் கொடுத்த அன்றைய தினத்துக்குப் பிறகு தின மும் வருவதை நிறுத்திவிட்டு வாரத்துக்கு ஒரு முறை வரத் துவங்கினர். வரும் சமயங்களில் பத்து முப்பது என்று பணம் கொடுப்பார். இதைக் காஞ்சன விரும்பவில்லை. அம்மாவுடன் சண்டைக்குப் போனுள். அவர் தரும் பணத்தை வாங்கக் கூடா தென்று வற்புறுத்தினுள். ஆனல், அதை செல்லம்மா கேட்கவில்லை. "உனக்குத் தெரியாது. அவர் தங்கமான மனுஷர்.....தவிரவும் அவர் எனக்குப் பணம் தரக் கடமைப் பட்டவர்" என்று சொல்லி விட்டாள். தன் தாயாரின் அறியா மையைக் கண்டு உள்ளம் பொருமினுள், காஞ்சன.

ஒரு நாள்—

சாயங்கால வேளை காரை எடுத்துக் கொண்டு சோழபுரத் துக்குக் கிளம்பினர் சுந்தரர். காரை வழக்கமாக நிறுத்தும் இடத்தில் விட்டு விட்டு காஞ்சனவின் வீட்டுக்குள் நுழைந்தார். மறுவிநாடி அப்படியே சிலையாகி நின்றுர். அதே சமயம், அங்கிருந்த ஆனந்தனும் அவரைப் பார்த்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர், இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு அப்படியே நின்று கொண்டிருந்தனர். இதற்குள் உள்ளேயிருந்து வந்த செல்லம்மா, "வாங்க!" என்று வரவேற்றாள். சுந்தரர் உள்ளே வந்து அங்கு கிடந்த நாற்காலியில் அமர்ந்து ஒரு அர்த்தம் நிறைந்த பார்வையை அவள் மேல் பாயவிட்டார். செல்லம்மாள் அதையெல்லாம் கவனிக்கவில்லை.

ஆனந்தன் பக்கம் திரும்பிக் கொண்டே, "இவன் தான் என் மகன் ஆனந்தன். தம்பி, இவர்தான் சுந்தரம்பிள்ளை யென்பவர். பெரிய பணக்காரர். நீ தான் கேள்விப்பட்டிருப்பாயே....! உபகாரி, உத்தமர்!" என்று இருவரையும் அறிமுகப் படுத்தி வைத்தாள்.

சுந்தரர் "அப்படியா....!" என்று ஒரேவார்த்தையில் சொல்லிவிட்டு, ஆனந்தனைப் பார்த்து புன்னகை செய்தார். அதிலே விஷம் கலந்திருந்தது.

ஆனந்தனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தனது தாயாரின் கபடில்லாத உள்ளத்தைக் கண்டு மீண்டும் மீண்டும் சிரிப்புத் தான் வந்தது. அதை உள்ளடக்கிக் கொண்டான். 'பெண்களின் உள்ளம் ப்ளாட்டிங் பேப்பரைப் போன்றது. கருப்போ, சிகப்போ, பச்சை, நீலமோ—எந்த நிற மையாக இருந்தாலும் அது இழுத்துக் கொள்வது போல, கருப்புள்ளம் கொண்டவர்களையும் தன்னுள் இழுத்துக் கொள்கிறது'—என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

சுந்தரருக்கு என்னவோ, அங்கிருக்கப் பிடிக்கவில்லை "வேலை யிருக்கு நான் வர்றேன்!"—என்று கூறிக்கொண்டு எழுந்தார்.

சுந்தரரைச் சுமந்து கொண்டு சென்ற காரின் சக்கரங்கள் எவ்வளவு வேசமாகச் சுழன்றதோ, அதைவிட வேகமாக அவருடைய சிந்தனை சுழன்றது.

சுந்தரருக்கு, ஆனந்தனை நன்றாகத் தெரியும். தன் கட்சிக்கு எதிரானவர்கள் என்ற முறையிலே கம்யூனிஸ்டுகளின் மேல் தீராத பகை கொண்டிருந்தாலும், ஆனந்தனைமட்டும் அரசியல் எதிரியாக மட்டுமல்ல, தன் சொந்த எதிரியாகவும் பாவித்து வந்தார். ஆனந்தனை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிட வேண்டும். 'பொதுஜன செல்வாக்கு' என்ற மேட்டிலிருந்து கீழே தள்ளிவிடவேண்டும்—என்றெல்லாம் நினைத்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டவர்களில் சுந்தரம்பிள்ளை முதன்மையானவர்.

காங்கிரஸ் போர்வைக்குள் மறைந்து 'தில்லு முல்லுத் தனம்' செய்து, ஊர் சொத்தைக் கொள்ளையடிக்கும் சில 'குட்டித் தலைவர்கள்' மதுரை ஜில்லாவிலே இருந்தனர். அவர்களுக்கெல்லாம் ஆனந்தனைக் கண்டால் நடுக்கம். அவர்களிலே சுந்தரரும் ஒருவர். ஆனந்தனை நினைத்தாலே, நடுக்கம் மட்டுமல்ல, உள்ளமும், உடம்பும் எரியும். அவர், தன்னுடைய அரசியல் செல்வாக்கை மூடு திரையாகக்கொண்டு செய்துவரும் திருவிளையாடல்களை, அப்படியே மக்கள் முன் எடுத்துக் காட்டுவான். தலையிலே காந்திக்குல்லாயும், நாவிலே வந்தே மாதரமும், மேனியிலே, கதர் உடையும் அணிந்து கொண்டு கருத்திலே கள்ள நினைப்புக் கொண்டோராய், மக்களிடையே உலவும் அவர் தம் போக்கைப் புட்டுப் புட்டுக் காட்டுவான். ஆனந்தனின் சொல் வீச்சிலே, சுந்தரம்பிள்ளைகளின் திருட்டுத்தனங்கள் அப்படியே அம்பலத்துக்கு வந்துவிடும். சீறிப் பாயும், பண்புபெற்ற சுந்தரரும், அவர் தம்

சகாக்களும், மக்களுடைய சிந்தனைக்கு, தமது சிறுமைத் தனங்கள் எடுக்கப்படுகிறதே என்று அங்கலாய்ப்பர். ஆனந் தன்மீது வசைமாறி பொழிவர். இந்த வகையில் ஆனந்த னைப் பகைவனுகக் கொண்டு வாழ்ந்தனர். அவர்களிலே சுந்தர ரும் ஒருவர்.

ஏற்கனவே, எதிரியாக இருந்துவரும் ஆனந்தன் இப் போது காஞ்சனுவின் சகோதரன் என்று அறிந்ததும் அவ ருடைய நெஞ்சிலே ஒரு நெருப்புருண்டை கிடந்து புரள்வது போலிருந்தது. எந்தக் கட்டழகியைத் தன் ஆசைக்கனலுக் குச் சாந்தியளிக்கும் குளிரோடை என்று எண்ணியிருந்தாரோ அவளுடைய சொந்தச் சகோதரன் தன்னுடைய பகைவர்களில் முதல்வனுகிருன். இந்த நிலைமையில் காஞ்சனுவைக் கட்டி லறைக்குச் சொந்தமாக்க முயற்சிப்பதை ஒரு கணம், சிந்தித் தார். திருட்டுத்தனமாகக் கனி பறிக்கச் சென்றவன், சவுக் கும் கையுமாக தோட்டத்திலே அதன் சொந்தக்காரன் நிற்ப தைக் கண்டால், அவன் மனம் எப்படியிருக்குமோ அப்படி யிருந்தது சுந்தரம்பிள்ளையின் மன நிலை. ‘காஞ்சனு நம் கைக் குச் சொந்தமாவதென்ருல், ஆனந்தன் அழியவேண்டும். ஆம், நமது பொறியில் அந்தப் புள்ளிமான் சிக்கவேண்டுமானுல், இந்தப் புலி புதை குழிக்குள் போகவேண்டும். ஆனந்தன், அந்த அஞ்சுகத்துக்குக் காவலாக இருக்குமட்டும் நம் ஆசை யும் கிணற்றில் போட்ட கல்லுத்தான்..........?ம்....காஞ்சனு வுடன் கொஞ்சிக்குலாவும், அந்த நல்லிரவு-நான் எதிர்பார்க் கும் அந்த இன்ப இரவு-எப்போது வருமோ ?'' என்று பல விதமான சிந்தனைகளிடையே மூழ்கிக் கிடந்தார் சுந்தரம் பிள்ளை.

* * * *

# 4. அன்பும் ஆதரவும்

அழகேசனுக்கு, மலேயாவில் உறவினர்கள் உண்டு. அந்த உறவினர்களில் ஒருவர் வீட்டிலே திருமணம். அங்கு வரும்படி அழகேசனையும், செல்லப்பரையும் வேண்டிக்கொண்டிருந்தார்கள். செல்லப்பர் போக வசதியில்லை. எனவே அழகேசனைமட்டும் அனுப்பி வைத்தார்.

மலேயாவுக்குச் சென்ற அழகேசன் உடனே திரும்பவில்லை. மலாய் நாட்டையும், அதை அடுத்திருக்கும், இந்தோனிஷியத் தீவுகளையும், ஹாங்காங், சியாம், பர்மா - இப்படி கிழக்கு நாடுகளையும் சுற்றிக் கொண்டிருந்து விட்டு, ஒரு வருஷம் கழித்துதான் ஊர் திரும்பினான்.

சென்னையில் வந்து இறங்கிய மறுவாரமே, ஆனந்தனின் வீட்டுக்குச்சென்றான். அவன் அங்கில்லை. விசாரித்ததில், அவர்கள், மதுரையை அடுத்த கிராமத்திலிருப்பதாகத் தெரியவந்தது. உடனே மதுரையில் வந்து விசாரித்தான். சோழபுரத்திலிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

அன்று, மாலை சோழபுரத்தை நோக்கி நடக்கத் துவங்கினான்.

அழகேசன் சோழபுரத்தை அடையும்போது இருட்டிவிட்டது. கார் மேகங்கள் வானமெங்கும் சூழ்ந்தன. மின்னல் பளிச்சிடத் துவங்கியது. இடிமுழக்கம் எங்கேயோ தூரத்தில் கேட்டது. குளிர்காற்றுடன் தூற்றல் சிறிது சிறிதாக விழத் துவங்கியது.

அழகேசன் ஊருக்குள் நுழையும்போது, சுழன்றடிக்கும் காற்றுடன் மழை கொட்டத் துவங்கிவிட்டது. 'சோ' என்ற

இறைச்சல் எங்கும் பரவியது. கருமேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. அந்த மோதுதலின் முழக்கம் காதைத் துளைத்தது. பளிச்சிடும் மின்னலின் ஒளி விழிகளை வெட்டி இழுத்தது. காட்டிலும், மேட்டிலும், வயல்புரத்திலும் கிடந்த முட்செடிகளையும், வண்டல்களையும் வாரி அணைத்துக் கொண்டு வெள்ளம் ஊருக்குள் பாய்ந்து கொண்டிருந்தது. சேறும், சகதியும் ஒன்ருகக் கட்டிப் புரண்டன. கள்ள மார்க் கெட்காரரின் இதயத்தைப் போல அந்தக் கிராமம் முழுதும் இருண்டு கிடந்தது. நடை பாதை தெரியவில்லை. வெள்ளத் தில் மூடுண்டு கிடந்த பள்ளமும், சிறுபாறையும், சிறு சிறு மணல் திட்டுகளும் அழகேசனின் நடைக்குத் தடை விதித் தன. அவனுல் நடக்கமுடியவில்லை. சிறிது தூரத்தில் வெளிச் சம் மின்னியது. அது ஒரு வீடாக இருக்கலாம், வெளியில் தங்கி, மழை விட்டதும் போகலாம் என்ற எண்ணத்துடன் அந்த வெளிச்சம் வந்த வீட்டை நோக்கி விரைந்தான்.

அது ஒரு சிறிய திண்ணை வீடு. திண்ணைக்குமேல் உள்ள சுவரின் ஜன்னலால் சிறிது வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அந்த வீட்டின் முன் ஹாலிலிருந்து யாரோ ஒரு பெண்ணின் முனகல் சத்தம் கேட்டது. 'யாரோ நோயின் உபாதை தாங் காது அரற்றுகிருள்' என்று எண்ணி அவன் தன் பார்வையை ஜன்னலின் வழியே பாயவிட்டான். ஆனுல், அடுத்த விநாடி தன் பார்வையை 'வாபஸ்' வாங்கிக் கொண்டான். தான் அப்படிப் பார்ப்பது தவறு என்று தெரிந்தது.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். யாரோ ஒருபெண் கத வைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். அவளைக் கண்ட தும், திண்ணையின் ஓரத்தில் ஒதுங்கினுன். வந்த அந்தப் பெண் அழகேசனை ஒருமுறை உற்றுப் பார்த்தாள். என்ன

நினைத்தாளோ, உள்ளே சென்று 'ஹரிக்கேன்லைட்' எடுத்துக் கொண்டுவந்தாள். அந்த வெளிச்சத்தில் தண்ணீர் சொட்டு விழும் நனைந்த ஆடைகளுடன் அழகேசன் நிற்பதைக் கண்டதும் அவளுடைய முகத்திலே இரக்கத்தின் சாயை படர்ந்தது. தலைமயிரிலிருந்து வழிந்தோடும் தண்ணீர் முகத்திலே விழுவதைக் கூடக் கவனியாமல், அந்தப் பெண்ணைக் கண்டு மிரள மிரள விழித்தான். இதைப் பார்த்த அந்தப் பெண்ணுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அதை அடக்கிக்கொண்டு, 'இங்கே நிற்கவேண்டாம் உள்ளே வாருங்கள்' என்றாள்.

அவளுடைய அழைப்பிலே ஆதரவு மிளிர்ந்ததைக்கண்டு அழகேசன் ஆச்சர்யப்பட்டான். அவளுடைய அழைப்புக் கிணங்கி உள்ளே போவது சங்கடமாக இருந்தது அவனுக்கு! தயங்கினான். இந்தத் தயக்கத்தைக் கண்ட அந்தப் பெண், 'மழை இப்போது விடாது. அதுவரைக்கும் சாரலடிக்கும். இந்தத் திண்ணையில் நனைந்த ஆடைகளுடன் நின்றால் உடம்புக்காகாது!' என்றாள்.

அப்போதுதான் அந்தப் பெண்ணைச் சில விநாடிகள் பார்த்தான். அன்பும், ஆதரவும், அக்கறையும் சூழ்ந்து நின்ற அவளுடைய வார்த்தைகளை ஒருகணம் நினைத்துப் பார்த்தான். பல எண்ணம் அவன் உள்ளத் திரையில் ஓடத் துவங்கின. 'முன்பின் தெரியாத ஒரு ஆடவனை மழையும், இருட்டும் கூடிக் கும்மாளம் போடும் அந்த வேளையில் ஒரு இளம் பெண் வீட்டுக்குள் அழைப்பதென்றால்?—

ஒருவேளை இவள்—?சே, பார்வைக்குக் குடும்பப் பெண்ணாக இருக்கிறாளே? பரத்தையாக இருந்தால் மேனியெங்கும் பகட்டுப் பளிச்சிடுமே....? பேச்சிலே மயக்குப் பொடிகள் தூவப்பட்டிருக்குமே....? இவளுடைய வார்த்தைகளில் மயக்

குப் பொடிகளா இருந்தன—? இல்லை ....அன்பு, ஆதரவு இருந்தது....!'

நின்றபடியே நீண்ட ஆலோசனையில் மூழ்கிக் கிடந்த அழகேசனைப் பார்த்ததும் அந்தப் பெண்ணின் முகத்திலே வாட்டம் வலைபின்னத் துவங்கியது. ஒரு பெருமூச்சுடன் 'உங்கள் யோசனையைப் பார்த்தால்—? நாங்கள் அப்படிப் பட்டவர்களல்ல' என்றாள்.

வேதனையுடன் புறப்பட்ட அந்த வார்த்தைகளைக் கேட்டதும், அழகேசனுக்கு என்னவோ போலிருந்தது. தன்னுடைய தவறான எண்ணத்தைக் கடிந்து கொண்டான்.

"வருகிறீர்களா!" என்றாள், திரும்பவும். அழகேசன் தலையை அசைத்துக்கொண்டே அவள் பின்னால் சென்றான். உள்ளே போனதும் ஒரு நாற்காலியில் அவனை உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

அவள் திரும்பி வரும்போது அவள் கையில் உலர்ந்த வேஷ்டியும் துண்டும் இருந்தன. அதை அழகேசனிடம் கொடுத்துக் கொண்டே "நீங்கள் உடுத்தியிருக்கும் துணியைக் கொடுங்கள். பிழிந்து கொடியில் உலரப் போடலாம்" என்றாள். அழகேசன் ஒன்றுமே பேசாமல் அவள் சொன்னபடியே செய்தான். அந்தப் பெண்ணே, நனைந்த அந்த ஆடைகளைப் பிழிந்து கொடியில் உலரப்போட்டு விட்டு மீண்டும் உள்ளே சென்றாள்.

'அன்பான உபசரிப்பு! இதன் அர்த்தம்—? சே திரும்பவும் அப்படி நினைப்பதா? தவறு—நான் மழையில் நனைந்து கொண்டிருப்பதை அவள் மனம் சகிக்கவில்லை! மனதிலே இரக்கம் உள்ளவர்கள் இந்த உதவியை—உபசரிப்பைச் செய்வார்கள். ஒரு

ஆடவன் இதைச்செய்திருந்தால் தவருக எண்ணமாட்டோம். ஒரு பெண் செய்வதால்தானே இந்தத் தவருன எண்ணங்களுக்கு இதயம் இடம் கொடுக்கிறது. சே! நமது பெண்கள் எந்த நெருக்கடியிலும், ஒரு ஆடவனுக்கு உதவக் கூடாதா?'

சிந்தனை வண்டு அவன் மூளையிலே மொய்க்க, அந்த ஹாலைச் சுற்றித்தன் விழிகளைச் சுழற்றினுன். ஒரு சுவரோரத்தில் மேசை ஒன்று இருந்தது. அதன்மேல் பல புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்தச் சுவரிலே ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. விளக்கின் ஒளி மங்கலாக இருந்ததால் அந்தப் படத்தில் இருப்பவர் யார் என்று தெரியவில்லை. அந்த ஹாலின் கோடியில் ஒரு அறை இருந்தது. அங்கே ஒரு கட்டிலில் யாரோ படுத்திருப்பது தெரிந்தது. இடையிடையே அங்கிருந்து முனகல் சத்தம் வந்து கொண்டிருந்தது.

"சூடான காப்பி; இந்தக் குளிருக்கு சுறு சுறுப்பாக இருக்கும்!"—என்று சத்தம் வந்ததும் திரும்பினுன். அவள் ஒரு காப்பி டம்ளருடன் நின்று கொண்டிருந்தாள்.

காப்பியைக் குடித்து முடித்ததும் "இந்த உபகாரத்துக்கு என் நன்றி" என்ருன் அழகேசன். அந்தப் பெண் ஒன்றுமே பேசாமல், சுவரில் மாட்டப்பட்டிருந்த விளக்கின் சுடரைத் தூண்டினுள்.

வெளியே, இடி முழக்கமும், மழையின் பலமான இறைச்சலும் கேட்டுக்கொண்டே யிருந்தன. திறந்திருந்த ஜன்னலை மூடிவிட்டு, "நீங்கள் வெளியூரா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"ஆமாம்.... !" என்ருன் அழகேசன்

"இந்த நேரத்தில்....?"

"இருட்டுவதற்கு முன்னுல் வந்து விடலாமென்று எண்ணினேன். எதிர் பாராதவிதமாக மழையில் மாட்டிக்கொண்டேன்."

அந்தப் பெண் இந்த வார்த்தைகளைக் காதில் வாங்காதவளைப்போல் ஹாலின் கோடியிலிருக்கும் அறையினுள் தன் பார்வையைச் செலுத்தியிருந்தாள்.

"பெய்யும் வேகத்தைப் பார்த்தால், விடிந்தால் கூட இந்த மழை நிற்காது போலிருக்கே....!" என்று முணுமுணுத்தான் அழகேசன். இதை அவள் கவனித்திருக்கவேண்டும். "ஆமாம் அப்படித் தான் தோன்றுகிறது" என்று சொல்லி விட்டு உங்களுக்குத் தெரிந்தவர்கள் இங்கு இருக்கிருர்களா?" என்று இரண்டாவது கேள்வியை விட்டெறிந்தாள்.

"ஒருவர் மட்டும்தான் இருக்கிருர். அவரைத் தேடித் தான் வந்தேன்"

"இதற்கு முன் இந்த ஊருக்கு வந்திருக்கிறீர்களா?"

"இதுதான் முதல் தடவை!"

"அப்படியானுல், அவருடைய வீடு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

அவன் மௌனமாக இருந்தான். ஆனுல் அந்தப் பெண், அவன் மௌனத்தைக் கலேத்தாள்.

"அவருடைய வீடு உங்களுக்குத் தெரியாதா?"

'ஆம், ஆனுல் விசாரித்தால் தெரிந்து விடும்!'— என்று எதையோ நினைத்துக்கொண்டு சொன்னுன்.

"அவர் எங்களுக்கும் தெரிந்தவராக இருக்கலாம்" என்ருள் அந்தப் பெண். அழகேசன் ஏதோ சிந்தனையில் சில

நிமிடங்கள் இருந்தான். பிறகு, "அவனை எல்லோருக்கும் தெரியும்! ஒருவேளை உங்களுக்கும் தெரிந்திருக்கலாம்!" என்றான்.

"அவருடைய பெயர்?"

"ஆனந்தன்!"

இந்தப் பெயர், அழகேசனின் வாயிலிருந்து புறப்பட்டதும். "ஆனந்தனு....!" என்று ஆச்சர்யத்தால் கூவினுள். அழகேசனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. "உங்களுக்கு அவனைத் தெரியுமா?" என்று படபடப்புடன் கேட்டான்.

இந்தக் கேள்வி அந்தப் பெண்ணை மோதியதும், அவளுடைய கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்தது. அதைக் கண்ட அழகேசனுக்கு ஆச்சரியமும், சந்தேகமும் பஞ்சு மூட்டையில் பட்ட தீயைப்போல் வேகமாகப் பரவத் துவங்கியது.

"அவனை உங்களுக்கு எப்படித் தெரியும் ?"

"அண்ணனைத் தெரியாத தங்கை இருக்க முடியுமா?"— என்று கேட்டு விட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தன்னை உபசரித்து அன்பும் ஆதரவும் காட்டிய அந்தப் பெண் ஆனந்தனின் தங்கை யென்பதையும், தேடிப்போன மூலிகை காலில் சிக்கியதைப்போல ஆனந்தனின் வீட்டிலேயே தான் தங்கியிருப்பதையும் அறிந்த அழகேசனுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஆனந்தனுக்கு ஒரு தங்கையுண்டு என்பதை அழகேசன் அறிவான். ஆனல், அவளைப் பார்த்தது கிடையாது. அப்போதுதான் காஞ்சனவை நன்ருகக்

கவனித்தான். அவளுடைய சிவந்த மேனியை எந்த ஆபரண மும் அலங்கரிக்கவில்லை. தங்கச் சிலை போலிருந்த அவளி டத்திலே அடக்கமும், முகத்திலே குளுமையான பாவமும் குடிகொண்டிருந்தன. ஏழ்மையின் முழு ஆட்சி மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக அவள் உடுத்தியிருந்த சேலையின் சில பகுதிகளில் 'ஒட்டுத் துணி' போடப்பட்டிருந்ததைக் கண்டதும், அழகேசனின் உள்ளம் வேதனையால் தகித்தது. அதைக் காட்டிக்கொள்ளாமல்,

"ஆனந்தன் எங்கே?"—என்ருன்.

"தலை மறைவாகத்திரிகிருர். எப்போதாவது வருவார்; உடனே போய் விடுவார்!"—என்ருள் குரல் தழுதழுக்க.

அழகேசனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஒரு பொன் னுலகத்தைச் சிருஷ்டிக்கப் போராடும் முன்னணி வீரர்களில் ஒருவன் ஆனந்தன். கட்சி தடை செய்யப்பட்டதும் தலைமறை வாக யிருந்து தொண்டாற்றுகிருன். இனி எப்போது காண் பது? எங்கே காண்பது?

இந்தக் கேள்வி உள்ளத்தில் ஏறிநிற்க மீண்டும் காஞ்சன வையும், அந்த வீட்டையும் மாறி மாறிப் பார்த்தான். இவர் களுக்கு ஆதரவாக ஆனந்தன் மட்டும்தானிருந்தான். இப் போது அவனும் வெளியில். இந்த நிலையில் இவர்கள் எப்படி நாட்களை ஓட்டியிருப்பார்கள்—என்பதை சில நிமிடங்கள் கற் பனை செய்து பார்த்தான். அவன் நெஞ்சை வேதனைப் புழு அரித்தது. காஞ்சனவின் மேனியிலே தவழ்ந்த அந்த ஒட்டுப் போட்ட சேலையை மீண்டும் பார்த்தான். 'ஆனந்தன் தியாகத் தீயிலே புடம்போடப்படுகிருன். இவர்கள் இங்கே-வீட்டிலே-வறுமைத் தீயிலே பொசுங்குகிருர்கள்;'—இதை நினைக்கும் போது அழகேசனின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று.

அன்று, ஒருநாள் சுந்தரம்பிள்ளையும், ஆனந்தனும் அவர்கள் வீட்டிலே சந்தித்தார்களல்லவா? அன்றே ஆனந்தன் எல்லா விஷயங்களையும் தன் அம்மாவிடமிருந்து கேட்டறிந்துகொண்டான். "இனி சுந்தரம்பிள்ளையை இங்கு வரவேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்லிவிடு காஞ்சனு. ஒரு பைசாக்கூட அவரிடமிருந்து வாங்கக்கூடாது—" என்று கண்டிப்புடன் எச்சரித்தான். அன்றிலிருந்து சுந்தரர் வருவதையும் காஞ்சனு தடுத்துவிட்டாள். எனவே, அவரிடமிருந்து பணமும் பெயரவில்லை. பழையபடி சோற்றுக்குத் தாளம் போடும்படி வந்துவிட்டது. இது எல்லாம் அழகேசனுக்கு எங்கே தெரியப்போகிறது. அவனுடைய சிந்தனை காஞ்சனுவைத்தான் சுற்றிச் சுழன்றது.

அவள் நினைத்திருந்தால் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்க அவசியமில்லை. செல்வத்தில் புரளலாம். இந்த எழிலரசி எண்ணியிருந்தால், ஏழ்மையின் கொட்டிலிலே துவண்டு இதயம் நோகத் தேவையில்லை, இன்பத்தை எப்போதும் சுவைத்துக்கொண்டிருக்கலாம். காஞ்சனுவின் வேல் போன்ற அந்த விழிகள் சற்று அசைந்தால் டால் அடிக்கும் வைர நகைகள் அவள் பொன் மேனியை அலங்கரித்திருக்கும். அவளுடைய பஞ்சுபோன்ற அந்த அதரங்கள் புன்சிரிப்புடன் சில வார்த்தைகளை உதிர்த்தாலே போதும். பட்டுச் சேலைகள் விதவிதமாக அவள் உடலை மூடியிருக்கும். அவள் வாழ்க்கையை உயர்ந்த கண்ணேட்டத்தில் பார்க்காமலிருந்திருந்தால், இந்த மண் குடிசையில், தரையில் கிடக்கும் ஓலைப் பாயில் படுத்துறங்கத் தேவையில்லை. மாளிகையிலே, மனங்கவர் சூழ்நிலையிலே, பட்டு மெத்தை கொண்ட சந்தனக் கட்டிலிலே படுத்துருளலாம். ஆனுல் அவள் தன் மானத்தை—அழகை—

உல்லாசிகளுக்கு விலை கூறி விற்க விரும்பவில்லை. அப்படி அவள் செய்திருந்தாலும் 'அது பாபமா'க்கப்பட்டிருக்காது தவருகத் தெரியாது இந்தச் சமுதாயத்திற்கு; வேசி குலத்தி லுதித்தவள்தானே? ஆனல்—

அழகும், கட்டமைந்த உடலும், இளமைப் பருவமும் உல்லாசிகளுக்கு விற்கப்பட்டுவிட்டால்—அவர்களுடைய இன் பக் கருவியாக மாறினல்—வாழ்க்கை உண்டு; வளம் உண்டு, இன்பம் உண்டு, இல்லையேல் இந்த ஒட்டுத் துணிதான்; இந்த மண் குடிசைதான். வறுமையும், வேதனையும் கூட்டுத் தோழிகள்தான். தன் 'குலம்' காட்டிய குறுக்கு வழியில் வாழ அவள் விரும்பவில்லை, நேர்மையான—நாகரிகமான—தன்மானமுள்ள வாழ்க்கையைத்தான் விரும்பினுள். அதன் விளைவு?—

"நீங்கள்....?" முடிவு பெருத கேள்வியின் ஒலி வந்த பிறகுதான் சிந்தனையிலிருந்த அழகேசன் தன் நினைவிற்கு வந்தான். "நான் ஆனந்தனுடைய நெருங்கிய தோழன். என்பெயர் அழகேசன்" என்ருன்.

அழகேசன் தன் பெயரைச் சொன்னதும் காஞ்சனுவின் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளியது. அழகேசனைப் பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிருன் ஆனந்தன். அழகேசனல் எழுதப்பட்ட அஞ்சல்களைப் படித்திருக்கிருள். தன் அண்ணு வுடன் நெருங்கிய நட்புரிமை பாராட்டும் ஒருவன்—உன் குடும் பத்திலே நானும் ஒரு உறுப்பினன் என்று எண்ணிக்கொள்— என்று தன் அண்ணனுக்கு எழுதிய ஒரு சிறந்த நண்பன்— உன் சுக துக்கங்களிலே எனக்கும் பங்குண்டு—என்று மடல் தீட்டிய ஒரு தோழன்—"ஆனந்தா நான் செய்யும் எந்த உதவி யையும் வித்தியாசமாக எண்ணுதே, உனக்கும் உன் குடும்

பத்துக்கும் உதவி செய்வதைக் குறித்துப் பெரு மகிழ்ச்சி யடைகிறேன்" என்று தன் நட்பின் ஆழத்தைத் திறந்து காட்டிய ஒரு சிநேகிதன்—"ஆனந்தா, சமுதாய மாற்றத்தை புத்துலகைக்காணப் போராடும் உன்னைப்போன்ற தன்னலமற்ற இலட்சியவாதிகளின் வாழ்க்கை உடைந்த கண்ணாடித் துண்டுகள் நிரப்பப்பட்ட பாதையாகத்தான் இருந்திருக்கிறது. அதிலே அவர்கள் நடந்து சென்றார்கள். அந்தக் கண்ணாடித் துண்டுகள் அவர்களைக் குத்திக் காயப்படுத்தின. ஆனால் அவர்களில் சிலருக்கு, அந்தக் காயங்களுக்கு மருந்து வைத்துக் கட்டும் டாக்டர்களைப் போல சில நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். உனக்கு நான் கிடைத்திருக்கிறேன். இதற்காக நான் எவ்வளவு சந்தோஷப்படுகிறேன் தெரியுமா? நான் பணவசதி படைத்தவன்தான். ஆனால் அந்த வசதி ஓரளவுக்கு உன் வாழ்க்கைக்கும் உதவுகிறது என்பதை நினைக்க என்மனம் பெரும் ஆறுதல் கொள்ளுகிறது" என்று அன்புச் சொற்களை நட்புக் கடிதத்தில்—தங்கத் தட்டிலே வைரத்தைப் பதித்திருப்பதைப் போல—பதித்து அனுப்பிய அந்த அன்புருவம்—தன்முன்னே உட்கார்ந்திருக்கிறது. இந்த அழகேசன் எப்படியிருப்பார், எப்படிப் பேசுவார்? என்று பல தடவைகள் நினைத்துப் பார்த்திருக்கிறாள். தனது கற்பனைத் திரையிலே அவருடைய உருவத்தை எத்தனையோ தடவைகளில் தீட்டிப் பார்த்திருக்கிறாள். கற்பனைத் திரையிலே தீட்டப்பட்ட அந்த அழகேசன் நனவுக் காட்சியாகத் தன் முன்னே உட்கார்ந்திருக்கிறார். அவரை நேரில் காண சந்தர்ப்பம் கிடைக்குமா என்று பலதடவைகளில் எண்ணியிருக்கிறாள். அப்படிப்பட்டவன் தன் எதிரே உட்கார்ந்திருக்கிறார்—என்று இவ்விதமெல்லாம் நினைத்தாள். அவளுடைய உணர்ச்சிகளெல்லாம் மகிழ்ச்சியினால் கும்மாளம் போடத்

துவங்கின. முகம் மலர்ந்தது. கண்களில் களி துள்ளிற்று. அவளுக்குப் பேச்சே வரவில்லை. தன்னையுமறியாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்து விட்டாள்.

"அந்த அறையில் படுத்திருப்பது யார்?"

அழகேசனிடமிருந்து இந்தக் கேள்வி வந்ததும் திடுக்கிட்டு விழித்தாள். அப்போதுதான் தன் நிலையை உணர்ந்தாள். அவளுடைய முகமெல்லாம் வெட்கத்தால் சிவந்துவிட்டது. தன்னை மெதுவாகச் சமாளித்துக்கொண்டு, "அம்மா காய்ச்சலாகப் படுத்திருக்கிருள்;" என்ருள்.

அழகேசன் எழுந்து அந்த அறைக்குள் சென்ருன். ஒல்லியான ஒரு உருவம் அந்தக் கட்டிலிலே கிடந்து சுரத்தின் உபாதை தாங்காது அரற்றிக் கொண்டிருந்தது. வறுமை கரையானைப் போன்றது. உள்ளத்தை மட்டுமல்ல, உடலைக் கூட அரித்துத் தின்றுவிடும்;—என்று ஒரு நாள் ஆனந்தன் சொன்னதை நினைத்துக் கொண்டான். அந்த வாசகம் எவ்வளவு உண்மையானது என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் அழகேசன்.

"டாக்டரிடம் காட்டவில்லையா?"

இந்தக் கேள்விக்கு காஞ்சனு பதில் அளிக்கவில்லை. வேதனை மிகுந்த ஒரு பெருமூச்சுடன் அறைக்கு வெளியே வந்துவிட்டாள்.

அழகேசன் தன்னை நொந்துகொண்டான். அவர்களுடைய நிலை டாக்டரிடம் காட்டக்கூடியதாகவா இருக்கிறது? இதைத் தெரிந்திருந்தும் இக்கேள்வியைக் கேட்டது தவறு—என்று நினைத்தான்.

மறுநாள் காலை எழுந்ததும் அவன் பார்த்த முதல் வேலை, மதுரைக்குச் சென்று ஒரு டாக்டரைக் கூட்டி வந்ததுதான். டாக்டர் செல்லம்மாவைப் பரிசோதித்து ஊசி போட்டார். அத்துடன் இன்னும் இரண்டொரு மருந்தைக் கொடுத்து, அதைக் கொடுக்கும் நோக்கத்தையும் குறித்துச் சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

டாக்டர் போனதும், கூடத்துக்குள் வந்தாள் காஞ்சனா. கூடத்துமேசையில் ஒரு பெரிய 'பார்சல்' இருந்தது. 'அது என்ன?' என்ற கேள்வி உள்ளத்தில் எழும்ப சில விநாடிகள் அங்கு நின்றாள். இதற்குள் செல்லம்மாவின் அறையிலிருந்து அழகேசனும் அங்கு வந்தான்.

"காஞ்சனா, அந்தப் பார்சல் உனக்குத்தான்"—என்றான்.

"எனக்கா?"

"ஆமாம். எடுத்துக் கொண்டுபோ!"

காஞ்சனா தயங்கினாள்.

"ஏன் தயங்கிறே....? ம்....எடுத்துக் கொண்டுபோ....!"

காஞ்சனா அதற்குமேல் சும்மா நிற்க வில்லை. பார்சலை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். அவசர அவசரமுடன் அதைப் பிரித்துப் பார்த்தாள். நாலைந்து சேலைகள், ஜாக்கட் துணிகள், சோப்பு, ஹார்லிக்ஸ்....இன்னும் பல சாமான்கள் அதற்குள்ளிருந்தன. அழகேசனின் தாராள உள்ளத்தை ஒரு முறை நினைத்துக் கொண்டாள். எல்லோரும் அழகேசனைப் போலிருந்தால், உலகம் சொர்க்க மாகிவிடும்! என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். அண்ணன் மேல் மட்டு மல்ல, தங்கள் குடும்பத்தின் மேல் கூட அழகேசன் அன்பும் அக்

கரையும் கொண்டிருக்கிறான். இதை எண்ணும்போது, அழகேசன் பால் அவளுக்கு மேலும் மதிப்பும், ஒருவித பாச உணர்ச்சியும் தோன்றின.

கூடத்துக்கு வந்தாள் காஞ்சனா. அழகேசன் ஒரு சிகரட்டைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

"எங்களுக்காக எவ்வளவோ சிரமப் படுகிறீர்கள்!"

காஞ்சனா இப்படிச் சொன்னதும், அவளை ஏறிட்டுப் பார்த்தான் அழகேசன். பிறகு மெதுவாகச் சிரித்தான்.

"பைத்தியம்.....! எனக்கு என்ன சிரமம். ஆனந்தன் இருந்தால் என்ன செய்வானோ, அதைத்தான் நான் செய்தேன். ஒரு நண்பனுக்காக இது கூடச் செய்யக் கூடாதா....?—என்றான்.

ஒரு வாரம் சென்றது. ஆனந்தனை ஒருமுறையாவது சந்திக்கலாம் என்றுதான் அங்கு தங்கினான். அவன் வரவில்லை. அநேகமாக இரவு நேரங்களில் வருவான் என்று கொட்ட கொட்ட முழித்துக் கொண்டிருப்பான். தன் அண்ணனுக்காக அவன் அப்படி விழித்துக் கொண்டிருப்பதைக்கண்டு, தானும் உறங்க மாட்டாள். இரவு முழுதும் பேசிக் கொண்டிருப்பாள். அழகேசன், தான் பார்த்த ஊரிலுள்ள பெண்களைப் பற்றியும், அங்குள்ள வாழ்க்கை முறை தன்னுடைய பயணத்தில் எதிர்ப்பட்ட ஆச்சர்யமான சம்பவங்கள் இவற்றைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருப்பான்.

இப்படிப்பல இரவுகள் தனித்திருந்திருக்கிறார்கள். அச்சமயமெல்லாம், அழகேசனின் அடக்கமான குணத்தையும், சிறந்த பண்பையும் எண்ணிதனக்குள் மெச்சிக்கொள்வாள். இச்சமயங்களில் சுந்தரம்பிள்ளையின் நினைவு வருவதுண்டு. அவருடைய

கள்ளச் சிந்தையையும், அழகேசனுடைய தூய சிந்தையையும் ஒப்பிட்டுப் பார்ப்பாள். பாலுக்கும் பாஷாணத்துக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது அவர்களிருவருக்கு மிடையில்.

எனக்கு ஒருவித பாது காப்புமில்லே. இரவு வேளே. தனியே இருக்கிறேம். என்னே எது வேண்டுமானுலும் செய்ய லாம். ஆனுல், அழகேசன் அப்படி ஒன்றுமே செய்யவில்லே. வித்தியாசமான வார்த்தை, பார்வை—ஒன்றுமே இது வரையில் இல்லே—

இப்படிச் சிந்திப்பாள், அவனுடைய அன்பான பேச்சு, அமைதியான செயல், தூய பண்பு, எல்லாம் காஞ்சனுவைக் கவர்ந்தன. சுருக்கமாகச் சொன்னுல், தன் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டாள்.

அழகேசனும் அப்படித்தான். தாசி வயிற்றிலே பிறந்த வளாக இருந்தாலும், அந்தக் குலத்தின் குறிகள்—அடையா ளங்கள்—காஞ்சனு விடமில்லாதிருப்பதைக் கண்டான். ஆனந் தன் எப்படி யிருந்தானே அதே போல இருந்தாள் காஞ்சனு. ஆனந்தனின் குலம்—அவன் தாயின் வாழ்க்கை எதுவுமே, அழகேசனின் நெஞ்சைக் குழப்பியதில்லே. ஆனந்தனின் உயர்ந்த குணம், அறிவு, ஆற்றல், தூய நடத்தை, உறுதியான உள்ளம் இவையெல்லாம் அழகேசனேக் கவர்ந்திருந்தன. எனவே மற்ற விஷயங்களே யெல்லாம் அவன் சிந்திப்பதில்லே. அது போலவே, காஞ்சனுவின் பின்னணியைப் பற்றி அவன் சிந்திக்கவில்லே. சுருக்கமாகச் சொன்னுல், அவளிடமிருந்த சிறந்த அம்ஸங்கள் அத்தனேயும் அழகேசன் நெஞ்சை அவள் பக்கம் சாய்த்து விட்டது.

இப்படி இருவரும் உள்ளுக்குள் காதலித்தார்கள். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும், இந்தக் காதலின் அறிகுறியை இருவரும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அன்று ஊருக்குக் கிளம்பத் தயாரானன். அவன் வரும் போது, தஞ்சையில், உழவர்களுக்கும், நிலச் சுவான்தார்களுக் குமிடையில் தகராறு முற்றி ஒரு போராட்டமே நடக்கக்கூடிய சூழ்நிலை யிருந்தது. தஞ்சை மாவட்டத்திலுள்ள கிஸான் சபைகளுடன் ஆனந்தனுக்கும் தொடர்புண்டு. அழகேசனுக்கும் தொடர்புண்டு. ஆனல் அழகேசன் தொடர்பு வைத்திருப்பது, வெளியே தெரியாது. இந்தச் சமயத்தில், ஆனந்தனை அங்கு சந்திக்கலாம், கிஸான் சபையைப் பற்றியும் அறியலாம் என்று எண்ணினன். அவன் வெளியூரில் ஓர் ஆண்டைக் கழித்ததால், இப்போதுள்ள நிலைமையை அறிய மாட்டான். எனவே எல்லா வற்றுக்கும் தஞ்சைக்குப் போக முடிவு செய்து விட்டான். அவன் போக ஆயத்தமானதும் காஞ்சனவுக்கு ஒன்றுமே ஓட வில்லை. இயந்திரம் போல் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கூடத்திலே செல்லம்மாவும் அழகேசனும் பேசிக்கொண் டிருந்தார்கள், ஆனந்தனைப் போலவே அழகேசனையும் கருதி விட்டாள். அந்த அளவுக்கு, அழகேசனின் செய்கையும் பேச்சு மிருந்தன.

"இனி எப்போ திரும்புவே தம்பி!"

"இரண்டு வாரத்துக்குள் திரும்பி வருகிறேன். ஆனந்தன் வந்தால் நான் இங்கு வந்ததைக் கூறுங்கள். அத்துடன் இன்னெரு விஷயமும் இருக்கு. என்று குரலைத் தாழ்த்திப் பேசத் துவங்கினன். "ஆனந்தனைப் போலீஸார் தேடிக் கொண்டிருக்

கிருர்கள். இந்த வீட்டையும் ரொம்பவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள். எனவே, ஆனந்தன் வரும் சமயங்களில் ரொம்பவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!'' என்ருன்.

இத்தனையையும் கேட்டுக் கொண்டு வந்த காஞ்சனு, மெதுவாகச் சிரித்தாள்,

''ஏன் காஞ்சனு சிரிக்கிறே?''

''இப்பவே அம்மாவுடைய நெஞ்சு பயத்தினுல் 'பட பட' என்று அடித்துக் கொண்டிருக்கு. உங்க பேச்சைக் கேட்டதும். இனி ஒப்பாரி வைக்கத் துவங்கி விடுவாள்....!''—என்ருள், காஞ்சனு.

''ஆமாம், தம்பி....!''எனக்கு என்னமோ நெஞ்சு 'பட பட' என்று அடிச்சுக் கொண்டுதானிருக்கு. ராத்திரிக்கூட கெட்ட சொப்பனம் கண்டேன். ஏன் இப்படி யெல்லாம் இருக்கவேணும்? நாமுண்டு, நம்ப வேலையுண்டு என்று இருக்லாமே....?''—என்று சொல்லிவிட்டு விழிகளில் பொங்கி நின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அவளுடைய தாயுள்ளத்தைக் கண்டு, அவன் உருகினுன். என்ருலும், அவளுக்குத் தைரிய வார்த்தைகள் சொல்லி விட்டு எழுந்தான்.

வெளியே வந்தான். காஞ்சனுவும் அவனைப் பின் தொடர்ந்து வந்து வாசலில் நின்ருள்.

''காஞ்சனு, நான் வரட்டுமா?''—என்ருன்.

அவளுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள் நின்று விட்டன. அவனை ஒரு

பார்வை பார்த்தாள். அந்தப்பார்வையில்தான் எத்தனை உணர்ச்சிகள்....பாவங்கள்....பொருள்கள்....''

அழகேசனுக்கும் என்னவோ போலிருந்தது. உடனே 'சடக்' கெனத் திரும்பி விறு விறு என்று நடக்கத் துவங்கினான். அவன் போனதிக்கையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் காஞ்சனா. அவளுடைய கன்னங்களில் கண்ணீர்த்துளிகள் உருண்டு கொண்டிருந்தன.

* * * *

## 5. ஆசையும் மோசமும்

தான் எதிர்பார்த்தபடியே நடந்தது குறித்து ஆச்சர்யப்படவில்லை சுந்தரர். ஆனந்தனை சந்தித்த அன்றே, தான் காஞ்சனா வீட்டுக்குப் போவதை நிறுத்தவேண்டி வரும் என்று தீர்மானித்துக்கொண்டார். தான் வருவதை அவன் விரும்பமாட்டான். தடை உத்தரவு போடுவான் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. என்றாலும் அடுத்த நாள் போனார். காஞ்சனா கண்டிப்புடன் சொல்லிவிட்டாள் "இனி இங்கே வர வேண்டாமென்று"

அன்றிலிருந்து அவள் வீட்டுப் பக்கம் போகவில்லை என்றாலும் காஞ்சனாவின் மேல் கொண்டுள்ள ஆசைத் தீ வர வர வளர்ந்து இப்போது கொழுந்துவிட்டு எரியத் துவங்கியது. இந்தக் கோமளவல்லியை எப்படிக் கொஞ்சுவது குலாவுவது என்பதுதான் அவருடைய சிந்தனையாகிவிட்டது.

ஒரு நாள். மாலை நேரம்—

சோழபுரத்திலிருந்து காரிலே வந்துகொண்டிருந்தார் சுந்தரம்பிள்ளே. நடுவழியில் காஞ்சனவைக் கண்டார். உடனே காரை நிறுத்தினர்.

"என்ன, காஞ்சன, இந்தப்பக்கம்....?"—என்று கேள்வியை விசினர், சுந்தரர்.

அவரைக் கண்டதும் காஞ்சனவுக்கு அருவருப்புத் தோன்றியது. என்ருலும் மரியாதைக்காக அவருடைய கேள்விக்குப் பதிலளிக்கவேண்டும் போலிருந்தது.

"மதுரைக்குப்போய் டாக்டரிடம் மருந்து வாங்கிக் கொண்டு வருகிறேன் ;"

"மருந்தா........! யாருக்கு ?"

"அம்மாவுக்கு."

"அம்மாவுக்கா....அவளுக்கென்ன........?"

"கொஞ்ச நாளா உடம்பு சரியில்லே........!"

"அப்படியா....! அதுசரி, ஏன் நடந்துபோகணும் ? பஸ் கிடைக்கவில்லேயா ?"

"இல்லே !" யென்று தலேயை ஆட்டினுள் காஞ்சன.

"என்ன இருந்தாலும் நீ நடந்து போகலாமா ? அப்படித்தான் என்ன குடி முழுகிப்போச்சு. ஒரு பஸ் கிடைக்காட்டா. அடுத்த பஸ் இருக்கு....! பருவமும், அழகும் நிறைந்த பெண்....! தன்னந் தனியே நடந்து வருவது நல்லாயிருக்கா? நாலு காவாலிப் பசங்க வழியிலே வளேச்சுக்கிட்டுத் தொல்லே கொடுத்தா என்ன செய்கிறது:.......?"

ரொம்பவும் அக்கரையும், அனுதாபமும் நிறைந்த தொனியில் பேசினார் சுந்தரர். காஞ்சனா ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

"ம்....சரி, காரிலே ஏறு. நான் கொண்டுபோய் விட்டு விட்டு வருகிறேன்"

அவள் ஏற வில்லை, நின்றுகொண்டிருந்தாள்.

"ஏன் நிற்கிறே....ஏறு....!" என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறந்தார்.

"உங்களுக்கு ஏன் சிரமம்? நான் நடந்தே போறேன்...." என்று நடக்கத் துவங்கினாள்.

"நீ ஒரு பைத்தியம்....; இதிலே என்ன சிரமம் இருக்கு...? ம்....ஏறு....; ஒரு பெரிய மனுஷன் சொல்றேன்!"

நடு வீதியிலே நின்றுகொண்டு தர்க்கம் செய்ய விரும்பவில்லை காஞ்சனா. எனவே காரில் ஏறி உட்கார்ந்தாள். மருகணம் மின்னல் வேகத்தில் பறந்தது, கார். ஆனால்—

கார் சோழபுரம் போகவில்லை. பத்து நிமிடங்களுக்குள், மதுரையில் ஒரு குறுகிய வீதியிலிருக்கும் பெரிய மாளிகைக்கு முன்னால் நின்றது கார். இதைக் கண்ட காஞ்சனாவுக்கு 'திக்' கென்றது. மாளிகையையும், சுந்தரரையும் மாறி மாறிப் பார்த்து விழித்தாள்.

சுந்தரம்பிள்ளை காரிலிருந்து இறங்கி, பின் கதவைத் திறந்துவிட்டு; "வா காஞ்சனா....?"—என்றார்.

அவள் விழிகளில் பீதி கூத்தாட, "நான் வீட்டுக்குப் போகவேணும், அம்மா தனியே காத்துக்கொண்டிருப்பாள்....?' என்றாள்.

"சோழபுரம் என்ன, டில்லியிலா இருக்கு? கால் மணி நேரத்துக்குள்ளே கிராமத்துக்குப் போய்விடலாம் .... என்ன அவசரம்....? இறங்கு! காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!"

காஞ்சனுவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. 'என்ன செய்வது?--அகப்பட்டுக்கொண்டோம். வினயமாக நடந்து வீடு சேர வேண்டியதுதான்'—என்று எண்ணியவளாய்க் காரை விட்டு இறங்கி சுந்தரம்பிள்ளையின் பின்னல் சென்றாள்.

அரண்மனை போன்று அலங்காரத்துடனிருந்த அந்த மாளிகையைக் கண்டதும் ஒரு கணம் தன்னையே மறந்துவிட்டாள் காஞ்சனு.

"அதோ, அந்தச் சோபாவிலே உட்காரு?"— என்று சொல்லிவிட்டு, "கண்ணம்மா....?"— என்று உள்ளே குரல் கொடுத்தார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம், "என்னங்க?" என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தாள், கண்ணம்மா.

"வாஸந்தி யெங்கே?"

....

"அவங்க, மாட்னி ஷோ பார்க்கப் போயிருக்காங்க. கார் வந்ததும், ரிகலுக்கு அனுப்பச் சொன்னுங்க!"

"அப்படியா....!" சரி, காப்பி பலகாரம் கொண்டு வந்து வை!" என்று உத்தரவு போட்டுவிட்டு, டிரைவர் டிரைவர்....!" "என்று கூவினுர். சில விநாடிகளுக்குள் டிரைவரும் அங்கு வந்தான். "சின்னம்மா, ரிகலுக்குப் போயிருக்காங்க சினிமா பார்க்க போய் அழைச்சிட்டுவா....!" என்று கூறிவிட்டு காஞ்சனுவின் பக்கம் திரும்பினுர்.

"இன்னும் கொஞ்ச நேரத்திலே படம் முடிஞ்சுடும். வாஸந்தி வந்து விடுவாள். அவள் வந்ததும் போகலாம்....!'' என்ருர்.

காஞ்சனுவின் நெஞ்சு பயத்தினல் 'படபட' என்று அடிக்கத் துவங்கியது. இதற்குள் கண்ணம்மா காப்பி பலகாரம் கொண்டுவந்து வைத்தாள்.

''சாப்பிடு காஞ்சனு....;

அவள் பேசாமலிருந்தாள்.

''வெட்கப்படாதே....இது உன் வீடு மாதிரி....ம் சாப்பிடு''

அவள் பலகாரம் ஒன்றும் சாப்பிடாமல் காப்பியை மட்டும் சாப்பிட்டாள்.

"காஞ்சனு....என்னை இன்னும் நீ அறிந்துகொள்ளலே. நீ, மட்டுமென்ன, உன் அண்ணனும் தான். அந்தக் காலத்திலே உன் அம்மாவுக்கு எவ்வளவு பணம், நகை, நட்டு—எல்லாம் கொடுத்திருக்கிறேன் தெரியுமா? உன் அம்மாவிடம் கேள். சொல்லுவாள்...., காஞ்சனு, உனக்குக்கூடத் தர இருக்கிறேன்....; நீ நம்பமாட்டாய்....ஆனுல்....என்னுடன் வா காட்டுகிறேன்....ம்....நீ கண்ணுல் பார்த்தால் தான் நம்புவாய்?', —என்று ஏதேதோ சொல்லிக்கொண்டு காஞ்சனுவின் கரத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு உள்ளே போனுர்.

சாதாரண வேகத்துடன் அடித்துக்கொண்டிருந்த காஞ்சனுவின் நெஞ்சு, சுந்தரத்தின் இந்தத் திடீர் செய்கையினுல் உச்ச வேகத்தில் அடிக்க ஆரம்பித்துவிட்டது, 'வெடுக்' கென்று தன் கையை உதறிக்கொண்டு, "அதெல்லாம் எனக்கு எதற்கு? எனக்கு வேண்டாம்....எனக்கு வேண்டாம்....'' என்று அலட்டினுள்.

"இல்லே, வந்து பாரு....இந்த அறைதான்",—என்று மீண்டும் அவளுடைய கையைப் பிடித்து ஒரே வேகத்தால் அங்குள்ள அறைக்குள் பாய்ந்தார். மறுகணம், அவள் கையை விட்டு விட்டு அங்கிருந்த பீரோவின் இரண்டு கதவு களையும் திறந்து விரித்தார்.

அதற்குள் நிறைய பட்டுச் சேலைகளும், வைர மாலை களும், வளையல்களும், இன்னும் ஏதோதோ விலையுயர்ந்த பொருட்களும் குவிந்து கிடந்தன. காஞ்சனை தன்னை மறந்து அவற்றையே பார்த்துக் கொண்டு நின்றாள் சில விநாடிகள்.

"நன்றாகப் பார் காஞ்சனா....! இவையெல்லாம் உனக்குத் தான். உனக்காகத்தான் வைத்திருக்கிறேன்!"—என்று சொல்லி விட்டு, ஒரு வைர மாலையை எடுத்துக்கொண்டு அவள் கழுத்தில் கட்ட வந்தார்.

அப்போது தான் தன் உணர்வு பெற்றாள் காஞ்சனா. திடுக்கிட்டவாறு தூரப் போய் நின்றாள். "இதெல்லாம் எனக்கு வேண்டாம்........! இப்போ நான் கிராமத்துக்குப் போக வேணும். தயவு செய்து, என்னை சீக்கிரம் கொண்டுபோய் விடுங்கள்!"—என்றாள் கெஞ்சிய தொனியில்.

"ஏன் அவசரப்படுகிறே........! வாஸந்தி வந்ததும் உன் னைக் கொண்டு போய் விட்டு விடுகிறேன். ஆனால்....இதோ இந்த மாலையைக் கட்டிக் கொள்........!" —என்றார்.

காஞ்சனா அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. சரே லென அறைக்குள்ளிருந்து வெளி ஹாலுக்குள் வந்தாள். அவளுக்குச் சுந்தரரின் நோக்கம் பளிச்செனத் தெரிந்தது. 'பெரிய மனுஷத்தனம்' என்பது இப்படித்தான் இருக்கும்

போலும்! தலையிலே வழுக்கை விழுந்து விட்டது. என்றாலும் என்னை வலை போடுகிறார்........! இந்த மாதிரி, ஊருக்குப் பெரிய மனுஷராகக் காட்சியளிப்பவர்களுடைய உள்ளம் எவ்வளவு சிறியதாக இருக்கு........! சே, முட்டாள்தனமாக அகப்பட்டுக் கொண்டோம்........! எப்படியாவது இவரிடமிருந்து தப்பிவிட வேண்டும்........!—என்று பல எண்ணங்கள் புடைசூழ அங்கு நின்று கொண்டிருந்தாள். அவளுடைய விழிகள் வெளிக் காம்பவுண்டையே பார்த்துக்கொண்டிருந்தன, கார் வருகிறதா என்று!

"காஞ்சனா........ஏன் நின்றுகொண்டிருக்கே! உட்காரு!"—என்றார் அறைக்குள்ளிருந்து வந்த சுந்தரர்.

அவள் உட்கார்ந்தாள்.

"ம்........உலகம் தெரியாத பொண்ணு! பரவாயில்லே.....! இது கிடக்கட்டும். அம்மாவுக்குச் சுகமில்லேன்னு சொன்னியே, டாக்டருக்கும் மருந்துக்கும் காசு ஏது?

"கடன் வாங்கினோம்"

"ஏன் கடன் வாங்கவேண்டும்? என்னிடம் வந்திருந்தால் நான் தந்திருப்பேனே....?" சரி, இனி கடன் வாங்க வேண்டாம், வாங்கிய பணத்தையும் கொடுத்து விடு!" என்று சொல்லிக் கொண்டே மணிபர்ஸை விரித்து அதிலிருந்து நூறு ரூபா எடுத்து காஞ்சனாவிடம் நீட்டினார்.

"வேண்டாம்....! நீங்களே வைத்திருங்கள்!"

"இல்லே காஞ்சனா....வைத்திரு. ஏன் வேண்டாம் என்று கூறுகிறே....! செலவுக்கு வைச்சுக்கோ—?" என்று சொல்லிக்கொண்டே, அவள் கைக்குள் நோட்டை வைத்து அழுத்தினார்.

காஞ்சனவுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. நோட்டைக் கசக்கி அவர் முகத்திலே வீசினள்.

"பணத்தைக்காட்டி, பகட்டான நகைகளைக் காட்டி என்னை உங்கள் வலையில் சிக்கவைக்கலாமென்று எண்ணு கிறீர்கள். அது நடக்காத காரியம். உங்களைப் பற்றி அண்ண சொல்லியிருக்கிருர். ஊருக்குப் பெரிய மனுஷனுகக் காட்சி யளித்துக் கொண்டு எங்களைப் போன்ற ஒன்றும் தெரியாத ஏழைப் பெண்களைச் சூறையாடிக் கொண்டிருக்கிறீர்கள்........ ! இது எனக்குத் தெரியும். மகளைப்போன்று இருக்கும் என்னை உங்கள் காமப்பசிக்கு இரையாக்க மனம் வருகிறதே! என் அம்மா உங்களுக்கு ஒரு காலத்திலே வைப்பாட்டியாக இருந் திருக்கிருள், என்ருலும் அப்போது அவள் மனைவி தான். ஒரு மனைவியின்மகள் உங்களுக்கு மகள் தான்....! நான் மகள்தான்! மகளைப் போலிருக்கும் என்னைப் பெண்டாளப் பார்க்கிறீர்கள். உங்களுக்கு அறிவில்லையா? ஒழுக்கம் என்ன உங்களிட மிருந்து விடை பெற்றுக் கொண்டதா? நீதியும் நேர்மையும் உங்கள் உள்ளத்துக்குள்ளேயே செத்து விட்டதா?"—

ஒரு வித ஆவேச உணர்ச்சியில் என்னதான் பேசுகிறே மென்று அறியாதவளாய் கோடை மழைபோல் பொழிந்து தள் ளினுள் காஞ்சன. சுந்தரம் பிள்ளை அப்படியே அசந்துபோய் கற்சிலை போலானர். பூனைப்போலிருந்தவள் இப்படிப் புலி யைப் போலச் சீறிப் பாய்வாள் என்று அவர் எதிர்பார்க்க வில்லை........! தன் உணர்வுக்கு வர சில நிமிடங்கள் பிடித் தன. காஞ்சனவிடமிருந்து துடித்து விழுந்த சொற்களை ஒரு முறை ஞாபகப்படுத்திப் பார்த்தார். அந்த வார்த்தைகள் அவ ருடைய் அந்தஸ்துக்கு ஒரு அறைகூவலைப் போன்றிருந்தன. அவ்வளவு தான், அவரிடம் உறங்கிக்கிடந்த செல்வச் செருக்கு

விழித்துக் கொண்டது. உருட்டும் விழிகளுடன் காஞ்சனு வைப் பார்த்தார். அந்தப் பார்வையில் தெறித்த கொடூரத் தைக் கண்டதும் காஞ்சனுவின் உடம்பெல்லாம் திகிலால் குலுங்கியது.

"காஞ்சனு, நீ, தாசிகுலத்தில் பிறந்தவள். உன் தாய் உடலை விற்று வாழ்ந்தவள். நீ ஒழுக்கத்தைப் பற்றியோ பேச லாயக்கற்றவள். நீ பேசுவது யாருடன் என்பதை நிதானித் துச் சிந்தித்து விட்டுப் பேசு. எனக்கு முன்னுல் பேசும்போது நாவை அடக்கிப் பேச வேண்டும். அது நீளக் கூடாது....! ம்....பாவம் ஒரு காலத்தில் நம்முடன் இருந்தாளே........இப் போது கஷ்டப்படுகிருளே, அவளும் மகளும் பசி பட்டினி கிடந்துபாழாகிருர்களே........! என்று இரக்கப்பட்டுஏதும் உதவி செய்ய முன் வந்தால்—ஏதேதோவெல்லாம் பேசுகிருயே ?"

இப்படி ஒரு 'குட்டிப் பிரசங்கம்' செய்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் சுந்தரர். காஞ்சனு அப்படியே குன்றிப் போனுள் அவமானத்தால். அவருடைய சொற்கள் ஒவ்வொன்றும் கூரிய ஈட்டிபோல் அவள் இதயத்தில் பாய்ந்து தைத்தன. விழிகளி லிருந்து 'பொல பொல' என்று கண்ணீர் கொட்டத் துவங்கி யது.

"நான் தாசி குலத்தில் பிறந்தவள்தான். என்றுலும் தன் மானம் உள்ளவள். நான் வேசி குலத்தில் பிறந்தவள் தான். ஆனுலும் கற்பை காசுக்கு விற்பவளல்ல. நானும் பெண் தான். எனக்கு மானமுண்டு. மரியாதையுண்டு........! நான் மானத்துடன் வாழ ஆசைப்படுகிறேன். ஒழுக்கத்தை உயி ரென நேசிக்கும் ஆனந்தனின் தங்கை நான். அவருடைய அந் தப் பண்பைப் பெற்றவள் நான். கண்ணியமாக வாழ ஆசைப் படுகிறேன் !"

கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட, தேம்பிக் கொண்டே இத்தனையையும் சொன்னாள் காஞ்சனா. சுந்தரர் 'கல கல' எனச் சிரித்தார்.

"சபாஷ் உன் அண்ணன் ஒழுக்கத்தை உயிரைப்போன்று நேசிக்கிறார்? அப்படிப்பட்டவர்தான் ஒளிந்து திரிகிறார். சட்டத்துக்கு விரோதமாக நடப்பதும், சர்க்காருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தான் ஒழுக்கமோ....? இந்தாப் பாரு காஞ்சனா, உன் அண்ணனுக்குப் பிடி வாரண்டு இருக்கு. போலீஸின் கண்களிலே மண்ணைத் தூவி விட்டுத் தலை மறைவாத் திரிகிறான். அவன் நினைக்கலாம் இப்படியே யிருக்கலாமென்று, ஆனால் இந்தச் சுந்தரம் பிள்ளை நினைத்தால் கால்மணி நேரத்திற்குள் ஆசாமி போலீஸ் லாக்கப்பில் இருப்பான். அவன் எங்கிருக்கிறான், என்ன செய்கிறான் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். உனக்காகவும் உன் அம்மாவின் முகத்துக்காகவும்தான் இத்தனை நாளா அவனைக் காட்டிக் கொடுக்காமலிருந்தேன். நீ, என் இஷ்டத்துக்கு விரோதமாக நடந்தால்அடுத்த நிமிஷம், ஆனந்தனைச் சிறையில் தான் சந்திக்கலாம். அத்தோடு முடியாது விஷயம், உன்னையும் என் வழிக்குக் கொண்டு வருவேன். கொண்டு வர முடியும்!"

பரத்தையர் குலம் பணத்தைக் கண்டால் பல்லிளிக்கும். அதைக் காட்டிக் காஞ்சனாவை மயக்கலாம் என்ற நினைப்பு நெருப்பிலிட்ட பஞ்சு போல கருகிவிட்டது. கடைசியாக, மிரட்டல் படலத்தில் இறங்கிவிட்டார். அவர் சொன்னது அத்தனையும் பொய்யென்று காஞ்சனாவுக்குத் தெரியாது. என்றாலும் நம்பிவிட்டாள். அவள் மனம் பெரிய போராட்டத்திற்குள்ளாகியது. அவள் மனக் கண்முன் ஆனந்தனின் உருவமும், அழகேசனின் உருவமும் வந்து நின்றன. கொஞ்ச

நேரம் மனம் குழம்பி நின்ருள். மறுகணம், ஏதோ முடிவுக்கு வந்தவள் போல், "உலகம் உங்கள் கையில்தான் இருக்கிறது என்று எண்ணியிருக்கிறீர்கள். சர்க்காரும், சட்டமும் உங் களுக்குத்தான் சொந்தமென்று இறுமாந்திருக்கிறீர்கள்........! சரி, உங்களால் முடியுமென்ருல் அண்ணுவை எதுவும்செய்துகொள் ளலாம். ஆனுல், என்னை மட்டும் உங்கள் ஆசைக்கு இணங்க வைக்க முடியாது........!"—என்று உறுதி தொனிக்கச் சொல்லி விட்டு 'விறு விறு' என்று வெளியே ஓடி வந்தாள்.

தன்னுடைய மிரட்டலுக்குப் பயந்து விடுவாளென்று எண்ணியிருந்த சுந்தரருக்கு இந்த வார்த்தைகள் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தன. அவள் வெளியே ஓடியதைக் கண்டதும் ஒரு கணம் திகைத்து விட்டார். மறு விநாடி, "காஞ்சனு........நில் ! காஞ்சனு....நில்! கார் வந்து விடும்.... போகலாம்........!" என்று கத்திக் கொண்டே ஹாலுக்குள் ளிருந்து ஓடி வந்தார். இதற்குள் காஞ்சனு காம்பவுண்டுக்குள் வந்து விட்டாள். இதே சமயம், வாஸந்தியை ஏற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தது கார்.

காரிலிருந்து வாஸந்தி இறங்கியதைக் கண்டதும், தன் நடையின் வேகத்தைக் கொஞ்சம் தளர்த்தினுள். இதற்குள் சுந்தரம் பிள்ளையும் காம்பவுண்டுக்குள் வந்து விட்டார்.

"டிரைவர், இந்த அம்மாவைச் சோழபுரத்தில் கொண்டு போய் விட்டு வா....!"—என்று கூறிவிட்டு, வாஸந்தியைப்பின் தொடர்ந்தார், சுந்தரர்.

காஞ்சனு கொஞ்சநேரம் சிந்தித்தாள். சூழ்ச்சிகரமாகத் தன்னைக் கொண்டுபோய் எங்கேயாவது சிறை வைக்கும்படி டிரைவரிடம் ஏற்கனவே சொல்லியிருந்தால்—

டிரைவர் கதவைத் திறந்து விட்டு "ஏறுங்கம்மா?"—என்ருன். அவனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். அவன் முகத்திலே குறுமையும், சாந்தமும் தவழ்ந்து கொண்டிருந்தன. 'சே' இவனைப் பார்த்தால் அப்படித் தெரியலே—ஆனுல்—நடந்து போவது தான் நல்லது....!' அப்போது சுற்று முற்றும் பார்த்தாள். இருட்டி விட்டது தெரிந்தது. 'சே' இந்த இருட்டில் தன்னந்தனியாக நடந்து செல்வதா? சுந்தரரிடம் சிக்குவதைவிட அது அபாயமானது என்று காரிலே ஏறிக்கொண்டாள்.

## 6. சோதனையும், வேதனையும்

தஞ்சையிலுள்ள ஒரு கிராமத்திலே—

அன்று, பண்ணையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்த அழகேசன் கருப்பண்ணனைக் கண்டான். அவன், செல்லப்பரின் பண்ணையில்தான் உழவு பார்த்து வந்தான். அந்த வட்டத்திலுள்ள கிஸான் சபையில் கருப்பண்ணனும் ஒரு முக்கிய பேர்வழி. எனவே, அவனைக் கண்டதும்,

"என்ன கருப்பண்ணு .... சுகந்தானே?" என்ருன் அழகேசன்.

"சின்ன ஐயாவா, வாங்க....! உங்களைப் பார்த்து வெகு நாளாச்சுங்க! சிங்கப்பூரிலிருந்து வந்து விட்டதாக எஜமான் சொன்னுரு....சரி, வாங்க வீட்டுப் பக்கம் போவோம்....!" என்று கூறிக்கொண்டே முன்னுல் சென்ருன். அழகேசனும் அவனைப் பின் தொடர்ந்தான். இருவரும் பண்ணை விஷயங்களைப் பற்றியும், கிஸான் சபையைப் பற்றியும் பேசிக்கொண்டு போனுர்கள்.

வீடு—இல்லே, குடிசைக்கு வந்ததும், உள்ளேயிருந்து ஒருவன் வந்தான். "இவன்தானுங்க பொன்னியின் அண்ணன். பார்க்க வந்திருக்கிருன் !" என்று அவனே அறிமுகப் படுத்தினுன், கருப்பண்ணன்.

"அப்படியா என்ருன் அழகேசன். இதற்குள், "ஏய், பொன்னி தடுக்கைக் கொண்டு வா !" என்று குரல் கொடுத்தான் கருப்பண்ணன். சில நிமிடங்களுக்குள் தடுக்குடன் வந்தாள் பொன்னி.

அதை வாங்கிக் கீழே போட்டு விட்டு, "உட்காருங்க, இதோ, இரண்டு இளநீர் பறிச்சிட்டு ஓடியார்றேன் !"—என்று கூறிக்கொண்டே மறுபக்கம் ஓடினுன் கருப்பண்ணன்.

அழகேசன் .பொன்னியின் அண்ணனேப்பார்த்து, "நீயும் வந்து இரு தம்பி !" என்ருன். அவன் அழகேசனே ஆச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டே, தயங்கினுன்.

"ஏன் தம்பி தயங்கிறே, சும்மா உட்காரு என்று சொல்லி அவன் கையைப் பிடித்து இழுத்தான். அவன் தீயை மிதித்தவன் போல் துள்ளி அப்பால் போய் நின்ருன். அவன் உடம்பெல்லாம் வியர்வை பொங்கியது. கால்கள் நடுங்கின. அழகேசன் உயர்ந்த சாதிக்காரன், அதிலும் பண்ணே எஜமான். அவனுக்கு அருகில் சமமாக உட்காருவதென்ருல்—கனவிலே கூட நடக்காத காட்சி—இது பொன்னியின் அண்ணனுடைய எண்ணம்.

அடிமை வாழ்க்கை, உள்ளத்திலும், உடம்பிலும், ஓடும் ரத்தத்திலும் ஏற்றிவிட்ட தாழ்வு மனப்பான்மையின் உச்சத்தைக் கண்டு, அழகேசனின் நெஞ்சு கலங்கிற்று. ஒரு பெருமூச்சுத்தான் அவனிடமிருந்து வந்தது. பிறகு நடுங்கிக்கொண்டுநின்ற பொன்னியின் அண்ணனேப் பார்த்தான்.

"தம்பி, இரண்டு வருஷங்களுக்கு முன் கருப்பண்ணனும் இப்படித்தான் மிரண்டான். ஆனல் இப்போது எல்லாவற்றை யும் தெரிந்து கொண்டான். தாழ்ந்த சாதியென்று உங்களை யெல்லாம் ஒதுக்கி வைத்ததுமல்லாமல் தொடவும் கூடாது என்று சட்டமியற்றிவிட்டது இந்த நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு. நீங்களும் அப்படித்தான் நம்பி வந்தீர்கள். நீங்கள் எங்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்று நாங்கள் நினைப்பதைவிட எங்களை உயர்ந்த சாதிக்காரர்களென்று நீங்கள் நினைப்பதிருக் கிறதே, அதுதான் விசித்திரம்; இல்லை வேதனை! இன்றையச் சமுதாயத்திலே விதைக்கப்பட்ட இந்த விஷக்கருத்து நெஞ்சிலே உறைந்து, உடலிலே நிறைந்து உன்னையும், என்னையும் தள்ளி வைத்து விட்டது. மனித இதயங்கள் ஒன்றுடன் ஒன்று கட் டித் தழுவ—தங்களுடைய உணர்ச்சிகளை உணர்த்திக்கொள் ளத் தடை விதித்து விட்டது. உழைக்காது உல்லாசமாக வாழும் உலுத்தரை உயர்ந்த கோபுரத்திலே தூக்கி வைத்து விட்டு உழைக்கும் உத்தமர்களான உங்களை தரையிலே தள்ளி விட்டது. ஆனல் இந்தத் தடைகளை யெல்லாம் தவிடு பொடி யாக்கித் தீரவேண்டிய வேளை வந்து விட்டது, நீ சும்மா உட்காரு!"

தீக்குழம்பெனச் சிதறி ஓடி வந்தன வார்த்தைகள், அழ கேசனிடமிருந்து. இந்த வார்த்தைகளின் பொருள், பொன் னியின் அண்ணனுக்கு விளங்கவில்லை. விழித்தான். இதற் குள் கருப்பண்ணனும் அங்கு வந்து சேர்த்தான் இளநீர் காய் களுடன்.

இளநீர் சாப்பிட்டு முடிந்ததும், பண்ணை விஷயங்களைப் பற்றி மீண்டும் பேச்சு நடந்தது.

'சங்கம் கடைசியாக என்ன முடிவு எடுத்திருக்கு?" என்றான் அழகேசன்.

'நிலத்தை விட்டு வெளியேற்றினுல் அதை எதிர்த்துப் போராடுவது!''—என்று முடிவு செய்திருக்கோம்'' என்றுன் கருப்பண்ணன்.

''ஆம், அதுதான் சிறந்த முடிவு. சரி, நானும், சங்கத்துக்கு வரவேணும். சாயங்காலம். வர்ரேன்!'' என்று சொல்லி விட்டு எழுந்தான். அவன் பார்வை, குடிசையின் தாழ்வாரத் தில் நின்று கொண்டிருந்த பொன்னியின் மேல் விழுந்தது.

பொன்னி யென்ற பெயருக்கேற்ப அவளுடைய பூவுடல் பொன் போன்றிருந்தாலும், மெல்லிய கருமை அதிலே படர்ந் திருந்தது சாதாரண நூல் சேலை மட்டும் அவள் உடுத்தி யிருந்தாள். அதிலே இரண்டொரு பொத்தல்! ஜாக்கட் இல்லை அவளுடைய மேனியிலே. கூந்தலை அள்ளிச் சொருகி யிருந்தாள். கழுத்தில் கருமணிக் கோர்வையைத் தவிர, வேறு எவ்வித நகைகளுமில்லை. முகத்திலே களை யிருந்தது. என்றுலும் அது பளிச்சிடவில்லை. பொதுவாக அவள் அழ காக யிருந்தாலும், அந்த அழகு அலங்கோலமாக்கப் பட்டிருந் தது. 'வறுமையும் வேதனையும், வனப்பையும், உடல் வளப்பத்தையும் சிதைத்து விடுகிறது.'—என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ''இதே பொன்னி மாடி வீட்டு மங்கையாக இருந்தால் வெல்வெட் பெட்டியிலே வைக்கப்பட் டிருக்கும் வைரத்தைப் போலப் பளபள என்றிருப்பாள், அழகு பொலிந்து கொண்டிருக்கும் பூர்ணச் சந்திரனைப் போல! ஏழ்மை அழகைக்கூட அழித்து விடுகிறது''—இப்படியான எண்ணங்கள் அவனை முட்டி மோதின.

* * *

அழகேசன் தஞ்சைக்கு வந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டன. தஞ்சையை அடுத்த கிராமங்களிலே தான்

இந்த இரண்டு வாரங்களையும் கழித்தான். நிலச் சுவான் தார்கள் உழவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றும் திட் டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தத் துவங்கினார்கள். இதனால், உழவர்கள்—விவசாயிகள், எரிமலை உள்ளத்துடன் கொதித் தெழுந்தார்கள். ஆங்காங்கே சிறுசிறு கலவரங்கள் நடக்கத் துவங்கின. கிஸான் சபைகள் முழு மூச்சுடன் போராட்டத்தை நடத்தத் துவங்கி விட்டன. இந்தப் போராட்டத்திற்கு மறை முகமாக உரமூட்டினான் அழகேசன், இது இப்படி யிருக்க,

தஞ்சைப் பகுதியில்தான் ஆனந்தன் இருப்பதாகச் சில தோழர்களால் அறிந்தான். ஆனால் திட்டமாக எந்தக் கிராமத்திலிருக்கிறான் என்பது தான் அவனுக்குத் தெரிய வில்லை. அவனை எப்படியாவது, ஒரு தடவை சந்தித்து விடவேண்டும் என்று துடித்தான்.

அன்று கருப்பண்ணனின் குடிசைக்கு முன்னால் உட் கார்ந்திருந்தான் அழகேசன். அப்போது வியர்க்க விறு விறுக்க, அங்கு ஓடிவந்த கருப்பண்ணன் அழகேசனின் காதில் ஏதோ சொன்னான். அதைக் கேட்ட அழகேசனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"கருப்பண்ணா ர்ராத்திரிக்குப் போவோம்....!"—என்றான் அழகேசன். அவன் தலையை ஆட்டிக் கொண்டு அங்கிருந்து சென்றான்.

இரவு பதினோரு மணியிருக்கும். காரிருள் அந்தப் பகுதி யைக் கவ்விப் பிடித்திருந்தது. எங்கும் ஒரே அமைதி! வயல் வரப்பிலே நடந்து கொண்டிருந்தார்கள் அழகேசனும், கருப் பண்ணனும்.

ஒரு மணியாகி விட்டது. அந்தக் கிராமத்துக்கு வந்து விட்டார்கள். அழகேசனை அந்தக் கிராமத்தின் சாவடியில்

நிறுத்தி விட்டு எங்கேயோ ஓடினுன் கருப்பண்ணன். அழகேசன் அந்தக் கிராமத்தை உற்றுக் கவனித்தான். ஒரே இருள் மூடிக் கிடந்தது. வேறென்றும் தெரியவில்லே. தன் கையிலிருந்த டார்ச் லேட்டால் அந்தச் சாவடியைச் சுற்றி வெளிச்சத்தைப் பாய்ச்சினுன். சுடுகாடு போல நிசப்தமாக இருந்தது கிராமம். கொஞ்ச நேரத்திற்குள்ளாக கருப்பண்ணனும், இன்னெருவனும் அங்கு வந்தார்கள்.

'அழகேச அண்ணு....!''—என்று குரல் வந்ததும், டார்ச் லேட்டால் வெளிச்சத்தைப் பாய்ச்சி அவனேப் பார்த்தான் அழகேசன்.

"சிங்காரமா....? சரி, சங்கத்திலே யாரு இருக்காங்க ?"

"நானும் இன்னெருவனும் தான் இருக்கிறேம்!"

"மற்றவர்களெல்லாம் ?"

"முனியாண்டி வீட்டிலே !"

"அங்கேயா ? ஏன் ?

"சங்கத்திலே இருப்பது ஆபத்து. ஒரு வேளே போலீ ஸாரு மோப்பம் புடிச்சா....?"

"சரி, ஆனந்தன் எப்ப வருவான்....?"

"நீங்களும், கருப்பண்ணனும் சங்கத்திலே இருங்க. நான் போய் கூட்டிட்டு வர்ரேன் "

"அவனும் முனியாண்டி வீட்டில் தான் இருக்கிருனு?"

"ஆமா? நீங்க போங்க. இதோ வந்துடறேன்!"—சொல்லி விட்டு வேகமாக நடையைக் கட்டினுன், சிங்காரம்.

கருப்பண்ணனும் அழகேசனும், சங்கத்தை நோக்கி நடந்தார்கள். இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அங்கே இன்னெருவன் இருந்தான். அவன் பெயர் மருதை! அவனும்

சிங்காரமும், போலீஸ் அபாயம் ஏற்படுமா என்று உள்ளறியத் தான் சங்கத்திலிருந்தார்கள். மற்றவர்களெல்லாம் முனி யாண்டி வீட்டில் கூடி, போராட்டதிட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார்கள்.

நிலச்சுவான்தார்களுக்கு நெஞ்சிலே திகில்! பலாத்கார நடவடிக்கைகளில் கிஸான் சபைகள் ஈடுபடுவதாகக் கூறி தங்களுக்குப் பாதுகாப்புக் கோரினார்கள் சர்க்காரிடம். அது மட்டுமல்ல, கிஸான் சபையாரின் முக்கிய தூண்களான பல ரைச் சிறையிலே பிடித்து வைக்கவும் முயற்சி செய்தார்கள். போலீஸாரும் அந்த முயற்சியில் தீவிரமாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் அகப்படவில்லை.

ஒரு பழைய வீட்டில் அந்தச் சங்கம் இருந்தது. உள்ளே ஒரு சிமினி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அழகேசன், கருப்பண்ணன், மருதை ஆகிய மூவரும் அமைதியாக உட் கார்ந்திருந்தார்கள், நேரம் போய்க் கொண்டிருந்தது.

"அண்ணே—!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் கருப்பண்ணன். அவனைப் பின் தொடர்ந்து, "....அழகேசா எப்படி....சுகந்தானே?"—என்று கேட்டுக் கொண்டே நுழைந்தான் ஆனந்தன்.

அதே விநாடி, திடுப் திடுப் பென்று நாலைந்து பேர் உள்ளே பாய்ந்தார்கள். "போலீஸ்....!" என்று கூவினான் சிங்காரம். மறுகணம், சிமினி விளக்கு 'பட்' டென்று அணைந் தது. நாலைந்து பேர் வெளியே ஓடும் சப்தம் கேட்டது. அழகேசன் ஸ்தம்பித்து அப்படியே நின்று விட்டான்.

சில விநாடிகள் கழிந்தன. ஒரு கான்ஸ்டேபிள் தன் கை யிலிருந்த டார்ச் லைட்டால் மேசைக்கு வெளிச்சத்தைப் பாய்ச் சினான். மறுகணம், சிமினி விளக்கு எரிந்தது.

நாலு கான்ஸ்டேபிள், ஒரு இன்ஸ்பெக்டர் ஆக ஐந்து பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

வியர்க்க விறு விறுக்க கற்சிலைபோல் நின்று கொண்டிருந்த அழகேசனைக் கண்டதும், இன்ஸ்பெக்டர் ஆச்சர்யத்தால், "நீங்களா....?" என்றார். அழகேசன் நிலைமையைப் புரிந்து கொண்டான். மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு "ஆம் நான் தான்!" என்றான்.

"இங்கே நீங்கள்....?" கேள்வியை முடிக்காமல் சந்தேகத்துடன் அழகேசனை ஊடுருவிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

"ஒரு ஆளைச் சந்திக்க வந்தேன்!"—என்றார் அழகேசன்,

"யாரை?"

"சொல்ல முடியாது!"

"சொல்ல முடியாதா?"

"ஆம், நிச்சயமாகச் சொல்ல முடியாது!"—என்று கூறிவிட்டு வெளியே வந்தான். மறுகணம் மூடிக் கிடந்த இருளில் மறைந்தான். அவன் போன திக்கையே வெறிக்க— பார்த்துக் கொண்டு நின்றார் இன்ஸ்பெக்டர்.

கிஸான் சபைகளுடன், நடந்துகொண்டிருந்த போராட்டத்திலும் அழகேசனுக்குள்ள தொடர்பு, எப்படித்தான் ரகசியமாக இருந்தாலும், அது மெல்ல மெல்ல வெளிக்கிளம்பத் துவங்கிவிட்டது. இந்தச் செய்தி செல்லப்பரின் பெரிய காரியஸ்தரான ரங்க சாஸ்திரிகளின் பாம்புச் செவியில் வந்து குத்தியதும் அவர் திடுக்கிட்டார். இது உண்மைதானா என்பதை அறியும் கைங்கர்யத்தில் முயற்சியுடன் ஈடுபட்டார்.

அன்று காலை கருப்பண்ணன், இன்னும் இரண்டொரு பேர் சூழ்ந்திருக்க, அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான்

அழகேசன். முதல் நாள் ராத்திரி, நடந்த சம்பவத்தைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். ஆனந்தன் மட்டுமல்ல, ஒருவருமே போலீஸாரின் கையில் சிக்கவில்லை யென்பதை அறிந்ததும் அழகேசன் மன ஆறுதலடைந்தான். இவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. கருப்பண்ணனின் தோளிலே கையைப் போட்டுக்கொண்டு போலீஸார் ஏமாந்ததைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியை ஒளிந்து நின்று பார்த்துவிட்டார் ரங்க சாஸ்திரி. அப்போதுதான் தான் கேள்விப்பட்ட செய்தி உண்மை யென்று தெரிந்தது. அவர்களுக்குத் தெரியாமல் செல்லப்பரின் பங்களாவுக்கு வேகமாக நடந்தார். தான் கண்ட காட்சியையும், கேட்ட உரையாடலையும் நினைக்க நினைக்க அவருடைய அங்கமெல்லாம் நெருப்பில் கிடந்து துடிப்பது போலிருந்தது. நெஞ்சு பதைபதைத்தது, தந்தைக்கு எதிராக மற்றவர்களுடன் சேர்ந்து கொள்ள அழகேசன் தயாராக இருக்கிறான் என்பதுகூட அவரை ஆத்திரப்படவைக்கவில்லை. ஆனால், நீசப் பயல்களுடன்-இந்தப் பள்ளுப் பறைகளுடன்-சமதையாக இருந்து பேசவும், அவர்களைத் தீண்டவும், தோள்மீது கைப்போட்டுப் பழகவும் ஆரம்பித்து விட்டானே என்பதை நினைக்க, நினைக்க அவர் உடல், உள்ளம் எல்லாம் பற்றி எரியத் துவங்கியது. 'பய நம்ம ஆச்சார அனுஷ்டானங்களையும், நேம நியமங்களையும் சாஸ்திர விதிகளையுமல்லவோ மீறிவிட்டான்! இதை வளரவிடக்கூடாது. முளையிலே கிள்ளிவிடவேண்டும்'—என்று தீர்மானம் செய்துகொண்டார், வைதீக உள்ளம் கொண்ட சாஸ்திரியார்.

மத்தியான உணவை முடித்துக்கொண்டு, முற்றத்தில் கிடந்த ஈஸிசேரில் அப்போதுதான் வந்து சாய்ந்தார் செல்லப்

பர். மெதுவாகக் குரலைக்கனைத்துக்கொண்டு அங்கு வந்தார் சாஸ்திரியார். கொஞ்சநேரம் சில சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு அழகேசனைக் குறித்துச் சொல்லத் துவங்கினர்.

“அழகேசன் கூட இப்படி நடப்பான் என்று நான் நினைக்கலே....?”

“அவன் எப்படி நடக்கிருன்....?';—என்று கேள்வியை வீசினுர் செல்லப்பர்.

“பண்ணைச் சேரியெங்கும் அவனைப் பற்றித்தான் பேச்சு. அந்தப் பள்ளுப் பறைகளுடன் சமதையாக இருந்து பேசுகிருன்....! அதுமட்டுமல்ல. தோளோடு தோள்போட்டு கூட்டாளிகள் மாதிரி”—

“சாஸ்திரிகளே, என்ன சொல்கிறீர்கள்?”-என்று கத்தியே விட்டார் செல்லப்பர்.

ரங்க சாஸ்திரி இதை எதிர் பார்த்தவர்தான். எனவே அவர் அமைதியாக மேலும் தொடர்த்தார்.

‘நம்ம அந்தஸ்து என்ன, மதிப்பு என்ன....இந்த விஷயம் வெளியே பரவினு மற்றவா என்ன நினைப்பா....? ஆச்சார அனுஷ்டானம்தான் இப்படிப் பாழாக்கப்படலாமுன்னு, நம்ம பண்ணைக்கே படுகுழி வெட்டிவிடுவான் போலிருக்கே?”

செல்லப்பருக்கு முகமெல்லாம் சிவந்துவிட்டது. சாஸ்திரிகளே, விஷயத்தை நீட்டி முழக்காமே, நேரிடையாகச் சொல்லுங்க!”—என்று படபடத்தார் செல்லப்பர்.

“அதை ஏன் கேட்கிறேன். அந்தப் பயல்களெல்லாம் நம்மை எதிர்த்துப் போராடுருன்னு, அழகேசனும் அவர்க

ளோட சேர்ந்திண்டான். இதுவரை இந்தச் செய்தி நம்ம காதிலே எட்டலே. இவங்க போராட்டத்திற்கு, அழகேச னின் உதவி, ஒத்தாசை யெல்லாம் இருக்குண்ணு நன்னுத் தெரியரது!"

"நன்ருக அறிந்து சொல்கிறீர்களா? அல்லது...."

"அறை குறையா அள்ளிண்டு வர்றதுதான் இந்த ரங்க சாஸ்திரியிடம் கிடையாதே! இத்தனை நாளா இந்தப் புகைச்சல் ஏதும் ஏற்பட்டதா ?"—என்று ஒரு வினவை வீசிவிட்டுத்தான் கேள்விப்பட்டதை யெல்லாம் விவரமாக எடுத்துக் கூறினுர் ரங்கசாஸ்திரி.

இதே சமயம், "நமஸ்காரம்!"—என்று கூறிக்கொண்டே அங்கே வந்தார் இன்ஸ்பெக்டர்.

"உட்காருங்கோ... !" என்ன வி சே ஷ ம்?"—என்ருர் செல்லப்பர்.

இன்ஸ்பெக்டர் முதல் நாளிரவு நடந்ததை யெல்லாம் விவரமாகக் கூறிவிட்டு, "இந்தக் கிளர்ச்சிக்கு உங்க மகன் அழகேசனும் பின்னணியாக இருக்கிருர் என்ற சந்தேகம் வலுப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக மேலும் தகவல் சேகரித்துக்கொண்டிருக்கிருேம். எக்கச் சக்கமாக அவர் மாட் டிக்கொண்டால்...."

இன்ஸ்பெக்டரின் வாயிலிருந்து சொற்கள் உருண்டு கொண்டிருந்தன. செல்லப்பர் சிலையாகிவிட்டார்.

"என்ன செய்கிறது என்றுதான் யோசனையாயிருக்கு. ஒன்று சொல்கிருேம். அனுவசியமாக, இந்த விஷயங்களிலே தலையிடவேண்டாமென்று எச்சரிக்கை செய்துவையுங்கள்.

நான் பிறகு வந்து சந்திக்கிறேன்';—என்று கூறிவிட்டுச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

ரங்க சாஸ்திரிகூட இன்ஸ்பெக்டர் சொன்ன அந்தச் சம் பவத்தை எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியடைந்து அப்படியே இருந்துவிட்டார் சில விநாடிகள். தன் நினைவுக்கு வர சில நிமி டங்கள் சென்றன.

"நான் சொன்னதை இப்போதாவது நம்புங்கள், முளையி லேயே கிள்ளிவிடவேண்டும். கோடரி கொண்டு வெட்டும் வரை வளரவிடக்கூடாது. ஒருவேளை அந்த நிலைமை நம்ம தலைக்கு ஆபத்தாக வந்தாலும் வரலாம். என்னமோ நான் சொல்றதைச் சொல்லிட்டேன்." என்று கூறிவிட்டுச் செல்லப் பரைப் பார்த்தார் சாஸ்திரி. அவர் கண்கள் மூடியிருந்தன. 'ஏதோ சிந்தனையிலிருக்கிறார்போல் தெரிகிறது, இதற்குமேல் இப்போது வேறு எதுவும் பேசக்கூடாது' என்று எழுந்து போய்விட்டார், சாஸ்திரி.

செல்லப்பரின் சிந்தனைக் குதிரை மிக வேகமாக எங் கேயோ ஓடத்துவங்கியது. அழகேசன் கல்லூரிப் படிப்பை முடித்து இரண்டாவது ஆண்டுக்குள்ளேயே முற்றிலும் மாறி விட்டதை அவர் கவனிக்கத்தான் செய்தார். இந்த மாறுத லுக்குரிய காரணத்தை அவர் அறியவில்லை. ஆனந்தனின் தொடர்புதான் இந்த மாற்றத்திற்குக் காரணம் என்பதை அவர் எப்படி அறிவார்.

மாணவனாக யிருக்கும்போது அவனுடைய பேச்சுக்களும் செய்கைகளும் எப்படியிருந்தன! இப்போது?—காலேஜுக்கு நடந்து சென்று அறியாதவன், இன்று, சில சமயங்களில் காலில் செருப்புக் கூடப்போடாமல் நடக்கிறான். எப்போது

பார்த்தாலும் ஏதோ பலத்த சிந்தனையிலிருக்கிறன். ஏதும் மனக் கோளாறோ—' இப்படி யெல்லாம் ஆரம்பத்தில் எண்ணி யிருந்தார். இதற்குள் அவன் மலேயாவுக்குப் போனுன்' திரும்பி வந்தும்கூட அவன் நிலைமை மாறவில்லை. தனக்குத் தெரியாமல் வளர்ந்துவிட்டது, செல்லப்பரின் உள்ளம் திகி லடைந்தது.' காடு மேடு சுற்றுகிறன். அந்தப் பயல்களுடன் கூடிக்கொண்டு கிளர்ச்சி செய்கிறன். "சரிதான், இரவிலே அவன் இங்கு தங்காததற்குக் காரணம்—" பல எண்ணங் கள் முட்டிமோதிக் கொண்டிருந்தன செல்லப்பருக்கு.

வெளியே போயிருந்த அழகேசன் அப்போதுதான் உள்ளே வந்தான். அவன் மாடியில் ஏறும் போது ஏற்பட்ட சப்தம் சிந்தனையிலிருந்த செல்லப்பரைத் திரும்பிப் பார்க்கச் சொல்லிற்று.

"அழகேசா இங்கே வா....!"—என்றுர் செல்லப்பர்.

"என்ன அப்பா....?"—என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான் அழகேசன்.

"நான் கேள்விப்பட்ட தெல்லாம் உண்மைதானு?"

"என்ன கேள்விப்பட்டீர்கள்?"

"பள்ளுப் பறைகளோட சேர்ந்து கிட்டு—"

"ஓ, அதைச் சொல்றீங்களா....?"—என்று அலட்சிய மாகச் சொன்னுன் அழகேசன்.

"அப்ப நான் கேள்விப்பட்ட தெல்லாம் உண்மைதான் போலிருக்கு!"

"ஆம்"—என்றுன் அழகேசன்.

"சரியாய்ப்போச்சு — போ — அழகேசா இதெல்லாம் அழகாயிருக்கா?"

"அழகாயில்லாமே அவலட்சணமாக இருக்கிறதா அப்பா?'

"நான், என்னமோ நினேச்சேன். நெஞ்சிலே, கொஞ்சமும் கூச்சமில்லாமே சொல்றியே? நாலு பெரிய மனுஷர்களுக்குத் தெரிஞ்சா என்ன சொல்லுவாங்க? நம்ம அந்தஸ்துக்கும், கௌரவத்திற்கும், சாதி ஆச்சாரத்துக்கும் இது அடுக்குமா? பரம்பரை பரம்பரையாக ஆச்சாரத்தைக் கடைப்பிடிச்சு வந்த குடும்பமடா? உனக்குமட்டுமல்ல, நம்ம இன பந்துக்களுக்குக் கூட, உன் போக்கு...."

செல்லப்பரின் சொற்களிலே ஆத்திரத்தைவிட வேதனே உணர்ச்சி தான் மிகுந்திருந்தது. அவர் பேசுவதை யெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டே யிருந்தான் அழகேசன்.

"நான் சொல்றது காதிலே விழுதா?"

"அப்பா அவர்களேப் பள்ளுப் பறைகளென்று நாம் தானே ஒதுக்கி வைத்திருக்கிறேம்? உண்மையில் அந்தப் பாட்டாளிகள் பட்டைத் தீட்டப்படாத உண்மை வைரங்கள். நாம் போலி வைரங்கள், மின்னுகிறேம். அவர்களுக்கும் நமக்குமிடையிலிருக்கும் மனித உணர்ச்சியை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சாதி, ஆச்சாரம் என்றெல்லாம் பேசி இதயத்தைக் கல்லாகக் கொள்கிறேம். அந்தஸ்து, மதிப்பு என்று சொல்லி மனிதத் தன்மையைப் புதைத்து விடுகிறேம்.

"இதென்ன........புதுசா தத்துவம் பேசறே........? தலே முறை தலேமுறையாகத் தாண்டாத விதிமுறைகளே........"

"இப்போது தாண்ட வேண்டி வந்து விட்டது. இல்லே. அந்த விதிமுறைகளேச் சுக்குநூருக உடைத்துத்தள்ளவேண்டி

யிருக்கிறது. ஒழுங்காகச் செல்லும் கப்பலுக்கு இந்த விதி முறைகள் கற்பாறைகள்; கடற்கன்னிகள்; பனிப்பாறைகள் ! பகுத்தறிவும், தன்மானமும் ஜ்வாலைவிட்டெரிகிற இந்தக்காலத் திலே, கொடூரத் தடைகளை நொறுக்கித் தகர்க்க வேண்டும். மனித முன்னேற்றத்துக்கும், அவனுடைய நாகரிகத்துக்கும் அறிவின் வளர்ச்சிக்கும் இந்தப் பழைய விதி முறைகள் விஷக் கிருமிகள் போன்றவை !"

எரிமலைச் சில்லிகள் போன்று வந்த இந்தச் சொற் குவி யலைக் கேட்டதும் செல்லப்பர் அசந்துவிட்டார். உறுதியும் உணர்ச்சியும் அழகேசனின் ஒவ்வொரு சொல்லிலும் உருண் டோடியது. இந்த மாதிரிப் பேசியதை அவர் இதுவரை கேட் டதேயில்லை. என்ன சொல்வதென்றே தெரியவில்லை. சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு ஏதோ நினைத்துக்கொண் டவர் போல்,

"இது இருக்கட்டும்........இப்போ நடக்கிற தகராறிலே நீ கூட சம்பந்தப் பட்டிருக்கிருயாமே....?"

"அது தவரு... ?"

"அழகேசா, நீயா இப்படிப் பேசுகிருய் ? நம்ம கழுத் துக்கு நாமே கத்தி தயாரிப்பதா ?"

"கத்தியைத் தயார் செய்யவில்லை; கருத்தை வெளியிட் டேன் !"

"அந்தப் பசங்க அநியாயமாகக் கட்டியேறுகிருங்க. உண்மையைச் சொன்ன, அவங்கதுணிச்சலுக்குக்கம்யூனிஸ்ட் பசங்கதான் காரணம். இவ்வளவு நாளா அடங்கிக் கிடந்தாங்க. நம்ம பேச்சுக்கு எதிர்ப்பேச்சில்லாமே 'கப் சிப்'னு வேலைபார்த் துக்கிட்டிருந்தாங்க! அவங்களுக்கு மனித உணர்ச்சியிருந்தா,

தண்டவாளத்தைப் பெயர்க்கிற பசங்க சொல்லைக் கேட்டுக் கொண்டு இப்படிக் கிளர்ச்சி செய்யமாட்டாங்க !"

கொதி எண்ணெயில் போட்ட கடுகு எப்படி வெடித்துச் சிதறுமோ, அப்படியிருந்தன, செல்லப்பரின் வார்த்தைகள். அழகேசன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறே? நான் சொல்றது சரியாகத்தோணலையோ ?"

"அப்பா, மனித உணர்ச்சி' பாட்டுக்குப் போடும் தாளம் போன்றதல்ல. எதையும் ஆராய்ந்து பேசவேண்டும். மனித உணர்ச்சி விளக்கின் சுடர் போன்றது. தூண்டினுல்தான் அது ஒளிவிடும். அதுபோல் மனித உணர்ச்சி தூண்டப்பட வேண்டும். தூண்டப்பட்ட சுடரின் ஒளியிலே எல்லாம் தெரிவதுபோல தூண்டப்பட்ட மனித உணர்ச்சியிலே உண்மையின் உருவம் நன்ருகத் தெரியும். அதை நான் பார்த்தேன். அவர்களுடைய கேள்வியில் நியாயமிருக்கிறது; அவர்களுடைய கிளர்ச்சியில் நீதியிருக்கிறது. எந்த நிலத்திலே பிறந்து, அதிலே வளர்ந்து, அந்த நிலத்தைச் செழிப்பாக்கி, நமக்கு பணத்தைக் குவித்துக் கொடுத்தார்களோ, அந்த நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவது அக்கிரமம், அநியாயம், காலம் முழுதும் நமக்காக உழைத்து, தங்கள் வாழ்வைத் தேயவிட்டவர்களுக்கு நாம் செய்யும் பிரதி உபகாரம், குந்தக் கூடக் குடிசை யில்லாமல் அவர்களைத் துரத்துவதுதானு? இது கொடூரமானது!"

செல்லப்பருக்குத் தூக்கி வாரிப்போட்டது. அப்போதுதான் அவருடைய சுபாவம் தலைதூக்க ஆரம்பித்தது. அவருடைய மூக்கிலே சிவப்பு ஏறத் துவங்கியது. ஆத்திரக் கோடு

கள் முகத்தில் மின்னின. விழிகளிலே சினம் சுடர் பாய்ச்சத் துவங்கியது.

"அழகேசா, அந்தப் பசங்க பேசறமாதிரிப் பேச எப் படா கத்துக்கொண்டே ?"

"என் மனச்சாட்சி, என்னை அறிவென்ற சவுக்கால் அடிக் கும்போது—அந்த ஏழைமக்களின் வாழ்க்கை சிதைக்கப் பட்டி ருப்பதைக் காணும்போது—நமது பணமும், செழிப்பும் அவர்க ளுடைய ரத்தத் துளிகள் என்பதை உணரும்போது—நமது பண்ணையிலும் சரி, இதர பண்ணைகளிலும் சரி பாட்டாளி மக் கள் மாடுகளைப் போல் நடத்தப் படுவதைப் பார்க்கும் போது"

"அழகேசா உன்னுடைய உளறல்களை நிறுத்து!"--என்று கூவினர் செல்லப்பர். அதற்குமேல் அவருக்கு வார்த்தைகள் வரவில்லை, அந்த அளவுக்குக் கோபம் குமுறியது. கைகால் களெல்லாம், ஆத்திர மிகுதியால் நடுங்கின,

அழகேசன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. மாடிக்குச் சென்று விட்டான். என்றைக்காவது தனக்கும் தந்தைக்கும் இப்படிச் சொற்போர் மூளும் என்பதை எதிர்பார்த்துத் தான் இருந்தான் அழகேசன். அதுவும், முதல் நாளிரவு நடந்த சம்பவம்—இன்ஸ்பெக்டரைச் சந்தித்த அந்தச் சம்பவம் அப் பாவின் காதுக்கும் எட்டி அதன் காரணமாக அவருக்கும் தனக்கும் 'உள்ளப் புகைச்சல்' ஏற்படும் என்பதை எதிர்பார்த்துத் தானிருந்தான். எதிர்பார்த்தது நடந்துவிட்டது. பெற்ற தந்தையை எதிர்ப்பது ஒரு சோதனை மட்டுமல்ல, வேதனை மிகுந்த செயலும் கூட. ஆனால், கொள்கை, இலட் சியம் இவை, உறவு முறைகளைத் தாண்டக்கூடிய சக்தி பெற்றவை.

அழகேசன் சென்றதும் நீண்ட சிந்தனையில் மூழ்கிவிட்டார் செல்லப்பர். அழகேசனின் எதிர் காலத்தைத் தன்பாதையிலே வகுத்துக் கொண்டார் அவர். ஆனால் இப்போது அவனுடைய மனமாற்றமும் செயல் மாற்றமும் தனக்கே எதிரியாக முளைத்து விட்டான் என்பதைக் காட்டின. இந்த நிலைமையை உடனே மாற்றியாக வேண்டுமென்று தீவிரமாக ஆலோசனை செய்தார். அப்போதுதான் சுந்தரம் பிள்ளையின் நினைவு அவருக்கு வந்தது.

சுந்தரம் பிள்ளை மதுரை ஜில்லாவிலே எப்படிச் செல்வாக்குடன் விளங்கினரோ அதேபோல செல்வாக்குடன் விளங்கினர் செல்லப்பர் தஞ்சை ஜில்லாவிலே. ஆனால், சுந்தரம் பிள்ளையைப் போல, சிறைசென்றவரல்ல, 'தியாகி' என்ற பட்டம் வாங்கியவரல்ல. என்றாலும், இருவருக்குமிடையில் நெருங்கிய நட்பும், தொடர்பும் உண்டு. சுந்தரர் அடிக்கடி செல்லப்பரின் வீட்டுக்கு வருவார். சென்னைக்குச் சென்றால் அவருடைய பங்களாவில்தான் தங்குவார். அந்த அளவுக்கு இருவருக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. சுந்தரரின் மகள் வாஸந்தியை அழகேசனுக்கு மனைவியாக்கிவிட வேண்டும் என்று எண்ணியிருந்தார் செல்லப்பர். இதைச் சுந்தரரிடம் தெரிவிக்கவும் செய்தார். அவரும் இதற்கு உடன்பட்டார்; அழகேசன் மலேயாவிலிருந்து வந்ததும் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்று முடிவு செய்திருந்தார்கள் இருவரும். இனி, ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது. வாஸந்தியைத் திருமணம் செய்து வைத்து விட்டால், புதுமணச் சூழ்நிலையிலே தன்னை மறந்து இருப்பதுடன், வாஸந்தியைக் கொண்டே அழகேசனை மாற்றிவிட முடியும். வாஸந்தி நிச்சயம் மாற்றியே தீருவாள்!—இப்படிச் சுழன்றன செல்லப்பரின் எண்ணங்கள்.

மறுநாள் காலை அழகேசனின் அறைக்குள் நுழைந்தார் செல்லப்பர். செய்திப் பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்த அழகேசன், அவரைக் கண்டதும் பேப்பரை மடித்து மேஜை யில் போட்டு விட்டு,

"என்னப்பா....?"—என்றான்.

"ஒருமுக்கிய விஷயத்தைக் குறித்து உன்னுடன் பேச வந்தேன்"—என்று சொல்லிக் கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்தவர் அவனை உற்றுப் பார்த்தார். அழகேசனின் முகத் தில் முதல் நாளிருந்த தீவிர உணர்ச்சிகள் இப்போது இல்லை. என்பதைக் கண்டதும் பேச்சைத் துவக்கினார்.

"அழகேசா, உனக்கு சுந்தரம் பிள்ளையின் மகள் வாஸந் தியைத் தெரியுமா?"

"பார்த்ததில்லை!"

"அவளை உனக்குத் தருவதாக வாக்குறுதி கொடுத்திருக் கிறார் அவர். ஆகவே, திருமணத்தை இந்த மாதமே செய்து விடலாமென்று தீர்மானித்து விட்டேன்!"

அழகேசன் ஒன்றும் பேசவில்லை. செல்லப்பர் மேலும் தொடர்ந்தார்.

"வாஸந்தி அழகான பெண்மட்டுமல்ல, பணக்காரி, படித்துப் பட்டம் பெற்றவள். சுந்தரம் பிள்ளைக்கு ஒரே மகள். அவள் நம்மவீட்டுக்கு வந்தா, சுந்தரம் பிள்ளையின் சொத் தெல்லாம் யாருக்குத் தெரியுமோ....?"

செல்லப்பர் சொல்வதை யெல்லாம் கேட்டுக் கொண்டி ருந்த அழகேசன் இப்போதுதான் வாயைத் திறந்தான்.

"நான் இப்போது கலியாணத்தைப் பற்றிச் சிந்திக்க விரும்பவில்லை. எனக்கு வாஸந்தியும் வேண்டாம், திருமண மும் வேண்டாம்....!"

"என்ன சொன்னே....? இன்னொரு முறை சொல்லு....? செல்லப்பர் கொஞ்சம் படபடப்புடன் கேட்டார்.

"ஆமப்பா....இப்போது நான்போகும் பாதையில் "திரு மணம்" என்ற மாளிகைக்குள் தங்கியிருக்க விரும்பவில்லை!"

இதைக் கேட்ட செல்லப்பருக்குச் சினம் சீறி யெழுந்தது. "உன்பாதை எந்தக் கோட்டைக்குப் போகிறது?"—என்று கிண்டலுடன் கேட்டார்!

"என் இலட்சியக் கோட்டைக்கு!"

துப்பாக்கியிலிருந்து குண்டு புறப்பட்டது போலிருந் தது, அழகேசனிடமிருந்து வந்த பதில். இதைக் கேட்ட செல்ல்ப்பருக்குக் கோபம் உச்சியில் ஏறியது. மீசை துடித்தது, முகம் சிவந்தது.

"லட்சியமாம், குறிக்கோளாம், ஏதேதோ அளக்கிறன். எனக்குத் தெரியாத இலட்சியத்தை இவன் புதுசாக் கண்டுட் டான்! இதை யெல்லாம் கட்டிக் கொண்டு யார் அழச்சொன் ஞர்கள்? ஊரில் வெளிச்சம் போட்டு உலவ லட்சியம், அது இது என்று சொல்லிக் கொண்டு திரிகின்றன வாழ வகையற்ற சில ஊதாரிகள். இதைக் கேட்டுக்கொண்டு கும்மாளம் போடுகி றன் இந்த ஒன்றும் தெரியாதவன். வாழவேண்டியது, உயி ருள்ள மட்டும் இன்பத்தை அனுபவிக்க வேண்டியது. இது தானே பெரிய இலட்சியம்? ஊர்க்கவலேயோ, உலகக் கவலேயோ நமக்கெதற்கு? நமக்கிருக்கிற சொத்தையும், பொரு ளேயும் கவனித்துக் கொண்டு ராஜா மாதிரி இருப்பதற்கு என் னென்னமோ பேசுகிறன்! தன் இலட்சியக் கோட்டையைப் பிடிக்கப் போகிறனும். இவரு பெரிய மேதாவி! இதற்கு முன் பெல்லாம் இப்படியா கத்தித் திரிந்தான்....! கம்யூனிஸ்ட் பேசு கிறன் இப்போது....! என்னே எதிர்த்து ஏதேதோ உளருகி

றுன்....!''—என்று பொரிந்து தள்ளிவிட்டு, ஆத்திரம் பிடரியில் பிடித்துத் தள்ள அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார் செல்லப்பர்.

அழகேசனுக்கு ரொம்பவும் வேதனையாக இருந்தது. 'நமது உறுதியான உள்ளத்துக்கு இப்போது சோதனை ஏற்பட்டிருக் கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆனந்த னைப் பற்றிய நினைவு ஓடிவந்தது. அன்றிரவு, அவன் பேச்சுக் குரலைத்தான் கேட்டான். அவன் முகத்தைக் காணவில்லை. அதற்குள் போலீஸார் வந்துவிட்டனர்! அளவுக்கு மீறிய ஏமா ற்றமாக இருந்தது அழகேசனுக்கு. இனி ஆனந்தனை எப் போது சந்திக்கலாம்? என்ற கேள்வி எழுந்து நின்றது.

* * * *

## 7. காதலும் கைவிலங்கும்

**ப**ணத்துக்கோ, பகட்டுக்கோ மனதைப் பறிகொடுக்காது, பறந்து சென்ற காஞ்சனாவை நினைக்க, நினைக்க, சுந்தரரின் உள்ளம் ஆச்சர்யத்தால் குழம்பியது. அவருடைய வாழ்க்கை யிலே, பரத்தையர் குலத்திலுள்ள பாவையரில், காஞ்சனாவைப் போன்று கண்டதில்லை. பணத்தைக்கொண்டு எதையும் சாதித்துவிடலாம் என்பதைத் தனது அனுபவ மூலமாகக் கொண்ட அவருக்கு, காஞ்சனா விஷயத்தில் அது நடக்காத தைக் குறித்து ஒரு பெரிய புதிர் தோன்றிற்று. கம்யூனிஸ்டு கள் தங்களை மட்டுமல்ல, தங்களுடைய தங்கைமாரையும் எஃகு உள்ளம் உடையோராக மாற்றிவிடுவார்கள். ஆம், காஞ்சனா ஆனந்தனின் தங்கையாக இருக்காவிட்டால் இந் நேரம் என்னுடைய மடியில் தவழ்ந்துகொண்டிருப்பாள்—'

என்று அவருடைய உள்ளம் சொல்லிற்று. காஞ்சனு, கைக் கெட்டாத கனிதான் என்று தோன்றிற்று அவருக்கு. என்ருலும் அவள்மேல் முளைத்த மோகச் செடி இன்னும் வளர்ந்தது. ஒரு பொருளின்மேல் தணிக்கமுடியாத மோகம்–ஆசை–ஏற் பட்டால், அதை அடையும்வரை மனம் நிம்மதியடையாது. எந்தவிதமான குறுக்கு வழியில் சென்ருவது அதை அடையத் தூண்டும். இந்த மனோபாவத்திற்கு, சுந்தரம் பிள்ளையும் விலக்காகவில்லை. ஆனந்தனை எப்படியாவது போலீசாரின் கையில் சிக்கவைத்துவிடவேண்டும். அப்போதுதான் காஞ் சனுவை நாம் அடைய முடியும் என்று ஒருகணம் சிந்தித் தார். ஆனுல் அதைவிட இன்னொரு வழி சுலபமாகத் தென் பட்டது. 'ஆனந்தன் தலைமறைவாக இருப்பதால், எப்போதா வது ஒரு நாளைக்குத்தான் வீட்டுக்கு வருவான். மற்ற சம யங்களில், காஞ்சனுவும் அவள் தாயாரும்தானிருப்பார்கள். எப்படியாவது காஞ்சனுவைக் கடத்திக்கொண்டு வந்து நமது வீட்டில் வைத்துவிட்டால், அவளைத் தேட முயற்சிப்பான் ஆனந்தன். நிச்சயம் நான்தான் அவளைக் கடத்திக்கொண்டு வந்திருக்கிறேமென்பதையும் உணருவான். மறுவினுடி தங்கை யைப் பார்க்க என் பங்களாவுக்கு வருவான் அப்புறம், பயல் சிறைக் கம்பியை எண்ணவேண்டியதுதான். இந்தச் சிங்காரி, எத்தனை நாட்களுக்குத்தான் சிணுங்கிக்கொண்டிருப்பாள்?'— இப்படிப் பல எண்ணச் சுழலில் மூழ்கிக்கொண்டார்.

ஆனந்தன் தஞ்சை ஜில்லாவில்தான் இருக்கிருன் என் பதை அழகேசனைச் சந்திக்க வந்த அன்றிரவில் நடந்த சம்ப வம் காட்டிவிட்டது போலீசாருக்கு. எனவே அவனைப் பிடிக்க வேட்டை நாய்போல் அலைந்து திரிந்தார்கள் போலீசார். ஆகவே கொஞ்ச நாளைக்கு வேறு இடத்தில் 'வளை' தேடவேண்டி வந்து விட்டது ஆனந்தனுக்கு. இதற்கிடையில் வீட்டு நினைவும்

தொத்திக்கொண்டது. சுந்தரம் பிள்ளை வீட்டுக்கு வந்து கொண்டிருந்தது, பணம் கொடுத்தது—என்ற செய்திகளை யெல்லாம் அறிந்ததும் அவனுக்கு அவர்மேல் பலத்த சந்தேகம் விழுந்துவிட்டது. காஞ்சனுவுக்காகத்தான் அவர் வருகிறுர் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டான். அவரை வர வேண்டாமென்று தடை உத்தரவு போட்டாலும், அவர் சும்மா யிருக்கமாட்டார். ஏதாவது நரித்தந்திர வேலையில் ஈடுபட்டுக் காஞ்சனுவைக் கெடுக்க முயற்சிப்பார் என்று எண்ணினுன். எனவே, அவர்களைச் சோழபுரத்தைவிட்டு வேறு எங்கேயாவது கொண்டுபோய் வைக்கவேண்டும். ஆனுல் இதைச் செய்ய முடியாது. அழகேசனிடம் சொல்லித்தான் செய்யவேண்டும் என்று எண்ணியிருந்தான். ஆனுல் அன்று அழகேசனைச் சந்திக்க முடியவில்லை. என்ருலும் அவன் கவலைப்படவில்லை. சோழபுரத்துக்குச் சென்று, இப்போதுள்ள நிலைமையை அறி வோம்—என்று நினைத்தான்.

நடுநிசி. உலகம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. எங்கும் ஒரே அமைதி! வானத்திலே நட்சத்திரங்கள் மட்டும்தான் விழித்துக்கொண்டிருந்தன. சோழபுரத்தை நோக்கி வேகமாக நடந்துகொண்டிருந்தான் ஆனந்தன். தன்னை யாரும் பின் தொடர்கிறுர்களா என்று அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண் டான்.

தன்னுடைய வீட்டை நெருங்கிவிட்டான். அடுத்த விநாடி திடுக்கிட்டு அப்படியே நின்றுவிட்டான். யாரோ இரு வர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அப்போது.....

'இவர்கள் யாராக இருக்கலாம்? ஒருவேளை சுந்தரம் பிள்ளையின் ஆட்களாக இருக்குமோ?'—என்று எண்ணியவனுய் சுற்றிலும் தன் விழிகளைச் சுழலவிட்டான். கொஞ்சதூரத்தில்

ஒரு கார் நிற்பது, லேசாகத் தெரிந்தது 'அது காராகத்தான் இருக்கும். காஞ்சனுவைத் தூக்கிக்கொண்டு போகத்தான் வந்திருப்பார்கள்....! நல்லவேளை இன்று வந்தார்களே? இரண்டு நாட்களுக்கு முன்பு வந்திருந்தால்?—'

அதற்குமேல் அவன் சிந்தனை ஓடவில்லை. வீட்டுத் தாழ் வாரத்தில் பாய்ந்தான், மறு விநாடி அவன் கதவைத் தள்ளி ஞன். அது திறக்கப்படவில்லை. 'சரிதான் உள்ளே தாழ்ப்பாள் போட்டுவிட்டார்கள்....!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு பின்பக்கம் ஓடிஞன். பின் பக்கமும் பூட்டியிருந்தது. ஆத்திர மும், ஆவேசமும் ஒன்றுசேர்ந்து அவன் நரம்புகளைப் புடைக் கச் செய்தன. என்ன செய்கிருேம் என்று தெரியாமல், கதவில் ஓங்கி உதைத்தான். கால்தான் வலித்ததே தவிர, கதவு திறக் கப்படவில்லை. ஒருகணம் யோசித்தான். பின்பக்கத் தாழ்வாரச் சுவரின் ஒரு பகுதி உடைந்துகிடந்தது நினைவுக்கு வந்தது. அதற்கு மேலாக ஏறிப் பாயவேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டே தாழ்வாரத்தின் பக்கம் ஓடிஞன். மறுவிநாடி ஒரே பாய்ச்சல். உள்ளே வந்துவிட்டான். அங்கே இருட்டும், நிசப்தமும் குடியிருந்தன. ஆனந்தனுக்குச் சந்தேகம் வந்து விட்டது. "காஞ்சனு....! அம்மா....!;' என்று பல தடவை கூப்பிட்டான். பதிலே இல்லை. கலவரமும், பரபரப்பும் அடைந்தவனுக, இருட்டில் தன் இருகரங்களைப் பரக்க விரித் துத் தட்டித் தடவிக்கொண்டே வெளி வாசலுக்கு வந்தான். கதவு திறந்து கிடந்தது தெரிந்தது. வெளியே ஓடிவந்தான். அதே சமயம், அங்கு நின்ற கார் ஸ்டார்ட் செய்தது காதில் விழுந்தது. மறுகணம், காரின் வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சம் கார் வேகமாகச் சென்றுகொண்டிருப்பதைக் காட் டிற்று. அந்தக் கார் மறையமட்டும் பார்த்துக்கொண்டிருந்தான்

ஆனந்தன். பிறகு அசந்துபோய் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துவிட்டான். அவனுக்குப் பலவித எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

காஞ்சனுவையும், அம்மாவையும்தூக்கிக் கொண்டுபோகிருர்களா, அல்லது, காஞ்சனுவை, நேற்று அல்லது அதற்கு முன்பு கொண்டு போய் எங்கேயாவது வைத்துவிட்டு, இன்று அம்மாவைத் தூக்கிக் கொண்டு போகிருர்களா? அம்மாவையும் ஏன் கொண்டு போக வேண்டும்? காஞ்சனுவை, தான் தூக்கிக் கொண்டு போனதை ஊருக் கெல்லாம் சொல்லி ஒப்பாரிவைப் பாள். அதனுல் தன் மேல் தவருன எண்ணங் கொள்ளுவார்கள் மக்கள் என்று சுந்தரம் பிள்ளை நினைத்திருக்கக் கூடும். எனவே தான் அம்மாவையும் கொண்டு போயிருக்க வேண்டும். இப் போது என்ன செய்வது? அம்மாவையும், காஞ்சனுவையும், காப்பாற்றுவதா? அல்லது நான் இங்கிருந்து மறைவதா? அவர் களை எப்படிக் காப்பாற்றுவது? சுந்தரர் அவர்களை எங்கே கொண்டுபோய் வைத்திருப்பாரோ—நான் இவர்களைத் தேடி அலைந்தால் நிக்சயம் அகப்பட்டுக்கொள்வேன். அகப்பட்டால் அவர்களை எப்படி மீட்பது? போலீசாரிடம் சொன்னுல் ?.... சொன்னுல் என்ன நடக்கும்? அவர்களைப் பணத்தால் அடிப் பார். அவ்வளவுதான் ஒன்றும் தெரியாதவர்கள் போல் இருப் பார்கள். அதிலும் என் கூச்சல் இந்தப் போலீசாரின் காதில் எங்கே விழப்போகிறது? அப்படியானுல் என்ன செய்வது?—''

இந்தக் கேள்வியுடன் எழுந்தான். அவனுடைய சிந்தனை எங்கேயோ சென்றுவிட்டது. எங்கே போகிருேம் என்பதையே மறந்து நடந்து கொண்டிருந்தான் அவன்.

'தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் காஞ்சனுவுக்குத் தெரியும். அவள் பலியாக மாட்டாள், சுந்தரரிடம் சிக்கி

விட்டாள். ஆனுல், 'அவள் தன்மானத்தை இழக்கமாட் டாள். பலாத்காரமாக அப்படி நடந்தால்? நிச்சயம் உயிருடன் இருக்க மாட்டாள்....' ஆம் நிச்சயம் உயிருடன் இருக்க மாட் டாள். தற்கொலை செய்து கொள்வாள்?'—இப்படி ஓடின எண் ணங்கள். அவன் உள்ளம் கோபத்தால் குமுறியது. 'அவள் செத்தால் சுந்தரம் பிள்ளையை பழிக்குப்பழி வாங்குவேன்....' ஆம் பழிக்குப் பழிவாங்குவேன். பழிக்குப் பழிவாங்குவேன்....' —இப்படித் தன்னையுமறியாமல் கத்தியே விட்டான். அந்தச் சமயத்தில் தன் நினைவுக்கு வந்தான்.

அப்போது, தான் மதுரை நகருக்குள் நுழைந்து கொண் டிருந்ததை நினைத்ததும் திடுக்கிட்டான். தான் வாய் விட்டுக் கத்தியதை யாரும் கேட்டிருப்பார்களோ என்று சுற்று முற் றும் பார்த்தான். முனிஸிபல் லைட்டுகளின் வெளிச்சத்தால் எங்கும் பட்டப் பகல் போலிருந்தது. என்ருலும் நடுநிசிக்கு மேலாகி விட்டதால் சந்தடியில்லை. இரண்டொருவர் தூரத் தில் வருவது தெரிந்தது. 'சே முட்டாள் தனமாக இங்கே வந்து விட்டோம், யாராவது ஒரு சிவப்புத் தொப்பிக்காரனின் கண்களில் படுவதற்கு முன்னுல் நகருக்கு வெளியே போய் விடவேண்டும்' என்று எண்ணியவனுய் வேறு ஒரு சந்துக்குள் நுழைந்து, நகரின் வடக் கெல்லையை நோக்கி விரைந்தான். யாரோ ஒருவர் பின்னுல் ஓடி வருவது தெரிந்தது. திரும்பினுன். ஒரு சிவப்புத் தொப்பி தெரிந்தது. ஆனந்தன் மறுசந்துக்குள் ஓடினுன்....! ரோந்து சுற்றிக் கொண்டிருந்த போலீஸ்காரன் ஆனந்தனை ஒரு திருடன் என்று எண்ணிவிட்டான். எனவே, அவனும் பின் தொடர்ந்து ஓடினுன். அதற்குள் ஆனந்தன் வேருெரு சந்துக்குகள் நுழைந்து அங்கிருந்த ஒருவீட்டுத்திண் ணையின் மேல் ஏறித் திண்ணைச் சுவருடன் ஒட்டினுற்போல

நின்று கொண்டான். துரத்தி வந்த போலீஸ்காரன். அந்தச் சந்தையும் தாண்டி, அடுத்த வீதிக்குத் திரும்பும் அந்தச் சந்தின் முனையில் வந்து நின்றுகொண்டு அங்கு மிங்கும் பார்த்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் ஆனந்தன் நின்று கொண்டிருந்த திண்ணை வீட்டுக்கு முன்னுல் நின்று, இருண்டு கிடந்த அந்தத் திண்ணையின் பக்கம், தன் கையிலிருந்த 'டார்ச்லைட்'டால் வெளிச்சத்தைப் பாய்ச்சினுன்....! அதேகணம், "ஆனந்தனு...." என்று கூவியே விட்டான் அந்தக் கான்ஸ்டபிள். ஆனந்தனைத் தெரியாத போலீசார் மதுரை நகரிலே ஒருசிலர்தான் இருப்பார்கள். அந்த அளவுக்கு போலீஸாருக்கு அறிமுகமானவன். அவனைப்பின் தொடர்ந்து வந்த போலீஸ்காரனும் அவனை நன்ருக அறிவான். எனவே தான் அப்படிக் கூச்சலிட்டான்.

ஆனந்தன், மறுவிநாடி அடுத்த திண்ணைக்குப் பாய்ந்தான். மறுகணம் ஒரே தாவு அடுத்த சந்துக்குள். போலீஸால் அவனைப் பின் தொடரமுடியவில்லை. உடனே விசிலைவாயிலே வைத்து தன் முழுப் பலம் கொண்ட மட்டும் ஊதினுன். அந்த விசில் சப்தம் ஒவ்வொரு சந்தாக நுழைந்து சென்று கொண்டிருந்த ஆனந்தனின் காதில் நன்ருக விழுந்தது. அவன் இன்னும் வேகமாக ஓடினுன்; ஓடிக் கொண்டேயிருந்தான்.

நேரம் போய்க் கொண்டே யிருந்தது.

அது ஒரு நாற்சந்தி. அந்த இடத்துக்கு வந்து நின்ருன். ஆனந்தனுக்கு மேல் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. வியர்வை ஒழுகிக் கொண்டிருந்தது. மறுகணம், ஒரு காரின் ஹார்ன் சப்தம் கேட்டது. அதை அடுத்து பிரேக் போடும் சப்தமும் கேட்டது. நாலைந்து போலீஸ்காரர்களும், ஒரு இன்ஸ்பெக்டரும் வேகமாக இறங்கினுர்கள். அவர்களைப் பார்த்து விட்

டான்; ஆனந்தன். மின்னலைப் போல் மறைந்தான் அந்த இடத்தை விட்டு.

தலை தெறிக்க ஓடிக்கொண்டிருந்த ஆனந்தனுக்கு முன்னுல் ஒரு குறுகிய தெரு தெரிந்தது. அதற்குள் இறங்கினுன் தன்னைத் துரத்திவரும் போலீஸ்காரர்களின் காலடிச் சப்தம் அவன் காதில் விழுந்தது. விழிகளை எதிரே பாயவிட்டான். அந்தக் குறுகிய தெருவுக் குள்ளே நீண்டு நிமிர்ந்திருந்தது ஒரு பெரிய மாளிகை. அதன் கேட் திறந்திருந்தது. அதற்குள்ளே பாய்ந்து விட்டான், காலடிச் சப்தம் இன்னும் அருகில் கேட்டது. அங்கு நிற்கவும் விரும்பவில்லை. அந்த மாளிகையின் முன் காம்பவுண்டுக்குள்ளிருக்கும் பாதை வழியாக மாளிகையின் பின் பக்கம் ஓடினுன். அந்த மாளிகைக்கு முன்னுல், தெரு வீதி இருந்தது அங்கே நின்று கொண்டிருந்த போலீஸின் 'விசில்' சப்தம் காதில் விழுந்தது ஆனந்தனுக்கு. தன்னுடைய நிலையை அப்போதுதான் உணர்ந்தான். 'தப்ப முடியாது....மாட்டிக் கொண்டோம்!'—என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். என்ருலும் அவன் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. மாளிகையின் மறுபுறத்தில் ஒரு கதவு தெரிந்தது. அதை நோக்கி ஓடினுன். அந்தக் கதவு, பின்புறமாக மாடிக்குச் செல்லும் வழி. ஆனந்தன் அந்தக் கதவைத் தள்ளினுன். அது பூட்டப்படாமலிருந்ததால் திறந்து கொண்டது. உடனே பாய்ந்தான் உள்ளே. 'விறு விறு'—என்று மாடிப்படியில் ஏறினுன். "நான் அவர்கள். கையிலகப்படக் கூடாது, நான் அவர்கள் கையிலகப்படக் கூடாது" என்று ஒருவித துடிப்பு அவன் உள்ளத்தில் ஏறி நிற்க, எங்கே போகிருேம் என்பதைக் கூடக் கவனியாமல், விறு விறு என்று மேல் மாடிக்கு வந்து, அங்கிருந்த ஒரு அறைக்கதவைத் தள்ளினுன்.

அதுவும் திறந்து கொண்டது. உடனே உள்ளே போய் கதவைத் தாளிட்டுவிட்டுத் திரும்பினான். அறை ஒரே இரு ளாக யிருந்தது. மெல்ல, மெல்ல நடந்து வந்தான். கையில் ஏதோ தட்டுப் பட்டது. அதைத் தொடர்ந்து 'டங்' கென்று ஒரு பேரொலி எழுந்து அறை யெங்கும் பரவி நின்று மறைந் தது. ஆனந்தன் திடுக்கிட்டு விட்டான். இதே சமயத்தில் "யார் அது?"—என்று கேட்டுக்கொண்டே யாரோ பரபரப் புடன் எழுந்தது தெரிந்தது. மறு விநாடி 'பளிச்' சென்று மின்சார விளக்கு அறையெங்கும் ஒளியைப் பாய்ச்சியது. மறு கணம் "நீயா....?"—என்ற கேள்வியுடன் சிலைபோல் நின்று விட்டான் ஆனந்தன்.

இரவு உடுப்பும், கலைந்த தலைமயிரும் இதயத்தில் ஏறி நிற்கும் திகிலை எடுத்துக் காட்டும் விழிப் பார்வையும் கொண்டு அங்கு நின்று கொண்டிருந்தாள் வாஸந்தி.

வியர்வையால் அணிந்திருந்த ஷர்ட் நனைந்திருப்பதோடு முகத்திலும் வியர்வைத் துளிகள் அரும்ப மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க திகைப்புடன் நின்று கொண்டிருந்த ஆனந்தனைக் கண்டதும், ஆச்சர்யமும், அதிர்ச்சியும் கொண்டவளாய் அவ னையே பார்த்துக் கொண்டு அப்படியே நின்று விட்டாள் வாஸந்தி.

ஆனந்தன் தன்னுணர்வு பெற்றவனாய், "சே' இவ்வளவு சிரமப்பட்டு இங்கேயா வந்து சேர்ந்தேன்!" என்று கூறிக் கொண்டு தெருவை நோக்கி நடந்தான்.

"நில்லுங்கள்.... போகவேண்டாம்..." என்றாள் வாஸந்தி. சப்தம் வந்ததும் திரும்பினான் ஆனந்தன். அவன் விழிகளில் கேள்விக் குறி நின்றாடியது.

"தயவு செய்து போகாதீர்கள்....இதோ வந்து விடுகி றேன் என்று கூறிவிட்டு, அடுத்த அறைக்குள் ஓடினுள்.

ஆனந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. போலீசாரிடம் காட்டிக்கொடுக்கத்தான் ஓடுகிருளோ என்று ஒரு கணம் நினைத் தான். 'சே' அப்படிச் செய்யமாட்டாள்...! என்ற ஒரு நம்பிக் கையுடன் தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆனுல், அவன் சோபாவில் வந்து அமராமல், கதவின் அருகிலேயே நின்று கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடங்கள் சென்றிருக்கும். இரவு உடுப்புகளைக் களைந்துவிட்டு சாதாரண பகல் உடையுடன் அங்கு வந்தாள் வாஸந்தி.

"ஏன் நின்றுகொண்டிருக்கிறீர்கள்? இப்படி வந்து உட்கா ருங்கள்!"—என்ருள்.

ஆனந்தன் உட்காரவில்லை. ஏதோ யோசித்துக்கொண்டு கதவின் அருகிலேயே நின்று கொண்டிருந்தான்.

"பயப்படாதீர்கள் ஆனந்தன். நீங்கள் எந்த நிலைமையில் இந்த அறைக்குள் நுழைந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். போலீஸார் இங்கு வரமாட்டார்கள்"

"பயப்படாமல் வந்து உட்காருங்கள்....!"—என்ருள்.

ஆனந்தன், அப்படியே நின்றுகொண்டிருந்தான். வாஸந்தி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவளுடைய விழிகளில் கண்ணீர் தேங்கியது ஏனே!

"நான் காட்டிக் கொடுத்து விடுவேன் என்று பயப்படுகி றீர்களா ஆனந்தன்....? என்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லா விட்டால், தயவு செய்து இங்கிருந்து போய்விடுங்கள், ஆனுல் போலீஸாரின் கையில் சிக்கி விடாதீர்கள்!"—என்று கூறிக்

கொண்டே, அங்கே கிடந்த சோபாவில் 'தொப்பென' விழுந் தாள். அவளுடைய விழிகளில் தேங்கிநின்ற கண்ணீர் கன்னங்களில் வழியத் துவங்கியது.

மதுரையிலுள்ள உயர்நிலைப் பள்ளியொன்றில் ஆனந்தன் படித்துக்கொண்டிருக்கும்போது அவனுடன் ஒன்ருகப் படித் தவள் வாஸந்தி. ஆனந்தன் பத்தாவது வரை படித்துவிட்டு வெளியே வந்து விட்டான். வாஸந்தி, பத்தாவதுடன் நிற்கா மல், கல்லூரிப் படிப்புக்குச் சென்றுவிட்டாள். ஆனுல், அவன் உயர்நிலைப் பள்ளியில் இருந்தபோது, ஆனந்தன் அவள் இத யத்தில் இடம் பெற்றுக் கொண்டான். அவனுடைய உறுதியான உள்ளம், அறிவும் அன்பும் கொண்ட பேச்சு, துணிச்சலான செய்கை, ஆண்மையின் பிரதிபலிப்பான தோற்றம்—இவற்றை யெல்லாம் பார்த்துத்தான் வாஸந்தி தன் உள்ளத்தை அவன் வசம் பறிகொடுத்து விட்டாள் என்று சொல்வதைவிட, ஆனந் தனின் கவர்ச்சியான அந்த முகமும், இதயத்தை இழுத்துப் பிடிக்கும், அவனுடைய சிரிப்பும்தான் அவளை அதிகமாகக் கவர்ந்தன என்று சொல்லலாம். ஆனந்தனுடைய சிரிப்பிலே ஒரு கவர்ச்சியிருப்பதாகத் தோன்றிற்று வாஸந்திக்கு. அவன் வகுப்பிலே சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருப்பான். அந் தச் சிரிப்பிலே தன் உள்ளத்தைப் பறிகொடுத்து அவன் முகத் தையே பார்த்துக் கொண்டிருப்பாள் வாஸந்தி.

வாஸந்தி ஒரு நாளாவது தன்னுடைய உள்ளத்தில் ஓடித் திரியும் எண்ணங்களை ஆனந்தனிடம் சொன்னதில்லை.

கல்லூரிக்குச் சென்ற பிறகும், ஆனந்தனை மறக்கவில்லை. அவன்மேல் இருந்த பற்றுதல் இன்னும் வளர்ந்தது. இதே வேதனையில் அவன்மேல் வருத்தமும் ஏற்பட்டது. ஆனந்தன் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டு, தன் தந்தையைப் போன்ற

வர்களை யெல்லாம் எதிர்த்துக் கொண்டிருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. 'இவர் ஏன் இந்த விதமாக நடந்து கொள்ள வேண்டும்? பெரிய மனிதர்களை யெல்லாம் பகைத்துக் கொள்ளவேண்டும்?'—என்று எண்ணுவாள்.

கோடைகாலம். உல்லாசத்துக்காகக் கொடைக்கானலுக் குச்சென்ருள் வாஸந்தி. ஆனந்தனும், ஏதோ ஒரு வேலையாக அங்கு போயிருந்தான். அப்போது இருவரும் சந்தித்து விட்டார் கள். வாஸந்தி, தான் தங்கி இருக்கும் ஹோட்டலுக்கு வரும் படி அவனை வற்புறுத்தினுள். ஆனந்தனுக்கு விருப்பமில்லை. என்ருலும், அவளுடைய மனம் புண்படும் என்று எண்ணியவ ஞய் அவளுடன் சென்ருன்.

அறைக்கு வந்து சேர்ந்ததும் ஆனந்தன் நடந்து செல் லும் பாதை தப்பு என்றும் பெரிய மனிதர்களையெல்லாம் பகைத்துக் கொள்ளக் கூடாதென்றும் ஏதேதோ அறிவுரை கள் கூறத் துவங்கினுள்.

ஆனந்தனுக்குச் சிரிப்புதான் வந்தது. சிரித்து விட்டான். அந்தச் சிரிப்பைக் கண்டதும் தான் கூறிய அறிவுரைகளைக் கூடச் சில நிமிடங்கள் மறந்து விட்டாள்.

"வாஸந்தி..., என்மேல் ஏன் இவ்வளவு அக்கறை?" என்ருன், ஆனந்தன்.

வாஸந்தி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு தனது விழிகளைத் தரையில் தாழ்த்திக்கொண்டு சில நிமிடங்கள் மௌனமாக இருந்தாள். கொஞ்சநேரத்திற்குப் பிறகு: அவ ளுடைய அதரங்கள் விரிந்தன.

"நான் உங்களை.... உங்களைக் காதலிக்கிறேன்....!"

ஆனந்தனுக்கு 'ஷாக்' அடித்ததுபோலிருந்தது. ஒரு கணம் அப்படியே அவளை ஊடுருவிப் பார்த்தான். பிறகு,

"என்னைக் காதலிக்கிருயா வாஸந்தி?" — என்று ஒரு கேள்வியை வீசினுன்.

'ஆமாம்' என்று தலையை அசைத்தாள் அவள்.

"நீ தோல்வியடையப் போகிருய் வாஸந்தி!"

அவள் கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தாள்.

"ஆம் நிச்சயம் தோல்வியடையப் போகிருய். என்மேல் உள்ள காதலை வாபஸ் வாங்கு. உன்னுல் காதலிக்கப்பட வேண்டியவன் நானல்ல, என்னைவிட அழகில் சிறந்தவர்கள்: படிப்பிலும், பணத்திலும் உயர்ந்தவர்கள்; உங்கள் முகாமிலே ஏராளமானவர்களுண்டு. அவர்களிலே ஒருவனைத் தேர்வு செய். அவன் மேல் உன்காதலைச் செலுத்து, வெற்றி யுண்டு. ஆனுல், நான் எந்த ஒரு அம்ஸத்திலும், உனக்கு தகுதி வாய்ந்தவனல்ல....! குலத்தால், பணத்தால், படிப்பால், அந்தஸ்தால்—எதிலுமே நான் உன் சம எடையுடையவனல்ல. அது மட்டுமல்ல, உன்னுடைய முகாம்வேறு. என்னுடைய முகாம் வேறு. சுருக்கமாகச் சொன்னுல் நாம் இருவரும் இரு துருவங்கள், எல்லாவற்றிலும், ஆகவே, நீ என்னைக் காதலிக்க வேண்டாம் என்று தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.!"

ஆனந்தனின் இந்தக் குட்டிப் பிரசங்கத்தைக் கேட்டதும், வாஸந்திக்கு வேதனையாகவும், வேடிக்கையாகவுமிருந்தது.

"ஏன் இப்படியெல்லாம் சொல்கிறீர்கள் ஆனந்தன்? நான் உங்களைப் பற்றித் தாழ்வாக நினைத்தால், உங்களை விரும்பு வேனு? ஆனந்தன். காதலுக்கு சாதி, அந்தஸ்து எதுவுமே

தெரியாது. எனவே எனக்கு அதைப்பற்றி யெல்லாம் எண்ணிப்பார்க்க முடியவில்லை. உங்கள் உருவம், உங்களுடைய பேச்சு இவைகளைத்தான் நான் நினைத்துப் பார்க்கிறேன்....!"

"வாஸந்தி, இப்போது சொன்னாயல்லவா? அது உண்மைதான்; காதலுக்கு ஒன்றுமே தெரியாதுதான். காதல் என்பது ஒரு குழந்தையைப் போன்றது. ஒரு குழந்தைக்குத் தன்னைப் பற்றியோ, சுற்றி நடக்கும் நிகழ்ச்சியைப் பற்றியோ என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாது! ஆனால் தன்மனதில் எது பட்டதோ அதைச் செய்யும்! அதுபோன்றதுதான் காதலும். எனவேதான் நீயும் ஒன்றையும் சிந்திக்காமல் மனதில் என்ன தோன்றிற்றோ, அதைச் செய்கிறாய், பேசுகிறாய்....! ஆனால் நான் அப்படியிருக்க முடியாது, வாஸந்தி...,! என்னை மறந்துவிடு....!"

இப்படிச் சொல்லிவிட்டு வந்துவிட்டான். அவன் போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள் வாஸந்தி. தனது காதலை உதறித் தள்ளிவிட்டுப் போவதைக் குறித்து அவள் ஆனந்தன் மீது வெறுப்புக் கொள்ளவில்லை. மாறாக, இன்னும் அதிகப் பற்றுதல் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வருஷத்துக்கு மேலாகிவிட்டது. இப்போதுதான் அவனைச் சந்தித்திருக்கிறாள் வாஸந்தி. அவனைப் பலதடவைச் சந்திக்க எண்ணினாள். தலைமறைவாக இருக்கும் அவனை எப்படிப் பார்ப்பது? ஆனால் இன்று பார்த்துவிட்டாள்....!

வாஸந்தியின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைக் கண்ட ஆனந்தனுக்கு என்னவோ போலிருந்தது. பேசாமல் வந்து வாஸந்திக்கு எதிரேயிருந்த சோபாவில் அமர்ந்தான்.

வாஸந்தி, தன் விழிகளில் உள்ள கண்ணீரைத் துடைத்து விட்டு, "ஏன் இப்படியெல்லாம் பயந்து, திரியவேண்டும்? உங்கள் இரும்புபோன்ற உடம்புகூட துரும்பாகி விட்டதே...!" —என்ருள் அனுதாபம் தொனிக்க.

ஆனந்தன் ஒன்றுமே பேசவில்லை. ஆனுல் வாஸந்தி மேலும் தொடர்ந்தாள்.

"உங்களைச் சந்தித்து ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது. இந்த இடைக்காலத்தில் உங்களை நினைத்துப் பார்க்காத நாளே கிடையாது. கொடைக்கானலில் சந்தித்தபோது, எனது உள்ளத்தைத்திறந்து காட்டினேன். உங்களை மறந்துவிடும்படி சொன்னீர்கள். ஆனுல் மறக்க முடியவில்லை. உங்களைப்பற்றி இன்பக் கனவுகள் பல கண்டு கொண்டிருக்கிறேன்....!"

அப்போதும் மௌனமாக இருந்தான் ஆனந்தன்.

"என்மீது உங்களுக்குக் காதலே இல்லையா...?" உடைந்து நொறுங்கிய தொனியுடன் ஓடிவந்தது இந்தக் கேள்வி.

ஆனந்தன் அவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மீண்டும் சிரித்தான். "வாஸந்தி, நீ படித்தவள். ஆகவே, நான் சொல்வதைப் புரிந்து கொள்வாய், சிந்திப்பாய்—என்று நம்புகிறேன். என்னை மறக்கமுடியாமலிருக்கலாம். என்னைப் பற்றி இனிய கனவுகள் கண்டு கொண்டிருக்கலாம். உண்மைதான். உனக்கு ஒரு கவலையுமில்லை. எதைப்பற்றிச் சிந்திக்கவும் அவசியமில்லை. ஆனுல், நான் இந்த நாட்டைச் சிந்திக்கிறேன். இந் நாட்டிலே வாழும் கோடிக் கணக்கான மக்களின் வேதனை நிறைந்த வாழ்வைப் பற்றிச் சிந்திக்கிறேன். அந்த வேதனை வாழ்விலிருந்து அவர்களை மீட்பதற்கான எனது இலட்சியத்தைப் பற்றிச் சிந்திக்கிறேன். உயிரினும் மேலாக மதிக்கும், எனது கட்சியைப்

பற்றிச் சிந்திக்கிறேன். அந்தக் கட்சியிடும் கட்டளைகளைப்பற் றிச் சிந்திக்கிறேன். இந்த நிலைமையில் உன்னைப்பற்றிச் சிந் திக்க எப்படி முடியும்? சுருக்கமாகச் சொன்னால், உன்னைப் பற்றி நினைக்கவோ, உன்மீது காதல் கொள்ளவோ எனக்கு நேரமில்லை! காதல், கலியாணம் — இவைபற்றி நான் நினைப்ப தில்லை. நினைத்திருந்தால், தலைமறைவாக நான் திரிய அவசிய மில்லை, தாய் தங்கையை அபாயச் சூழ்நிலையில் தன்னந் தனியே தத்தளிக்கவிட அவசியமில்லை....!''

இப்படிப் பேசிக் கொண்டு வந்தவன், வாஸந்தியின் தந்தை சுந்தரம்பிள்ளை காஞ்சனவையும், அம்மாவையும் கடத் திக்கொண்டு வந்ததை நினைத்துக் கொண்டான். இது விஷயம் வாஸந்திக்குத் தெரியுமா என்று யோசித்தான் ஒருகணம். ஆனால், அவளுடைய பேச்சு, முகபாவனை இவற்றிலிருந்து அவளுக்கு ஒன்றும் தெரியாதென்று முடிவு செய்து கொண்டான். இந்த விஷயத்தை வாஸந்திக்குச் சொல்லலாமா என்று எண்ணி னன். 'சே' சொல்லக் கூடாது. சொன்னால், வாஸந்தி திடுக் கிடுவாள். இதன் விளைவு, வாஸந்தி அறைக்கு வெளியே ஓடு வாள், மாளிகை எங்கும் சுற்றிப்பார்ப்பாள். அப்போது சுந்தர ரின் கண்களுக்குக் காட்சி யளிப்பாள்.... முடிவில், நான் இந்த அறைக்குள்ளேயே அடைபட்டுப் போலீஸாரின் கையில் சிக்கவேண்டி வந்துவிடும்—வேண்டாம். வாஸந்திக்குத் தெரிய வேண்டாம்—என்று பல எண்ணினன்.

பேசிக் கொண்டே வந்த ஆனந்தன் திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டதைக் கண்ட தும், ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றாள் வாஸந்தி.

''ஒன்றுமில்லை!'' என்றான்.

"என் அப்பா உங்களைப் பகைவனுகக் கருதுகிருர். இந்த நிலையில், நான் உங்களுக்கு எப்படி மனைவியாக முடியும் என்று சிந்திக்கிறீர்களா?"

"இல்லை!"

"உங்களுடைய மனப்போக்குக்கு ஒத்த முறையில் நான் நடக்க முடியாது என்று எண்ணுகிறீர்களா?"

"இல்லை! நான் உன்னைப்பற்றிச் சிந்திக்கவே யில்லை. என்றுலும், இப்போது நீ சொன்னதில் உண்மை யிருக்கிறது. என்னுடைய வாழ்க்கை, ஒரு நெருப்பாறு. அந்த நெருப்பாற்றில் நான் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருக்கிறேன். என்னுடன் நீ நீந்த முடியாது. வாஸந்தி, எனக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யலாம் என்று நீ எண்ணலாம். ஆனுல், அப்படிச் செய்ய உன்னுல் முடியாது. சுகமான சூழ் நிலையில், கஷ்டம் தெரியாது, கவலைதெரியாது வாழ்ந்து வந்தவள். இன்பமும், சந்தோஷமும்தான் உன்னுடைய வாழ்க்கையாக யிருந்திருக்கிறது. இவற்றிலே வளர்ந்த உனது மனுேபாவத்தை மாற்றுவது எளிதல்ல. உன்னுடைய எண்ணங்களை மாற்றுவது எளிதானதல்ல. மாளிகை வாசம், பணம், தந்தை—இவற்றையெல்லாம் தியாகம் பண்ணுவது லேசானதல்ல. அப்படித்தான் செய்தாலும், என்னிடம் நீ எதிர்பார்க்கும் இன்பத்தை அனுபவிக்க முடியாது, கஷ்டமும், வறுமையும் கொண்ட என்னுடைய வாழ்க்கையில் நீ சந்தோஷத்தைக் காணமுடியுமா?"

"காதல் பாதை கரடுமுரடானது, கஷ்டம் நிறைந்தது என்பதை நான் அறிவேன் ஆனந்தன்!"

"மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு, கதைகளிலே இருப்பதைப் பார்த்து அப்படிச் சொல்கிருய் வாஸந்தி, அறிந்திருப்ப

தற்கும், சொந்தமாக அனுபவிப்பதற்கும் நிறைய வித்தியாச மிருக்கிறது. தவிரவும், காதல் வாழ்க்கை கஷ்டம் நிறைந்ததாக இருக்கக்கூடாது. களிப்புள்ளதாக இருக்க வேண்டுமென்று நினைப்பவன் நான். காதல் கொள்வது எதற்காக? மனமொத்த ஒருவனுடன் வாழ நினைப்பது எதற்காக? வேதனைப்படவா? கஷ்டப்படவா? மனம் வருந்தவா? — இல்லை. மகிழ்ச்சியாக இருப்பதற்கு, சந்தோஷமாக, அமைதியாக இருப்பதற்கு! என்னை மணந்து கொண்டால் இவை கிடைக்காது. ஏமாற்ற மடைவாய். உன் உள்ளம் உடைந்துவிடும்....! ஆகவே நீ என்னை மறந்துவிடு!''

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது ''வாஸந்தி....! வாஸந்தி....!'' என்று கதவைத் தட்டும் சப்தம் கேட்டது! ஆனந்தன் திடுக்கிட்டெழுந்தான்.

''யார் வாஸந்தி....!''

''அப்பா.... நீங்கள் இங்கே வாருங்கள்... ம்... சீக்கிரம்...! என்று சொல்லிக் கொண்டே தன் கட்டிலண்டை ஓடினாள்.

''இதோ இந்தக் கட்டிலுக்குக்கீழே, ஒளிந்து கொள்ளுங் கள்!'' — என்று பரபரப்புடன் சொன்னாள். ஆனந்தனுக்கு எதையும் யோசித்துப்பார்க்க நேரமில்லை. உடனே அந்தக் கட் டிலுக்குக் கீழே ஒளிந்து கொண்டான்.

வாஸந்தி அடுத்த அறைக்குள் சென்று தனது படுக்கை உடையை அணிந்து கொண்டாள். மறுகணம், தூக்கத்தால் விழித்தெழுந்ததுபோல் கதவைத்திறந்து. என்னப்பா...? என்று கேட்டுக் கொண்டே கண்களைச் சொக்கினாள்.

''ஒன்றுமில்லை வாஸந்தி....!'' என்று கூறிக்கொண்டே உள்ளே போனார் சுந்தரம்பிள்ளை. மறுவினாடி அவரைத்

தொடர்ந்து ஒரு இன்ஸ்பெக்டரும் நாலைந்து போலீஸ்காரர்களும் உள்ளே நுழைந்தார்கள். வாஸந்தி, திடுக்கிட்டுவிட்டாள் நெஞ்சிலே திகில் ஏறிநிற்க அவர்கள், என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

இன்ஸ்பெக்டரும் போலீஸ்காரர்களும் அந்த அறையை நன்றாகச் சோதனை போட்டார்கள், ஒரு இடம் பாக்கியில்லாமல் பார்த்தார்கள்.

இன்ஸ்பெக்டர், சுந்தரம்பிள்ளையின் பக்கம் திரும்பினார். "ஆசாமி இங்குமில்லை.... ஆனால் நிச்சயமாகச் சொல்கிறேன் இந்த மாளிகைக்குள்தான் இருக்கிறான்!" — என்று கூறிக் கொண்டே வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து சுந்தரம் பிள்ளையும் மற்றவர்களும் வந்தார்கள்.

வாஸந்தி கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, கட்டிலை நோக்கி ஓடினாள். ஆனந்தனும் வெளியே வந்து விட்டான்.

"வாஸந்தி, உனக்கு எனது நன்றி, இனியும் நான் இங்கிருந்தால் போலீஸாரின் கையில் சிக்கிவிடுவேன்! நான் வருகிறேன்.....!"—என்று கூறிக்கொண்டே அந்த அறையை விட்டு கீழே வேகமாக இறங்கினான். அவன் போன திக்கையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் வாஸந்தி. அவள் விழிகளில் கண்ணீர் தேங்கிற்று,

ஆனந்தனைத் துரத்திக் கொண்டுவந்த போலீஸார், அவன் சுந்தரரின் மாளிகைக்குள் நுழைந்ததைப் பார்த்துவிட்டார்கள். எனவே மாளிகைக்குள் சென்று, சுந்தரரிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "பயல் இன்று அகப்பட்டுக் கொண்டான்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார், போலீஸாருக்கு மாளிகையில் ஒரு இட-

மில்லாமல் காட்டினுர். ஆனந்தனைக் காணும். கடைசியாகத் தான், வாஸந்தியின் படுக்கை அறைக்கு வந்தார்கள். அங்கும் அவனைக் காணுததால், இறங்கி, பின்பக்கமாக வந்தார்கள். இதேசமயத்தில் ஆனந்தனும் பின்னுல் உள்ள மதிற் சுவரின் மேல் ஏறிக் கொண்டிருந்தான். போலீஸார் வருவதை அவன் கவனிக்கவில்லை. "அதோ....! அதோ....!—என்று கூவினுன் ஒரு கான்ஸ்டபிள், மறுகணம்—

ஆனந்தன் அகப்பட்டுக் கொண்டான். அவன் கையில் விலங்கு. கொஞ்ச நேரத்திற்குள் மாளிகையின் உள் ஹாலுக் குக் கொண்டு வரப்பட்டான் ஆனந்தன். எல்லோரும் உட் கார்ந்தார்கள். ஆனந்தன் கையில் விலங்குடன் நின்று கொண் டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து பார்த்தார் ஆனந்தனை. ஒரு அலட்சியமும், பிடித்துவிட்டோம் என்ற பெருமிதமும் குடி கொண்டிருந்தது, அவருடைய முகத்திலே.

"எனக்குத் தெரியும்—இங்குதான் இவர் பதுங்கியிருக்கி ருர் என்று!"—என்ருர் இன்ஸ்பெக்டர்.

"எனக்கும் தெரியும். ஒரு ராத்திரியில்தான் ஆசாமி அகப்படுவானென்று, ஏனென்ருல் பகல்தான் இவர்களுக்கு எதிரியாயிற்றே. என்றைக்கோ ஒரு இரவு—அந்த இரவு—நான் **எதிர்பார்த்த** அந்த **இரவு** இன்று வந்துவிட்டது. அதுவும் என் மாளிகையில் அகப்பட்டுக் கொண்டது....!" என்று வாக்கி யத்தை முடிக்காமலே மெதுவாகச் சிரித்தார், சுந்தரர். அந்தச் சிரிப்பு ஆனந்தனைக் கேலிசெய்வது போலிருந்தது. அவனுக்கு ஆத்திரம் குமுறியது. காஞ்சனுவையும், அம்மாவையும் நினைக்கும் போது சுந்தரர்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து

அவருடைய மென்னியைத் திருகிவிடுவோமா? ஆத்திரம் தீர மட்டும் அவன்மேல் சொல்மாரி பொழிவோமா?—என்றெல்லாம் எண்ணினன். ஆனல் அவனுக்கு வார்த்தைகளே வர வில்லை!

கீழே பேச்சுச் சந்தடி கேட்டுத் திடுக்கிட்டவளாக அறையைவிட்டு ஓடிவந்தாள் வாஸந்தி. கையில் விலங்குடன் ஆனந்தனும் அவனைச் சுற்றி மற்றவர்களும் நின்று கொண்டிருப்பதைச் சில விநாடிகள் ஆடாமல், அசையாமல் பார்த்துக் கொண்டு நின்ருள். அவள் அதரங்கள் துடித்தன. விழிகளில் நீர் தேங்கி நின்று, பிறகு, கன்னங்களில் உருளத் துவங்கியது. அதற்குமேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. முகத்தைத்தன் கரங்களால் மூடிக் கொண்டே உள்ளே ஓடினாள்.

* * * *

## 8. ஆச்சர்யமும் ஆனந்தமும்

"காஞ்சனுவின் அம்மாவிடம் இரண்டு வாரங்களில் வருவதாகச் சொல்லி விட்டு வந்தோம். ஒருமாசத்துக்கு மேலாகிவிட்டது. என்ன நினைப்பார்களோ—! ஒருவேளை ஆனந்தனை அங்கு ச ந் தி க் க ல ா ம்!" என்ற எண்ணத்துடன் அன்று அழேகேசன் புறப்பட்டு விட்டான் மதுரைக்கு.

சோழபுரத்துக்கு வந்ததும், காஞ்சனுவின் வீட்டுக்குச் சென்ருன். காலிவீடுதான் அவனை வரவேற்றது. அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் விசாரித்தான். தங்களுக்குத் தெரியாதென்ருர்கள் அவர்கள். அவனுக்கு ஒரே குழப்பமாகி விட்டது. எங்கே சென்றிருப்பார்கள்? அப்படிப் போனலும் எனக்கு அறி

வித்திருப்பார்களோ?—ஆனந்தன் வந்து வேறு எங்கேயாவது அழைத்துக் கொண்டு போயிருப்பானே?—என்று பல எண்ணங்களும், சந்தேகங்களும் அவன் உள்ளத்தில் எழுந்தன. அன்றைக்கே சோழபுரத்திலிருந்து மதுரைக்கு வந்து விட்டான்.

அன்று சாயங்காலம், மதுரை ரீகல் தியேட்டருக்கு முன்னால் பலத்த சிந்தனையில் நின்று கொண்டிருந்தான் அழகேசன். பஸ் ஸ்டாண்ட் பக்கமிருந்து மெதுவாக வந்த ஒரு கார் அவனை நெருங்கியதும், சட்டென்று நின்றது.

"என்ன, அழகேசா இங்கே நின்று கொண்டிருக்கிறாய்?" —என்று கேட்டுக் கொண்டே காரிலிருந்து இறங்கினார் சுந்தரம் பிள்ளை.

அந்த இடத்தில், அந்த வேளையில், அவரைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை அழகேசன். எனவே, ஒருகணம் திகைத்தான். மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "சும்மா நின்று கொண்டிருக்கிறேன்!" என்றான்.

"அப்படியா.... சரி, ஏறு,.... வீட்டுக்குப் போவோம்!" என்றார் சுந்தரர்.

அழகேசனுக்கு போக விருப்பமில்லை. பல சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டிக் கழித்தான். ஆனாலும் சுந்தரர் விடவில்லை. வற்புறுத்தி அவனைக் காரில் ஏற்றிக் கொண்டு தன் பங்களாவுக்கு வந்துவிட்டார்.

"அழகேசா, சிங்கப்பூரிலிருந்து வந்ததற்குப் பின் ஒரு தடவைகூட நான் சந்திக்கவில்லை. நீயும் இங்கு வரவில்லை, உன்னைப்பார்க்க, பல முறை உன் வீட்டுக்கு வந்தேன். ஆனால் உன்னைக் காணவில்லை. அப்பா, எல்லாம் சொல்லி யிருப்பாரென்று

நினைக்கிறேன். இனியும் நாட்களைக் கடத்திக் கொண்டு போவது நல்லதல்ல, இந்த மாதத்திலேயே நல்ல முகூர்த்த மிருக்கு. கலியாணத்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டியது தான். நானும், வாஸந்தியும் இந்த வாரம், உங்க வீட்டுக்கு வர இருந்தோம்!"—என்று ஏதேதோ எல்லாம் சொன்னார்.

அழகேசனுக்கு அவருடைய பேச்சு வெறுப்பாக இருந்தது. என்றாலும் என்ன செய்வது என்று தெரியாமல் பேசாமலிருந் தான். இதேசமயம் படியிலிருந்து வாஸந்தி இறங்கி வந்தாள்.

சுந்தரம்பிள்ளை இருவரையும் அறிமுகப் படுத்தி வைத் தார். இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் பார்த்துக் கொண் டார்கள். 'வாஸந்தி அழகான பெண்தான்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அழகேசன். வாஸந்தி, மரியாதைக்கு இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு எழுந்து சென்று விட்டாள். அவளுடைய சிந்தனை யெல்லாம், ஆனந்தன் மீதிருந் தது. எனவே, அழகேசனைப்பற்றி ஒரு எண்ணமும் அவள் மனதில் எழவில்லை.

அழகேசனை அன்று இரவு தங்கும்படி வற்புறுத்தினார் சுந்தரம்பிள்ளை. அழகேசனுக்கு எரிச்சலாகத்தானிருந்தது. என்றாலும் தங்கிவிட்டான்.

அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. தோட்டத் துப் பக்கம் உலவிக் கொண்டிருந்தான். அவனுடைய எண் ணம் பூராவும் காஞ்சனாவின்மேல் தானிருந்தன. கொஞ்ச நேரம் சென்றிருக்கும், தோட்டத்தின் மதிற்சுவருக்குப் பக்கத் திலிருந்து யாரோ அழுத குரலில் பேசுவது கேட்டது. அது காஞ்சனாவின் குரல்போலிருந்தது. உடனே ஓடினான் சுவர்ப் பக்கம், ஒருவரையும் காணோம். சுவரின்மேல் ஏறினான்.

சுவரில் ஏறிய அழகேசன் அடுத்த பக்கம் பார்த்தான். சுவரைத் தாண்டி ஒரு சிறிய வீடு இருந்தது. அந்த வீட்டுக் குள்ளிருந்துதான் அந்தக் குரல் வந்தது. உடனே பாய்ந்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். அங்கே—

காஞ்சனு அழுது கொண்டிருந்தாள். கொஞ்ச தூரத் தில் நின்று கொண்டிருந்தார் சுந்தரர். இருவரையும் பார்த் ததும், அதிர்ச்சியால் அப்படியே நின்று விட்டான் அழகேசன். மறு கணம் "காஞ்சனு....!" என்று கூவியே விட்டான்.

சுந்தரம் பிள்ளையும், காஞ்சனுவும் திடுக்கிட்டுத் திரும்பி னர். அழகேசனை இருவருமே எதிர்பார்க்கவில்லை. எனவே. திகைப்புற்று நின்று விட்டனர். சுந்தரருக்கு அங்கு நிற்பது என்னவோ போலிருந்தது. உடனே அங்கிருந்து சென்று விட்டார்.

காஞ்சனுவிடம் விஷயத்தை விசாரித்தான் அழகேசன் சுந்தரம் பிள்ளையைப் பற்றி விவரமாகச் சொல்லிவிட்டு, "ஒரு நாளிரவு நானும் அம்மாவும் தூங்கிக் கொண்டிருக்கும் போது சுந்தரர் தன் கையாட்களைக் கொண்டு தன்னையும் அம்மாவை யும் தூக்கிக் கொண்டு வந்து இந்த இடத்தில் சிறை வைத்து விட்டார்கள். அம்மா அந்த நாலாவது அறையில் இருக்கிருள். "இன்று என்னைப் பலவந்தமாகவாவது கெடுக்க வேண்டும்!"— என்ற எண்ணத்துடன் இன்று வந்திருக்கிருர்....! நீங்கள் வராம விட்டால் என்ன நடந்திருக்குமோ?" என்று தேம்பினுள்.

சுந்தரம் பிள்ளையைப்பற்றி ஆனந்தன் சொல்லக் கேட் டிருக்கிருன் அழகேசன். இப்போது காஞ்சனுவும் சொன் னுள். அவருடைய செய்கையைக் கண்டதும் சீறி யெழுந் தது கோபம். உடனே காஞ்சனுவையும், பக்கத்திலறையில்

இருந்த செல்லம்மாவையும் கூட்டிக் கொண்டு மறு வழியாக சுந்தரம் பிள்ளையின் மாளிகைக்கு வந்தான். அங்கே சுந்தரர் ஏதோ பலத்த சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

"ஓய், கதர்ச் சட்டைக்காரரே!" என்று உறுமினன். அழகேசன்,

திடுக்கிட்டுத் திரும்பினர் சுந்தரர்.

"விழிக்காதீர்! உம்மைப் பற்றி நான் நன்ருக அறிந்து வைத்திருக்கிறேன். உமது மகளை நான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று மனப்பால் குடிக்கிறீர். அது நடக்காது. இதோ காஞ்சன! இவள் தான் என் மனைவி. இதை அறியாது, இவளைக் கெடுக்க முனைந்திருக்கிறீர். இவள் தாசி குலத்திலுள்ளவள் தானே என்று நீர் நினைக்கலாம். ஆனல், இன்று நீர் அறிந்து கொள்ளும், காஞ்சன அழகேசனின் மனைவி யென்று. இனியும், காஞ்சனவைப் பற்றி எண்ணுவதை மறந்துவிடும். என்னுடன் உமது கைவரிசைகாட்ட முற் பட்டால்—அப்புறம் என்ன ஆகும் என்பதைச் சொல்ல நான் விரும்பவில்லை!" என்று கோபம் கொப்பளிக்கக் கூறிவிட்டுக் காஞ்சனவையும் செல்லம்மாவையும் அழைத்துக் கொண்டு வெளியேறினன்.

சுந்தரம் பிள்ளை அசந்துபோய் உட்கார்ந்து விட்டார்.

இரண்டு நாட்கள் சென்று விட்டன. ஆனந்தன் கைதி யாகி விட்டதைப் பத்திரிகை மூலமாக அறிந்தான் அழகேசன். ஒரு நாள் காஞ்சனவையும், செல்லம்மாவையும் கூட்டிக் கொண்டு சிறைக்குச் சென்று ஆனந்தனைக் கண்டான். காஞ்

சனா நடந்ததை யெல்லாம் கூறினாள். அழகேசன், தன் தங்கையை மணக்க உறுதி கொண்டிருப்பதைக் கேட்டதும், மகிழ்ச்சிதாங்க முடியவில்லை. அழகேசனை அப்படியே கட்டிக் தழுவிக் கொண்டான். அவனுக்கு இன்ன தென்றே தோன்றவில்லை. ஒரே வாக்கியம் தான் ஆனந்தனிடமிருந்து வந்தது.

"அழகேசா, உன் நெஞ்சுரத்தைக் கண்டு நான் ஆச்சர்யப் படுகிறேன்.''—என்பது தான் அந்த வாக்கியம்.

ஒரு புன்னகையைச் சிதற விட்டு விட்டு, "உன்னைச் சந் திக்க எத்தனையோ இரவுகள் காத்திருந்தேன். **எதிர்பார்த்த** அந்த **இரவு**வரவில்லை. இன்று சிறையிலே, பகலிலே உன்னைக் கண்டேன்....!''—என்றான் அழகேசன்.

சென்னை 1

Jacket printed at Shanti Press, Madras - 1